உ

சிவமயம்.

பதினெண்சித்தர்கள்

திருவாய் மலர்ந்தருளிய

வைத்திய திரவுகோல்.

இஃது,

மைசூர், சமஸ்தானத்தில்

சோதிடம், வைத்தியம், இவையிரண்டிற்

தேர்ந்தவரான, ம-ா-ா-ஸ்ரீ, வீரோஜிராவ்

அவரிடத்திலும் இன்னும் சிலவைத்திய

ரிடத்திலும் தற்காலத்தில் கைக

ண்டுவரும் முறைகளை

கேட்டோங்கி

செஞ்சி,

ஏகாம்பரமுதலியாரவர்களால்,

எழுதிமுடிவுபெற்றதை

இரண்டாம் பதிப்பு.

காப்பி 1000.

இதன் விலை அணா. 0-8-0.

சிட்டத்தூர்,

செங்கல்வராய முதலியார்

அவர்களது

சென்னை:

சிற்றம்பலவிலாசம் பிரெஸ்ஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1902.

Registered Copyright.

கடவுள் துணை,

பதினெண் சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய.

வையித்திய திரவுகோல்.

முதற்பாகம் நாடியும்வகை.

விநாயகர் துதி.

விருத்தம்.

வைதியதிரவுகோலாய் வரைந்தவீரர்பாகத்தில்
எய்தியமுதற்பாகத்தை யெழில்புவியோர்கள்கண்டு
கைதனில்நாடிப்பாற்குங் காரணமறியநன்றாய்ச்
செய்திடதமிழ்க்குவோங்குஞ் செயகரிமுயவன்காப்பு.

முகவுரை - விருத்தம்.

மண்ணுலகின் மானிடர்கள் வாழவேண்டி
மகிமைபெரு மகஸ்த்தியர்காக் கேயரோடு
புண்ணியர் புலிப்பாணி புலத்தியர்போகர்
புஜண்டரொடு சட்டமுனி யிராமதேவர்
தண்மையுள்ளகாலாங்கி கருவூரார்பவந்தர்
தன்வந்திரிகலசமுனி போகர்மச்சர்
வண்மையாம்பிரமரிஷி கருணானந்தர்
வாதிமுதலிவரென்பேர் சித்தராமே
சித்தரென்றாலிவர்கள்செய்த கிரந்தங்களே
ஜெயமாகக்காண்பதற்கு லக்ஷங்கோடி
அத்தனையுந்தேடியே கைமுறையாய்க்கண்ட
அளவறிந்தபண்டிதரை யடுத்துவாங்கி
சித்தமாம்வையித்தியத் திரவுகோலில்
செப்பினேன்நாடிகுறி முதற்பாகத்தில்
யெத்திசையுஞ்செஞ்சிகவி விளங்கவேண்டி
யேகாம்பரமின்னூலை வெளியிட்டேனே.

நான்முகவிருத்தம்.

நாடியரியும் வகை.

கரிமுகனடியதனை கருத்தில்வைத்து
கையதனில்நாடியது பார்க்கும்போது

பெருவிரலின் விடைவிட்டு நடுவேதொட்டு
புகழாகமூன்றுவிர லூணிப்பார்க்கில்
ஒருவிரல்தானோடிட்டால் வாதமாகும்
உத்தமனேரெண்டோடில் பித்தமாகும்
திருவென்றமூன்றுவிரல் வோடில்சிலேத்மம்
திகைக்காமலறிந்துபிணி தெரிந்துசொல்லே.

(இதன்பொருள்.) விநாயகக்கடவுளை வாழ்த்தி துதிசெய்து வைத்தியரானவர்கள் நாடிப்பார்க்கும்போது ஆடவருக்கெல்லாம் வலது கையைப்பிடித்து பெருவிரலின் மணிக்கட்டினிடமாகப் பார்க்கையில் மூன்றுவிரலை நாடியின்மேல் ஊண அதில்வொருவிரல் ஓடுமாகில் வாதமென்று அறியவும் இரண்டுவிரல்வோடுமாகில்பித்தமென்றுஞ்சொல்லவும்மூன்றுவிரல்வோடுமாகில்சிலேத்மமென்றுதெரியவும்—ஏ-று.

அங்கையெனுங்கையுரிவி நெட்டைவாங்கி
அடவுடனேமேல்தூக்கி யப்பால்கேளு
செங்கையெனுமுன்கையால் பிடித்துமப்போ
சீராகநாடியது பார்க்கில்கேளும்
முன்கையில்பறந்துமே நாடிதானும்
மெள்ளெனவேதானடந்து வோடுமாகில்
தங்கியதுவாதமென்று நீயறிந்து
தைரியமாய்மருந்தீய்ந்துப் பிணியைநீக்கே

(இ-ள்.) கையைப்பிடித்துநாடிப்பார்க்கில் நாம்ஊன்றிய மூன்றுவிரலில் முதல்விரலானதில்தட்டிய நாடியானதுபரந்து மெள்ளவோடுமாகில் வாதமென்று அறிந்துகொள்வீர்கள்—எ-று.

உத்திரியாம்நாடியது நொந்துதானும்
உயர்ந்துமேபதிரியது வோடுமாகில்
பித்தமாம்நாடியது யென்றுநீயும்
பிசகில்லையனேவோர்க்கு மரிந்துச்சொல்லு
மெத்தவேமேல்கீழாய் பிரண்டோதுங்கி
மேவியேவிரகெனவே தெரிக்குமாகில்
சுத்தயிதுசிலேத்மமென்று் அறிந்துநீயும்
சூக்ஷமுடன்மருந்திந்தும்பிணியைநீக்கே.

(இ-ள்.) உத்திரிநாடியானது நொந்தாப்போல்பதரியோடுமாகில் பித்தமென்று அரியவும் நாடியானது பிரண்டு ஒதுங்கி தெரிக்குமாகில் சிலேத்துமமென்று அறிவீர்கள்—எ-று.

நோயில்லாதவர்கள் நாடியின்குறி.

மெய்யெனுந்திரேகமதில் சொல்லக்கேளு
மரிவியேபிணியொன்று மில்லாதார்க்கு

துய்யவனேகாலையிலே வாதமோடும்
   துலங்கவேகடும்பகலில் பித்தமாகும்
ஐபமதுமாலையிலே வோடுமென்று
   அடவாகவையித்தியர்க ளறிந்துநன்றாப்
கைமுறையாம்வையித்திய திரவுகோலை
   கண்ணாடிபோல்பார்த்து களித்துகூறே.

(இ-ள்,) நோயில்லாதவர்களுக்கெல்லாம் நாடியானது யெவ்விதம் வோடுமாகில் காலையில்வாதநாடியோடும் பகலில் பித்தநாடியோடும் மாலையில் ஐபமென்றநாடியானது வோடும் இவ்விதமாக வையித்தியர்கள் இன்னும் மற்றவர்களும் அறிந்துகொள்வீர்கள் ஐயமென்பது சிலேத்துமம்—எ-று.

நாடியின் குறி.

தெளிந்தவரின்கைக்குள்ளே நாடி-தானும்
   தான்குளிர்ந்துவெள்ளெரிக்கா யானால்வாதம்
அறிந்திடுவார்பனையோடு யின்னங்கேளு
   அப்பனேமேனியொடு சென்னில்பித்தம்
பரிந்துமேயரிந்துமொரு வாய்புளிந்தால்
   பரீட்சையுடன்சிலேர்ப்பனமே யென்றுசொல்லும்
நிரைபானவையித்திய திரவுகோலை
   நேர்முகமாய்க்கண்டவர்க்குப் பழிநாடாதே.

(இ-ள்.) நாடிபரிபவேண்டி யொருவர்கைகளைப்பற்றிப் பார்க்கும் போது வெள்ளெறிக்காய்தின்றாப் யெவ்வளவுகுளிர்ச்சியோ அவ்வள வு குளிர்ந்தவோடுமானால் வாதமாகும் மேனியும்அரையிலும் சென் னியிலும் பித்தமாகும் வாயில்புளிப்புதோன்றில்சிலேர்ப்பனமென்று அறிபவும்—எ-று.

பாரப்பாசிலேர்ப்பனமே யுதித்தபோது
   பத்தியேநாவுதனில் யினிப்புதோன்றுங்
கூறப்பாநாவிலெட்டிக் கசப்பேபானால்
   குடிகொண்டபித்தமதைக் குறித்துச்சொல்லு
நேரப்பாபுளிப்பதுவே தோற்றுயாகில்
   நாடிற்றுவாதமென்று நன்றாய்ச்சொல்லு
சீரப்பாயிவையெல்லா மறிந்துநன்றாய்
   ஜெகமதனில்சொல்லிமன மகிழுவாயே.

(இ-ள்.) சிலேர்ப்பனநாடியானது யுதித்தபோது நாவில்யினிப்பு தோன்றும் பித்தநாடியுதித்தபோது கசப்புத்தோன்றும் வாதநாடியு திக்குமாகில் புளிப்புத்தோன்றும் இவ்வகையாக அறியவேண்டும்— என்றவாறு.

செப்புமனந்தன்னில்வாதந் தீபதுகாதுபித்தம்
அற்பெனவித்துஜீவ னதினெழுஜடலந்தன்னில்

ஒற்பலநீலமோர்த்தும் உடலொக்கநிர்ப்பதாகும்
நெற்புறபிதனையெல்லாம் நீயுரயறிவார்தாமே.

(இ-ள்.) வாதத்தினால் சூடுவுண்டாகி காதுமத்திம மாகும் விந்தென்னும் வித்துவினால் உர்ப்பத்தியாகிய ஜடலத்தில் நீர்கோர்த்துக்கொண்டு நீலம்போல் திரேகம்தோன்றும் அறிவீர்கள்—எ-று.

மாதந்தீர்க்குரிய நாடிகுறிப்பு.

சித்திரையும்வைகாசி மாதந்தன்னில்
செழுங்கதிரோனுதைபத்தில் பார்க்கவேண்டும்
அர்த்தமாம்ஆடியோ டர்ப்பிசிக்கும்
அரையுமொருகார்த்திகைக்கு மத்தியானமாகும்
பத்தியேமார்கழியுந் தையுமாசி
பானுமேல்திசைமறைந்த நேறம்பாறு
இத்தியாதிகுகூமுடன் நாடிப்பார்த்து
இயம்பிட்டால்பண்டிதர்க்கு பழியேதப்பா.

(இ-ள்.) வைத்தியரோடு யின்னம் யெவர்களாயிருந்தபோதினும் நாடிபார்க்கவேண்டில் சித்திரை வைகாசிமாதங்களில் காலையில் சூரியவுதையத்திற்கு நாடிபார்க்கவேண்டும் ஆடி அர்ப்பிசி கார்த்திகைக்கு மத்தியானம் சூரியன் உச்சியில் நிர்க்கும்போதும் பார்க்கவேண்டும் மார்கழி தை மாசி மாதங்களில் சூரியன் அஸ்தமாகுந்தருணத்தில் பார்க்கவேண்டும்—எ-று.

தானானபங்குனிக்கு ஆவணிக்கும்
தான்கேளுபுரட்டாசி யிவைமூன்றுக்குந்
தேனகமர்த்தராத் திரியிற்பார்க்கத்
தெளிவாகநாடியது மூன்றுந்தோன்றும்
பானகயிவைகளையு மரிந்துநன்றாய்ப்
பார்தனிலேவைத்தியங்கள் செய்வாராகில்
கோனென்றே அகிலமுதற் வணங்கியேற்றி
குருவென்றேயுன்னடியை தொழுகுவாரே,

(இ-ள்.) பங்குனிக்கும் ஆவணிக்கும் புரட்டாசிக்கும் இந்தமூன்றுமாதங்களுக்கும் நாடிபார்க்கவேண்டில் அர்த்தராத்திரியில் பார்க்கவேண்டும் இம்முறையாகப் பார்ப்பாராகில் மூன்றுநாடியும்தெளிவாகக்கொள்ளும்—எ-று.

நாடிநிற்குந்துறை.

கேளப்பாமானிடராய்ப் பிறந்தபேர்க்கு
களிறுமொருசென்னிநாபி யுந்தியென்னும்
தாளப்பாயிவைமூன்று யிடங்கள்தன்னில்
தங்கிருக்கும்வியாதிகளை தானேகேளும்

வாளப்பாசென்னியின்கீழ் வாதமாகும்
வரையுமொருநவுந்தியின்கீழ் பித்தமாகும்
நாளப்பாநாபியின்கீழ் சிலேர்ப்பமாகும்
நன்றாகயறிந்துபிணி நாடாதோட்டே.

(இ-ள்.) மானிடரானவர்களுக் கெல்லாம் வாதம் பித்தம் சிலேர்ப்பம் தங்குமிடம் யாதெனில் சென்னியில் வுள்ளது வாதம் உந்தியின் கீழ்வுள்ளது பித்தம் நாபியில்உள்ளது சிலேர்ப்பனமென்று தெரிந்துக்கொள்ளவும்—எ-று.

வாதநாடியின்குறி.

தந்திரிபோல்யிம்மூன்றுத் தானங்கண்டு
தான்கேளுயுந்தியில்வாழ் வாதநாடி
கொந்துசேர்குயிலன்னங் கொக்கோடின்னம்
கூடியேமயிலோணன் போல்நடந்தால்
விந்தையாம்வாதநாடி யென்றறிந்து
வினையகல அவிழ்தமுரை கண்டுதேறி
தொந்தமாம்வயித்திய திரவுகோலே
துணையென்றுநம்பிமனந் துணிவுகொள்ளே.

(இ-ள்,) மேற்கூறிய ஸ்தானங்கள் மூன்றையும் அறிந்துக்கொண்டு உந்தியின்வாதநாடி நடப்பது யெவ்விதமென்றால் குயில் அன்னம் கொக்கு மயில் ஓணன் இவைகளைப்போல் நடக்குமாகில் வாதமென்று அறிவீர்கள்—எ-று,

தாக்கியபித்தநாடி தான்செயுங்குறிக்குணங்கள்
வீக்குவார்மூலைபட்டை யாமைபோல்நடக்குமென்பார்
ஊக்கமாம்சிலேர்ப்பநாடி யுகந்திடும்தவளைப்பாம்பு
போக்கொருநடையதாகும் மென்றுநீறறிகுவீரே.

(இ-ள்.) பித்தநாடி நடையறிவது யெவ்விதமென்றால் அட்டை ஆமை இவைகளைப்போல் நடக்கும் சிலேர்ப்பனநாடி நடப்பது எவ்விதமென்றால் தவளை பாம்புபோலாம் இவ்விதமாக அறிவீர்கள்—எ-று.

வாழிசேர்மானேறெண்டு வாதமும்பித்தமொன்றுங்
கோழனடக்கும்வண்மை கொடுஞ்சுமைதலைமேற்கொண்டு
நாழுறநடப்போனாக நடுவெனச்சலியாதோடு
மூவுறுபித்தம்ரெண்டு மொழியக்கேள்சிலேத்மமொன்றே.

(இ-ள்.) வாதம்ரெண்டும் பித்தம் ஒன்றும் கூடிய நாடியானது நடப்பது யெவ்விதமென்றால் தலையின்மீது பெரும்பாரம் தூக்கிக்கொ

ண்டு நடப்பவன்போல் நடக்கும் அந்தநாடியானது நடுவில்தானே போமாகில் பித்தம்ரெண்டும் வாதம் ஒன்றுயென்றறியவும்—எ-று.

வடிவிழிமானேபிள்ளைக் கண்வளர்கொட்டிபோல
அடுவுவசத்தல்போலாமாறுசேர்ப்பனமிரண்டும்
இடருநுவாதமொன்று பொழும்பிடிலதனைப்பார்க்கும்
கடுகியபுணர்ச்சிப்போல நடப்பதுங்கண்டுகொள்ளே

(இ-ள்.) சிலேர்ப்பனநாடி நடப்பது பெவ்விதமென்றால் பிள்ளைகளின்கண்கள் சுழல்வதுபோலவும் கோணலாகியும் அசைவுற்று நடக்குமாகில் சிலேர்ப்பனமென்று அறியவும் சிலேர்ப்பனம்ரெண்டும்வாதம் ஒன்றும் பெழும்பிடில் புணர்ச்சிப்போல் நடக்குமென்று அறிவீர்கள்—எ-று.

கொள்ளுகவாதம்ரெண்டுஞ் சிலேர்ப்பனமொன்றுங்கூடில்
அள்ளிலைநடுவேர்கண்ணு யரணைவால்முரிந்துவீழ்ந்து
துள்ளியசுழலுபோலாம் சோர்வுருபித்தம்ரெண்டு
மொள்ளியவாதமொன்றுங் கூடிலோர்வுரைக்கக்கேளே.

(இ-ள்.) வாதம்ரெண்டும் சிலேர்ப்பனம் வொன்றுங்கூடில் அள்ளிலைப்போல் நடுவே கிண்கிண்யென்று தெரிக்கும் பித்தயாகில் அரணைவாலானது அறுந்துவிழுந்தால் பெவ்விதம்துடிக்குமோ அவ்விதம்துடிக்கும் அந்தபித்தத்துடன் வாதம் வொன்றுகூடில் கேளும்—எ-று.

துடியினையடித்தாப்போலே தேவிபேசிலேர்ப்பம்ரெண்டும்
கடுகியேபித்தமொன்றுங் கடப்பதுங்காணவேண்டில்
படைவறவல்துல்லாளே மஞ்சைபாம்பென்னலோடும்
மடலிலேயரிந்துக்கொள்ளு மாயுருமானமாகே

(இ-ள்.) படபடவென்று துடிக்குமாகில் சிலேர்ப்பனம் ரெண்டாகும் பித்தம்வொன்றாகில் மஞ்சையென்னும் மேகம்போலும் பாம்புகள்போலும் நடக்கும் மென்றறிவீர்கள்—எ-று,

வேதமேயுரைத்தவுண்மை மெய்வாதத்தின்வீடுதொப்பள்
ஓதியபித்தனுக்கு ஸ்தானமேசிலேர்ப்பனத்துக்
காதியாமிதயத்தின்மே லாருமேஆன்றுமென்றும்
நீதிலாமுன்னோர்பேசும் வாகடம்செய்கையாமே.

(இ-ள்.) வேதமுறைமையுண்மையாக வுரைத்தவண்ணம் யாதெனில் மெய்யென்னுந்திரேகத்தினிடமாக உண்டாகிய வாதத்தின்வீடு தொப்பள் பித்தத்திற்குஸ்தானம் சிலேர்ப்பனமென்றறியவும் சிலேர்ப்பனத்திற்குஸ்தானம் முதலென்றும் ஆருசாஸ்திரங்களில் கூறிய முறையாக்கும்—எ-று.

வாதபித்தசிலேர்ப்பனஞ் செய்தூரி.

மேவிபேவாதஞ்செய்யுங் குணந்தனைவிளம்பக்கேளாய்
தாவியேவயருமந்தம் சந்துளர்பொருந்தும்நோவாம்
சீவியதாதுநாசம் செருந்துடன்சிருநீர்வீழும்
காவியகண்ணினுளே மலமதுகருகிவீழும

(இ-ள்.) வாதமானது செய்யுங்குணம் யெவ்விதமென்றால் வயருமந்தமாகும் அத்துடன் நீர்தாரைவழியி கிடமாக நோயுண்டாகி யிந்திரியம்நாசமாகும் சிறுநீர்ஒழுக்குண்டாம் மலமானது கரிகிவிழும் வாதத்தின் குணம்—எ-று.

பித்தஞ் செய்தூரி.

யெல்லவார்க்குழலாபித்தம் செய்குரியியம்பக்கேளாய்
சொல்லவேவிழிசுழண்டு குளிர்ந்திருண்டிருக்குமல்லால்
சில்லநீர்கடுத்துநொந்து சிருகெனவிழுந்துபின்னும்
அல்லவேயரியச்சொன்னோம் நவின்றிடுமுண்மைதானே.

(இ-ள்.) பித்தமானது செய்குரியெவ்விதமென்றால் கண்விழியானது சுழலும்யிருண்டிருக்கும் சிருநீரானது கடுத்துநொந்துவிழும் இவ்விதவியாதி பித்தமென்றறியவும்—எ-று.

சிலேர்ப்பனஞ் செய்தூரி.

சேர்த்துடல்செய்குணங்கள் சில்லெனவுடம்புவேர்க்கும்
ஏத்த பாயுமிநீர்தானும் யினித்ததுநாவெளுக்கும்
நாத்தநீரழிந்துவீழும் நயம்பெரவெளுக்கும்மேனி
தோத்துமிக்குணங்கள்கண்டால் சிலேர்ப்பனத்தொகுதியாமே

(இ-ள்.) சிலேர்ப்பனஞ்செய்குரி யெவ்விதமென்றால் சில்லென்றதாக உடம்புவேர்க்கும் வாயில்உண்டாகும் உமிநீரானது யினிப்புண்டாகி நாவானது வெளுத்திருக்கும்நீரானது நாத்தமுண்டாகும்மேனியானது வெளுக்கும் சிலேர்ப்பனக்குரி—எ-று.

வியாதியரியுங்தூரி.

அந்தவாதங்கள்ரெண்டும் அடுத்திடுபித்தமொன்று
தொந்தித்துநடக்குமாகில்தோன்றிடுங்குணத்தைக்கேளாய்
வந்துநொந்தூரம்விம்மிமதர்த்திடும்மாதரோகம்
சிந்தனைமிகவுண்டாகி தின்றதுசெமியாதென்றூர்.

(இ-ள்.) வாதம்ரெண்டும் பித்தம்ஒன்றும் கூடி நடக்குமாகில் வயிரானது நொந்துகடுத்து தின்பதுவொன்றும் ஜீரணியாது—எ-று.

செய்யதோர்பித்தம்ரெண்டு சிலேற்றுமமெழுந்ததாகில்
ஐயதோர்பசியுமில்லை யடிக்கடியுதிரம்விழும்
துய்யதோர்நயனநீரும் சுத்தமேமஞ்சள்போலாம்
பெய்கள்போல்பித்தல்பேசல் பினத்தலேசத்பனங்களாமே

(இ-ள்.) பித்தம்ரெண்டும் அத்துடன் சிலேத்துமம் பெழுந்ததாகில் பசிவேளைபிராது அடிக்கடி ஆசனத்தின்வழியாக ரத்தம்விழும் சிருநீரானது மஞ்சள்போலிருக்கும் பித்தலும் பினத்தலுமுண்டாகும் சிலேர்ப்பனத்தின்குணம்—எ-று.

ஒப்பியசிலேர்ப்பம்ரெண்டில் வாதமும்வொன்றுகூடில்
வெப்புறுகனல்மேலிட்டு யினிப்பையும்மிகவேவென்று
தப்பிலாபசியுமுண்டாந் தவனமேபத்திநிர்க்கும்
இப்படிகுணமேகண்டால் சிலேர்ப்பனவாதமெண்ணே.

(இ-ள்.) சிலேர்ப்பனம்ரெண்டும் வாதம்வொன்றும்கூடில் திரேகத்தில் சூடானது அதிகரித்து யினிப்பான உணவின்மேல்அபேட்சையாகயிருக்கும் பசியதிகமுண்டாகி சலத்தின்மேல்அதிகதாகமுண்டாகும் யிவ்விதவியாதியை நாடியால் அறியவும்—எ-று.

யெண்ணியபித்தம்ரெண்டு வாதமொன்றெழுந்ததாகில்
புண்ணெனவுடம்புநோவாம் புகைந்தெனவெரிக்குநெஞ்சில்
திண்ணமாய்நாவுலர்ந்து சிறுத்தநீர்கடுத்துவிழும்
அண்ணவருரைத்தவுண்மை ஆயுர்வேதமாமே

(இ-ள்.) பித்தம்ரெண்டும் வாதம்வொன்றுங் கூடியெழும்பிடில்மெய்யில் நோயுண்டாகும் நெஞ்சானது புகைந்துபுகைந்துயெரிச்சலுண்டாகும் நாவானதுவாளும் சிறுநீரானது கடுத்துவிழும் வாதசிலேர்ப்பனமாகில்—எ-று.

தாங்கியசிலேர்ப்பம்ரெண்டும் தனிப்பித்தமெழுந்ததாகில்
ஓங்கியஜன்னியுண்டாம் உச்சிநோய்செவிகேளாது
பாங்குடநாபிநொந்து பத்தியஞ்செரியாதாகும்
பூங்கொடிபித்தஞ்சிலேர்ப்ப மென்றுதான்புகழுவீரே

(இ-ள்.) சிலேர்ப்பனம்ரெண்டும் அதில் பித்தம் தனித்தெழுந்துதாகில் ஜன்னியுண்டாகி உச்சியானதுநோகும் செவியானதுகேளாது நாபியானதுநொந்துபத்தியம்செரியாது பித்தசிலேர்ப்பமானால்-எ-று.

நாடியின்குரிப்பு - முற்றிற்று.

☞ இனி-இரண்டாம்பாகம் மரணக்குறிப்பு.

௨

கடவுள் துணை.

பதினெண் சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

வையித்திய திரவுகோல்.

இரண்டாம்பாகம் மரணக்குறிப்பு.

விநாயகர் துதி.

வெண்பா.

மன்னுமுதற்பாகமதை மகிழ்ச்சியுடனேயுரைத்தே
உன்னியரெண்டாம்பாகம் ஓதுதற்கு—இன்னிலமேல்
முத்தமிழ்க்குமுன்னுதவு மூஷிகவாகனமேறும்
அத்திமுகத்தோனே யருள்.

முகவுரை - விருத்தம்.

ஆதியெனும்பதினெண்மார் நூல்திரட்டி
அநுபோகக்கைமுறையுமடவாய்சேர்த்து
ஓதினேனுலகோர்கள்மகிழநாளும்
உத்தயனேநாடிகுறிமுதற்பாகத்தில்
கோதிலாயிதுரெண்டாம்பாகந்தன்னில்
குறிப்பாகுமரணத்தின்குறியைத்தானுஞ்
சோதியாய்க்காண்பதற்குச்சூட்சமாகச்
செஞ்சியேகாம்பரமுமவெளியிட்டேனே.

நான்முக விருத்தம்.

பார்த்திடவேவாதபித்தஞ் சிலேற்பனங்கூடி
பதரியேயறணைவால்போல் துடிக்கில்நாடி
வேர்த்திடவே கிரேகமது வேறுபட்டு
வினையாகமெய்யெங்கும் குழியுமாகில்
பார்த்திடவேயந்நாடி மரணமாகும்
பழியில்லைபுன்மீது யரித்துச்சொல்லு
தீர்த்திடவேன்னறுபொருள் யரித்துப்பின்னால்
திகைக்காதேமரணகுறி தெளிவைப்பாரே.

(இ-ள்) வியாதியஸ்த்தர்களின் கையில் நாடிபார்க்கும்போது வாத பித்தநாடியானது ஓட சிலேர்ப்பனநாடியானது பதுங்கியிர்க்க நாடியானது அறணைவால்போல்துடிக்க கிரேகத்தில வேர்வையானதுவிட உடம்பு யாத்தியந்தமுங் குவிந்ததாகில மரணமென்றுச் சொல்லவும் எ - று.

இடியதுபோல்நாடி யிடித்துவோடி
ஐயம்புமொருகிரேகமது மயங்கிக்காட்டி

புடையுருவாம்மூக்கினுங் கீழதானும்
புகுந்துமே வேர்வையது சொரியுமாகில்
வடிவானவிழிரெண்டு தூக்குமாகில்
வலித்துமே வில்லாரெண்டுந் தூக்குமாகில்
கடுகவேயிக்குணங்கள் கண்டபேர்க்கு
கண்டிப்பாய்மரணமென்று கழறுவாயே.

(இ-ள்) இடிபோல்யிடித்து நாடியானதுவிழுந்து உடலானது மயங்கி மூக்கின்கீழ் வேர்வையுண்டாகி கண்களிரண்டும் மறைந்து விலா ரெண்டும்வலிக்க இவ்வித குறிகள்கண்டால் மரணம்—எ-று.

நன்மையென்றவாதபித்த நாடிதானும்
நடவாமல்தங்கியது மாயுமாகில்
துன்மையென்ற சிலேர்ப்பனமாம் நாடியப்பா
துடித்துமேதானோடி நடக்கிறகேளும்
வண்மையென்றவுடலதுவுமெழும்பிதானும்
வளர்கின்றமார்பதுவுங் குழிந்தேகாணில்
இன்னவிதகுணங்களுக்கு குறிதானப்பா
இயம்பினோர்கடிகைதொண்ணூற் தாருப்பாரே.

(இ-ள்) கடிகைவாதபித்தநாடிகள் அடங்கி சிலேர்ப்பனநாடியானது துடித்து நடக்குமாகில் சிரேசப்பெழும்பும் மார்புகுழியும் இவ்விதகுணங்கள் உள்ளவனுக்கு தொண்ணூறறியாறு கடிகைக்குள் மரணமாகுவன்—எ-று.

ஆடியதோர்மஞ்ஞைபோல்கோழிபோலும்
அன்னம்போல்நடக்கின்றவாதந்தானும்
நீடியதோரன்னுடியட்டைப்போல
நின்றுமேதியங்கியதுயோடில்கேளும்
கூடியதோர்கிழமையதயேழிலேதான்
கொல்லுகின்றமரணகுறியிதுவேயாகும்
நாடியேநாதாக்கள்சொன்னவாக்கை
நாட்டிலேநம்பியிதின்பறகைகூபாரே.

(இ-ள்.) மஞ்ஞை-கோழி-அன்னம்போல் நடக்கின்ற-வாத நாடியானது-அட்டையைப்போல்-தயங்கியோடுமாகில் அவன் தனக்கு ஏழுநாளில் மரணம்மென்று முன்னோர்கள் கூறுகிறார்—எ-று.

அட்டையைப்போல்நடக்கின்ற பித்தநாடி
அதுசெய்யுங்குணக்குறியை வரையக்கேளு
தட்டமுளையறவண்ணபோல் வளைந்துதானும்
துடித்துமே பிரிந்துவந்து யோடுமாகில்
கெட்டியதாயன்பந்துமூன்றுநாளிலேதான்
கண்டுக்கொள்பவர்தனக்கே மரணமென்றே
இட்டமுடனவனெழுந்துக் கிழிந்துப்போச்சு
ஈடார்தமருந்துநீ யெட்டாதில்லே.

(இ-ள்.) ஆமை அட்டையைப்போல் ஓடிய பித்தநாடியானது பாம்பைப்போல் வளைந்து பிரிந்து வோடுமாகில் அக்குறியுள்ளானுக்கு மூன்றுநாள் அல்லது ஐந்துநாளில் மரணமாவானென்று முன்னோர் கூறுகின்றார்—எ-று.

கண்டிடவே தவளைபாம்பு போல்நடக்கும்
கையிலுள்ளசிலேர்ப்பமென்ற நாடிதானும்
சண்டையிடும்பாவனைபோல் பிரிந்துவோடி
சகிக்காமல்தானதுவும் புடையக்கண்டால்
விண்டிடுவாய்மாதமொன்றில் மரணமென்று
விளங்கவேயிக்குறிகள் கண்டபேர்க்கு
பண்டிதர்மேல்பழிவருமே மருந்தையீந்தால்
பணமென்றவாசையினால் பழிகொள்ளாதே.

(இ-ள்) தவளை-பாம்பு அட்டையைப்போல் நடக்கின்ற சிலேர்ப்பனநாடியானது சண்டைப்போடும் தன்மையைப்போல்பிரிந்துபுடையுமாகில் அவன்தனக்கு ஒருமாதத்தில் மரணமென்று அறியவும்-எ-று.

மேதினியிலுள்ளவர்கள் யெவருங்காண
மெய்யிதாமேயானுரைக்க மேவிகேளீர்
ஓதியதோர்வாய்தனிலே யூளைசார்ந்து
உத்தமனேநாவதுவும் வரண்டுகாணில்
தீதுசெய்யுஞ்சிலேர்ப்பமெனும் நாடிதானும்
செரிமியேயெழுந்துவதுவிழுருமாகில்
ஆதியானமைத்தபடியவனுக்கப்பா
அடுத்தநாள்யிரண்டெனிலே மரணப்பாரே.

(இ-ள்) இப்பூலோகத்தின்கண் யாவற்றினாளும் நம்பும்படியாய் கூறுகின்றது யாதெனில் வியாதியஸ்தவர்களுக்கு வாயில் ஊளைசேர்ந்து நாவானதுவரண்டு அத்துடன் சிலேப்பன நாடியானது யெழுந்து செரிமிவிழுமாகில் அவன்தனக்கு பரமேஸ்பரன் விதித்த வண்ணம் இரண்டுநாளில் மரணம்—எ-று.

மெய்தனிலேபித்தமது நீங்கிதானும்
மெத்தெனவேவாய்வதுவும் தங்கிநிற்கில்
ஐயமதுமேலிட்டுவப்பால்கேளும்
அடுத்துடனேயிளப்பதுவுந் தோணுமாகில்
துய்யெனவேவிழியதுவும் மரைப்பதாகி
தோஷமாம்நீரதுவும் மெய்யில்கோர்க்கில்
ஐயமென்றயவனுடையவிதிதப்பாமல்
ஐந்தாநாள்மரணமென்று வரிந்துசொல்லே.

(இ-ள்) திரேகத்தில் பித்தமானது நீங்கி வாயுவானது அதிகரித்து அய்யமானது மேலிட்டு யிளைப்புண்டாகி நேத்திரமானது மரைவுகொடுத்து நீரானது மெய்யில்கோர்க்கில் அவன் தனக்கு ஐந்தாநாள் மரணமென்று அறியவும்—எ-று.

துன்னியதோர்வாதபித்த சிலேர்ப்பனத்தில்
துடர்கின்றஜன்னிகளை துலங்கக்கேளும்
பின்னியதோர்பாம்பைப்போல் சொல்லக்கேளு
பிரந்துமேதானடந்து நாடிதானும்
தன்னியமாய்தவளையைப்போல் தபங்கியோடில்
தப்பாதுமரணமென்று தானேசொல்லி
பின்னவர்க்கைதொட்டுபணம் பரித்திடாதே
பிழைப்பென்றுமருந்தீய்ந்துப்பழிகொள்ளாதே.

(இ-ள்.) வாதபித்தத்திேைடு சிலேர்ப்பனம் துடருமாகில் ஜன்னி காணும் அப்போது பாம்பைப்போல் பிரண்டு நடந்த நாடியானது தவளையைப்போல் மயங்கிநடக்குமாகில் தப்பாமல் மரணம் நேருமென்று அரியவும்—எ-று.

என்னவேவார்த்தைதன்னை இயல்புடணிணங்கச்சொல்வேன்
முன்முகமார்புபக்க மூக்குடன்செவிகண்டங்கள்
சென்னிகங்குளிர்ந்துசோர்ந்து சிலேர்ப்பனஞ்சுருக்கச்செய்தால்
சொன்னநாள்யிரண்டில்சாவாம் தெர்குத்தரிந்துரைத்திடாயே

(இ-ள்.) இன்னமும் மரணக்குரியுட செய்கைகள் சொல்லுவேன் யென்னவென்றல் முகம்-மார்பு-பக்கம்-மூக்கு-காது-கண்டம்-செவி இவைமுதலானதும் குளிர்ந்திருக்குமாகில் அப்போது அதில் சிலேர்ப்பனஞ்சேர்ந்து திரேகத்தை சுருக்கஞ்செய்தால் இவ்வித குரிகுணமுள்ளவன் தனக்குநாள்வொன்றில் மரணமென்று அரியவும்—எ-று.

கண்டநொந்துந்திவீங்கி கண்சிவந்தளர்ச்சிதோன்றி
அண்டமும்பொரிமிவிம்மி அசைந்துவிடவிருக்குமென்ன
முண்டகமுகமும்பொன்போல் மூஞ்கசெரிந்துமூர்ச்சி
தண்டிளந்தமேவில் சாவதுதிண்ணமென்னே.

(இ-ள்) கண்டமானதுநொந்து உந்தியானதுவீங்கி கண்சிவந்து வயர் பொரிமி விம்மி முகமானது பொன்னிறமாகி முன் மூர்ச்சியானதுவாங்கி திரேகம்குளிர்ந்து இவ்விதமாக யிருக்கும்போது நாடியானது வீணையைப்போலுந்தெரித்து ஒணுனைப்போலும் நடக்கில்யவன் தனக்கு மரணம் நிக்ஷயமென்று அரியவும்—எ-று.

சில்லெனசேடுடைத்து சிலேர்ப்பனமதுவேதோன்றில்
சல்லெனசரீரம்வேர்த்து தானுடல்குளிர்ந்துதோன்றில்
சொல்லதுகுளறிப்பேசி தூக்கமுஞ்சுழன்றுவிழில்
செல்விதபித்தத்தாலும் தீர்ந்திடாரோகமெண்ணே.

(இ-ள்) திரேகமானது சில்லென்றுகுளிர்ந்து அதில் சிலேர்ப்பனந் தோன்றில் சரீரமானதுவேர்த்து உடம்பானது குளிற சொல்லானது குளரிப்பேச நித்திரையானது அதிகரித்து சென்னியானது சுழல தீராதபித்தரோகமா மென்றறிவீர்கள்—எ-று.

மெய்யதோர்பகல்விரிம்பி யிரவுதானுடலைமேவிச்
செய்யதோர்நாவரண்டு சேற்றும்நாடியாடத்
தொய்யவேசுவாசந்தானும் துடர்ந்துமேவொங்குமாகில்
வெய்யகண்பரந்துதாவி விழிக்குநாளிரண்டில்சாவே.

(இ-ள்.) பகலில் யிரும்பலுண்டாகி யிரவில் உடலைமேவி நோய் வுண்டாகி நாவானது வரண்டு சிலேர்ப்பன நாடியானது வோடில் அப்போது மேல்சுவாசம்வாங்க கண்ணானதுதாவிபரந்து விழிக்குமாகில் அவன்தனக்கு இரண்டாம்நாள் மரணமென்று அரிவீர்கள்-எ-று.

சாலவேவாதபித்தம் சிலேர்ப்பனந்தனித்தொன்றாகி
சாலவேபோஜனங்கள் சமைத்திடாதாக்ஷிசெய்யும்
சாலவேஜன்னிகோர்த்து தலைநொந்துஜலந்தான்கோர்க்கில்
சாலமேவயசுவத்திட்டந் தள்ளிதவில்லாதென்றே

(இ-ள்.) வாதபித்தத்தினுடன் சிலேர்ப்பனமானது கூடாமல் தனித்து யெழும்பில் அப்போது சாதமிரங்காது தாட்சிசெய்யும் அத்துடன் ஜன்னிகோர்த்துக்கொண்டு தலைவலியுண்டாகி வாயினல் சொள்ளென்னும் ஆவியானது போகும்—எ-று.

கால்வளர்ந்துபருமூக்கும் கருவிழிசிவந்திருக்கும்
மேல்விழிதயங்கத்தண்ணி மிஷிதனித்தொடுங்குந்தண்ணீர்
சால்பெருதுதிரும்வாயுந் தான்கருத்திருக்குமிந்த
நால்வகைக்குரியுஞ்சொன்னேம் நமனுயர்கவருவாரே.

(இ-ள்) கால்னதுவளர்ந்து மூக்கானது யுயர்ந்துக்காட்டி கண் பார்வையானது மேல்நோக்க வாயானது கருத்துக்காட்ட இவ்விதமான நாலுகுரிகளையுங்கண்டால் மரணம் நிக்ஷயம்யென்று அறிவீர்கள் எ - று.

புருவமேவட்டமாகி புயபவிந்திருக்குஞ்சோனே
பரிகிநீர்தாவும்போதப் பஞ்சிடுபகண்ணும்வாயும்
மரிவியகெர்ப்பந்தானும் மடைந்துகாணிருக்குமாகில்
வருகுமிக்குணங்களெல்லாம் மரணமென்றுரைக்கலாமே.

(இ-ள்) புருவமானது வட்டமாகியும் திரேகமானது மழமழப்பாகியும் வேர்வையுண்டாகி கண்ணும் வாயும் பஞ்சடைந்து யிரிக்கி யிருக்குமாகில் அவன் தனக்கு மரணமுண்டாகும்—எ-று.

பேர்விழிமிரண்டுநாளும் புனல்விழிந்தபரநாளும்
சிர்சரவிழியிலெய்து தரித்திடாதேழுநாளில்
பார்விழிமொழியும்நாளில் பயன்றதசுவையின்கூரும்
கூர்விழிநாசிவாசங் குரையுநாள்மூன்றில்சாவே

(இ-ள்.) விழியானதுமிரண்டு அதில்நீரானது வீழ காலானதுவீங்க யிக்குரிகண்ட யேழாநாளில் நாக்கில் தித்திப்புதோன்றி மூக்கில் வரும் சுவாசமானது குரைந்ததாகில் அவன் தனக்கு மரணம்மூன்று நாள்யென்று அரியவும்—எ-று,

போஜனபொருந்தவிக்கல் பொருமுதல்புடைத்தல்சோர்தல்
ஆசனங்குளிர்ந்துகூற லகங்கைகால்பெருத்தேவீங்க
கோசமும்மேரவாங்கல் குளிர்ந்துபிற்குணியவாங்கல்
நாசிவெண்கரிவியென்றே தவிர்ந்துநீர்விட்டுப்போமே.

(இ-ள்) சாப்பிடும்போது விக்கலுண்டாகி திரேகம்குத்தல் குடைச்சலாக ஆசனமானது குளிர்ந்து கை கால்கள் பெருத்து வீங்க கோஜமென்னும் விரையானது யேறலும் யிறங்கலுமாக யிருக்க திரேகமாதியந்தமும் குளிர்ந்துக்காண மெய்யின்நிறம் வேருபட நாடியானது யிடியைப்போலிடித்து வீணையைப்போல் தெரிக்க மருந்தீய்வதில் பிரையோசனமில்லை மரணமாவான்——எ-று.

விட்டிடும்நீறடைத்தால் விழியிநீர்சிந்தச்சிந்தல்
அட்டமும்குளிர்ந்துக்கூந்த லகங்கைகால்பெருத்தேவீங்கல்
உட்டணப்பேர்வசித்தல் உதருதல்பிரப்புச்சேர்தல்
திட்டமாய்சாவுதின்னம் நாடியேகைதொடாதே.

(இ-ள்.) சாதாரணமாக வருகின்ற நீரானது அடைத்துக்கொண்டு அத்துடன் விழியில் நீரானதுக்கசிய திரேகமானது குளிர்ந்து கை கால்கள் பெருத்துவீங்க நாடியானது யிடிபோல் முழங்க மெய்நடுக்கமுண்டாகி குளிர்ச்சியானதுசேர கைதொடாதே மரணமாவான்——எ-று.

கைதொடில்புண்போல்நோகல் கருத்துடல்மழமழத்தல்
மெய்தொடில்திரேகம்நீலம் விழியதுசிவந்தபீளை
செய்யொழிகமலம்பொந்தி சிருமுகங்குருவேர்சிந்தல்
ஐவருமொடிங்கிசித்தம் யாவொராடாதெண்ணே.

(இ-ள்.) கைகளைத்தொட்டு நாடிப்பார்க்கில் கையானது நொந்து திரேகமானது கருத்து மழமழப்புண்டாகி விழியானது நீலம்போலும் அதில் செகப்புப் பீளைப்பெருக பு்ந்தியிலும் முகத்திலும் வேர்வையானதுகசிய யிக்குரியுள்ளவர்களுக்கு ஐந்துபூதமும் ஒடிங்கி நாடியானது விழும்——எ-று.

சிரமதுகருத்துநொந்து செவியடைந் திருமலாகி
சுரமதுமெலகுவதாக சேரைபோல்சிருநீர்விழ்ந்து
சரமதுசிதரிவீசி தாகமும்வெகுவதாகி
விரையவேவிழிதியங்கி மீளாறுமிடையாமென்றே.

(இ-ள்.) தலையானது நொந்துக்கருத்து செவி மந்தமாகி யிரும்பல் கண்டு சுரம் அதிகரித்து சிருநீரானது கலங்கலாகவிழ சுவாசமானது அதிகரித்து தாகமுண்டாக கண்மயங்க யவன்மீளான்——எ-று.

மரிந்திடவிரும்பிடாதே மருபிரப்பிட்டுமேலும்
அரந்தறநிதங்கள்வீங்கி நாடியின்கீழேகட்டி
பரிந்துநீர்பெறவேவாங்கி பார்வையுமிரிதியானல்
மரிந்திடவேண்டாம்நீயும் மரணமென்றறிந்துகொள்ளே.

(இ-ள்) வயித்தியரானவர்கள் பாபத்திற்குள்ளாகப்படாமல்காணவேண்டிய குறியாதெனில் வியாதியஸ்தவர்களுக்கு வருத்தமுண்டாகும்படி நிரேசமானது விங்கி வெளும்பின்கீழ் கட்டியுண்டாகி அதில் நீர்க்கசிந்து நேத்திரம் மத்திபமானால் யிக்குறியுள்ளவர்களுக்கு மரிந்திடாமல் மரணமென்றுச் சொல்லவும்—எ-று.

மீன்றுவாய்வழுவழுத்து மேனியும்வெருக்குமாகில்
தான்றியபேச்சுதானும் சவண்டிடராக்பட்டும்
மீண்டியமரணமாக யிரெண்டரைக்கடிகைபெண்ணே
கூண்டிடுமிளம்புக்கூடி குறித்திடுமுயிரையன்றே

(இ-ள்) வாயில்குழகுழப்புண்டாகி மேனியானது வெளுத்து பேச்சானது மாருபாடாகப்பேச்சில் யிரண்டரைநாழிகையில் மரணம் அத்துடன்யிளைப்புத்தோன்றில் முன்னுதாகவே மரணமாகும்—எ-று.

வந்ததோர்சுரமுள்ளோர்க்குயிணங்கவேவேர்வைதோன்றில்
வாந்ததோர்பெருமூச்சுண்டாம் வாதநாடியுமேயானால்
தேய்ந்ததுபிராணமென்று செப்பலாம்தெளிந்தோரெல்லாம்
காந்தளங்கையார்காமன் கரும்புவில்பருவங்கண்ணீர்.

(இ-ள்.) சுரமுள்ளவர்களுக்கு வேர்வையானது மீறி பெருமூச்சியுண்டாகில் வாதநாடியானது பிராணனில்லையென்றும் சொல்லவும் இவ்விதகுறியுள்ளோருக்கும்—எ-று.

முந்தியநாவுமெத்த கருப்பதாய்நாக்குமூக்கும்
தன்னிடகுணமுமாரி தவ்வியகுணமுமிஞ்சில்
யெண்ணமேலகுணமீதானால் யிதர்ச்குநீரிளமைகூர்ந்து
உண்ணியேமருந்துசெய்தால் லொழிந்ததுமாணமெண்ணே.

(இ-ள்.) நாக்குமூக்கும் மெத்தக்கருத்து தன்குணமானது மாரி வேருகுணமுண்டாகி யிருக்குமாகில் அதற்கு யிதில்கூரிய மருந்து செய்துகொடுக்க மரணம்நீங்கும்—எ-று.

உண்டவூண்மொழியாதாகில்ஊண்மிகச்செல்லாதாகில்
கொண்டதோர்வாய்வுமெத்திக் குடல்வலியதிகமாகில்
பண்டுசொல்மருந்துசெய்து பார்க்கவென்றெண்ணவேண்டாம்
வண்டுசேர்குழலினளே மரணமென்றிதனைச்சாற்றே.

(இ-ள்) சாப்பிடும்படியானவை செரிக்காமலும் சாதம் உள்ளுக்குக் கொள்ளாமலும் வாய்வு அதிகரித்து உடலில் வலிப்புண்டாகியிருக்குமாகில் மரணமாவான்—எ - று.

சாலவேசலத்திறேடே தான்விந்துவிழுகுமாகில்
ஏலவார்குழலினளே யேழுநாளையில்னிர்கக்கொல்லும்

காலமேகதிரோன்றன்னில் கருதிபதிங்கள்தானும்
மாலையிலில்லங்கன்று மாரிடில்மரணந்தானே

(இ-ள்.) சிருநீரானது விடும்போது அத்துடன் விந்துவானது விழுமாகில் காலமூர்த்தியில் சொல்லும் காலையிலும் மாலையிலும் வீட்டில் சேர்ந்திட மரணமாகும்-எ-று.

தானொருநாளுக்குநாள் தன்பலன்குரையுமானால்
மானுறுவதன்றானும மரவெளுத்திருக்குமானால்
குரைவரப்பெருமூச்சுண்டாயிருக்குமேபெருமூச்சுண்டாய்
மரைவரமரணமென்றும் மர்மமாயுரைத்திடாயே.

(இ - ள்.) நாளுக்குநாள் பலன்குரைந்து விந்தானது வெளுத்திருக்குமாகில் ஒருமாதத்தில் பெருமூச்சுண்டாகி மரணமாவான-எ-று.

முதுகொடுவயரும்வீங்கி மூலமுந்தாதுகெட்டுச்
செதுசெவிகண்ணும்வாயும் செதிரியப்பரிசிதண்ணி
முதுந்தனலாமூன்று முதியவன்கீழேபாகில்
விதியவன்வசமேதென்று விட்டுநீயகண்டிடாயே.

(இ-ள்.) முதுகும் வயரும்வீங்கி மூலமென்னும் தாதுவானது கெட்டு செவியுங்கண்ணும் வாயும் பார்க்கக் குருநியிருக்குமாகில் மூன்று வாரம் வியாதியாயிருந்து மரணமாவான் - எ-று.

வத்தியமலஞ்சலங்கள் மாற்றுள்ளசெவிகண்நாசி
உத்தமோர்கன்னம்நாக்கு உரிதிகள்பலனுமத்தும்
இத்தனைகுணமுங்கெட்டு யிருந்தனவிபல்புகண்டால்
வித்தகர்முன்புசென்று மீளாவதருமைதானே.

(இ - ள்.) மலஞ்சலம் செவி கண் நாசி கன்னம் நாக்கு இவை முதலானதும் குரிகெட்டு யிருக்குமாகில் அவன் மீள்வது அரிதாகும் எ - று.

மரணக்குறிப்பு - முற்றிற்று.

☞ இனி - மூன்றம்பாகம் மாத்திரைவதுப்பு.

உ

கடவுள் துணை.

பதினெண்சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய

வைத்திய திரவுகோல்

மூன்றாம்பாகம் பேதிமாத்திரை முறைகள்

வெண்பா.

அறனயன் மால்மூவர்களும் மகலாமல்முன்னிற்க
வறமதாம்பதினென்பேர்வாகடத்தை-தரைமீதில்
தி ட்டினேன்மாத்திரைசெய் தேன்போல்மூன்றாம்பாகம்
வறுட்டறவேவேழமுகன் வந்து.

முகவுரை-விருத்தம்

பதினென்பேர்சித்தரவர் பார்ந்தவாறே
பண்பானநாடியொடு மரணஞ்சொன்னோம்
சதியானபிணியகல யுவிழ்தங்கூட்ட
சறக்கரித்துவனுமானஞ் சுத்திசெய்ய
ததியானவைத்தியத் திரவுகோலில்
தானரிவீர்மாற்றிரைகள் சகலநோய்க்கும்
மதிகொடுக்குமின்னூலை வெளியாய்ச்சொன்னேன்
மண்டலத்தில்கண்டுமன மகிழ்ந்துசெய்யே.

நான்முக-விருத்தம்.

செய்யப்பாமுறைபொன்னும் பிசகிராது
சித்தியுள்ள முனிவருடப் பாகமப்பா
மெய்யப்பாமானிடர்க்கு வேணுமென்று
மருமமுள்ள ரகசியத்தைத் திறந்துவிட்டேன்
வையப்பாகைமுறையா மிந்தவித்தை
வரிந்தியேசொன்னமொழிக் கரித்தநூணி
செய்யப்பாயின்னூற்குக் குருவுவேண்டாஞ்
செஞ்சி ஏகாம்பரமும் செப்பும்வாரே.

பேதிக்கி பக்கீமாத்திரை.

செல்லிக்காய்கெந்தகம் நேர்வாளஞ்சேறு
நேரானவங்காரம் ரசமுங்கூட்டு
சொல்லிவந்தநால்திஞசும் பலங்காலாக
சுத்திசெய்துநேர்வாளம் சேர்த்துக்கொள்ளு

தொல்லையில்லையிளநீர்விட் டரைத்துக்கேளு
துவரையளவாகவே யுருண்டைசெய்து
வல்லவனேநிழலுலர்த்தி வைத்துகொள்ளு
வாசகத்திலனுபானம் வரிந்துஉண்மை.

(இ-ம்.) ரசம் நெல்லிக்காய்கெந்தகம் வங்காரம் சுத்திசெய்த நேர்வாளம் இந்தநாலுதினுசையும் வகைக்கு கால்பலமாக யெடுத்து கல்வத்திவிட்டு யிளநீர்வார்த்து அரைத்து பிறகு துவரைப்பிரமாணம் உருண்டைசெய்து நிழலுலர்த்தி புட்டியில்போட்டுவைத்துக்கொள்ளவும் சு மாதக்குழந்தைகட்கு ஒருமாத்திரை முலைப்பாலில்கொடுக்க ச தடவை பேதியாகும் ஒருவயதுகுழந்தைகட்கு உ-மாத்திரை அல்லது கூ-மாத்திரை கொடுக்கவும் பெரியவர்களுக்கு தேனில் இரண்டு மூன்று மாத்திரை கொடுக்கலாம் மிளகுநீர்சாதம் சாப்பிடவும் சுரத்தில் கொடுக்கவேண்டுமானல் இஞ்சிரசத்தில் குழந்தைகட்கு ஒரு மாத்திரையும் பெரியவர்கட்கு இரண்டுமாத்திரையுங்கொடுக்கலாம் பத்தியம் அரையுப்பு அரைப்புளி முருங்கைப்பிஞ்சு கத்திரிப்பிஞ்சு சேர்த்துக்கொள்ளவும்-எ-று.

காடிநீர்பேதி.

சித்தியாக்காடிநீர் பேதிகேளும்
சேர்த்திடுவாய் முத்தெண்ணை அன்னகாடி
பத்தியேபுளித்தமோ ரிவைகள்மூன்றும்
பார்த்துமேசமநிடைபா சேர்த்துக்கொண்டு
உத்தமனேபடியரிக்கா லுள்ளேகொள்ளு
ஒருநாழி தான்பொறுத்துச் சொல்லக்கேளு
சித்தமுடன் நீராகரத்தி லவணமிட்டு
சாப்பிடவே பேதியது ஜாடும்பாரே.

(இ-ள்) முத்தெண்ணை அன்னகாடி புளித்தமோர் இவைமூன்றும் சமமாகச் சேர்த்து அரிக்கால்படி யுள்ளதாய் குடித்து சற்றுநேரம் பொறுத்து நீராகாரத்தில் உப்புகரிக்கப்போட்டு ஒருகுவளைசாப்பிட பேதியாகும் பத்தியமில்லை-எ-று.

பித்தநேகத்திற்கு நீராகாரபேதி.

சிவதைவேர்புரசைவித்து இவைகள்ரெண்டும்
சேர்த்துக்கொள் வகைக்குகால்பலமதாக
இவைரெண்டும்பாலில்வேக அவித்தெடுத்து
இந்துப்புப் பலமரிக்கால் கூடச்சேறு

கவனமதாய்உலர்த்தி சூரணித்துக்கொண்டு
　கனிக்காகவாழாக்கு நீராகரத்தில்
உவர்ப்பாகலவணமிட்டுத் தூளைப்போட்டு
　உண்டிடவேபேதியது வாகும்பாரே.

(இ-ள்) சிவதைவேரும் புரசைவித்தும் வகைக்கு பலம்காலாகவெ டுத்து பாலில் வேகவைத்து யெடுத்து உலர்த்தி சூரணஞ்செய்து வைத்துக்கொண்டு அதில் இந்துப்பு அரிக்கால்பலம்கலந்து பிறகு ஆழாக்கு நீராகரத்தில் உப்பு சரிக்கப்போட்டு மேற்படி தூளையும் அதில் போட்டு சாப்பிடவும் பேதியாகும் பகலில் சூப்புசாதம் அல்லது மிளகுநீர் சாதம் சாப்பிடவும்-எ-று.

வயற்றிலுள்ளகிமிபூச்சிவிழபேதிமுறை.

முருங்கைவேர்எலிச்செவியுந் திருபலாதி
　மூன்றுமேயோரிடையாய் நிறுத்தெடுத்து
நருங்கவேதானிடித்து யெடுத்துக்கொண்டு
　நேராகஅரைபடிதான் சலத்தில்போட்டு
குருங்கவே மூன்றுபங்கு சுண்டாக்காச்சி
　குழவிகட்குசங்களவு யீந்தால்போதும்
பெருங்கவேபெரியோர்கள் வாழாக்குண்ண
　பொல்லாதகிமிரியது விழுகும்பாரே.

(இ-ள்,) முருங்கைவேரும் யெலிச்செவியும் திருபலாதியும் இவைகளை நரிக்கி யொழுஞ்செய்து குழந்தைகட்கு சங்களவு கொடுக்க கிமிரிவிழும் பெரியவர்களுக்கு ஆழாக்குகொடுக்கவும் அரைபடிசலம்வைத்து ஆழாக்கு யிரக்கவேண்டும் மிளகுநீர்சாதம் சாப்பிடவும் பத்தியமில்லை-எ-று.

நாக்குப்பூச்சிவிழபேதிமுறை.

புரசைவித்துபேய்பீர்க்கன் பெரண்டையோடு
　புகழானவோமமுடன் யிவைநாலுந்தான
நிரையாகவகைக்குவொரு பலமதூக்கு
　நீறரைப்படியதனில் யிடித்துப்போட்டு
குரையவேநாலிலொன்றும் வற்றக்காச்சி
　குடித்திடுவாய் மூன்றுநாள்காலைதான்
வரையுமொருநாக்குப்பூச்சி வந்தேவிழும்
　வகுத்தயிச்சாபத்தியத்தை வரிந்துவுண்ணே.

(இ-ள்) ஓமம் புரசவிரை பேய்பீர்க்கு பிரண்டை இவை நான்கும் வகைக்கு பலம் வொன்றாக யெடுத்து இடித்து அரைப்படிசலம வைத்து இடித்ததூளை சலத்தில்போட்டு அடுப்பேற்றி நாலிலொன்றாக

வற்றக்காச்சி மூன்றுநாள் காலையில் சாப்பிட நாக்குப்பூச்சிகள் பந்து பந்தாய் வந்துவிழும் இச்சர்பத்தியமாயிருக்கவேண்டும்.-எ-று.

குழந்தைகட்கு மலசலகட்டுக்குபேதிமுறை.

இலைக்கள்ளி வேப்பம்பட்டை இவைகள்ரெண்டு
எடுத்துக்கொள் வகைக்கு பலமஞ்சதாகும்
நலமாக மிளகு சுக்கு கடுக்காயுள்ளி
நாலுவெவ்வேர் ஒண்ணேகால் பலமேதூக்கு
குலமாக ரவியுலர்த்தி யிடித்தெடுத்து
கொற்றவனே சீலையிலே வடித்துக்கேளு
மூலைப்பாலில் காசிடைதரன் குழவிக்கீய்ய
மூண்டதோர் மலசலங்கள் வெளியதாமே.

(இ-ள்.) இலைக்கள்ளி வேப்பம்பட்டை இவை வகைக்குபலம்-டு யாகக்கொள்ளவும் மிளகு உள்ளி சுக்கு கடுக்காய் இவை வகைக்கு பலம்-கவ லாகபெடு இந்த சூ-தினுசும் வெய்யிலில் உலர்த்தி யிடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு குழந்தைகளின் பலமறிந்து மூலைப்பாலில் அல்லது வென்னீரிலாவது ஒருகாசுயிடை கொடுக்கமல சலக்கட்டு வெளியாம்.எ-று.

பேதிகட்டுதீர்க்கு அமிர்தசஞ்சீவி லிங்கக்குழம்பு.

வங்காரம் ஜாதிலிங்கம் ரெண்டுபங்கு
வாமணக்கன்பருப்பதிலே நாலுபங்கு
பொங்கமுடன்வாளம்யெட்டுப் பங்குசேர்த்து
புகழாகயிவைகளெல்லாஞ் சுத்திசெய்து
தங்கவேகுண்டுமணிப்பிரமாணந்தான்
தான்கொடுக்க குளிர்நீரில் பேதியாகும்
அங்கனவேவென்னீரில் தான்கொடுக்க
ஆகாதுபேதியென்று வரிந்துகொள்ளே.

(இ-ள்.) ஜாதிலிங்கம் வங்காரம் இவைவகைக்கு யிடைரெண்டா கவும் ஆமணக்கன்பருப்பு நாலிடையாகவும் நேர்வாளம் யெடை எட் டாகவும் இவைகளையெல்லாஞ் சுத்திசெய்து அரைத்துவைத்துக்கொ ண்டு குண்டுமணிப்பிரமாணம் யெடுத்து குளிர்ந்தநீரில் கொடுக்க பே தியாகும் வென்னீரில் கொடுக்க பேதிகட்டும்.எ-று.

விரோசனப்பேதிமுறை.

வெள்ளைக்காக்காணாய்வேர் திப்பிலியும்
விராகனிடைவகைக்கு வொன்றாகசேறு

கொள்ளவேமிளகதுவோ விராகன்றெண்டு
  கூட்டியேயிவைமூன்றுஞ் சொல்லக்கேளு
விள்ளவேதண்ணீர்விட் டரைத்துக்கொண்டு
  விராகனிடைகுளிர்ந்தநீர் தன்னிலுண்ண
கள்ளமிலாபேதியது வாகுமப்பா
  கண்டுக்கொளிச்சாபத்திய மென்றுதானே.

(இ-ள்.) வெள்ளைக்காக்கணும்வேர் திப்பிலி இவைரெண்டும் ரூ கைக்கு விராகனிடை-உ-மிளகு விராகன் இரண்டு இம்மூன்றுங்கூட்டி ஜலம்விட்டு அரைத்து விராகனிடை யெடுத்து சலத்தில் கலக்கி யுண்ணபேதியாகும் பத்தியம் இச்சாபத்தியம்—எ-று.

சண்பகப்புமாத்திரைபேதிமுறை.

சண்பகம்யேலமுடன் லவுங்கம்கோஷ்டம்
  சரியானகடுகுரோ கணியோடைந்தும்
பண்பாகவகைக்கதுநான் விராகனென்று
  பகருமொருசுத்திசெய்த நேர்வாளங்கேள்
இன்பமுடன்விராகனைந்துக் கூடச்சேர்த்து
  இசைவாகவென்னீர்விட் டரைத்துக்கேளு
தன்மையுடன்அரைக்கழஞ்சு உருண்டைசெய்து
  தான்கொடுக்கதேனிலேதான் பேதியாமே

(இ-ள்.) செண்பகமும்-யேலம்-லவுங்கம்-கோஷ்டம் கடுகுரோகணி இவையைந்தும் வகைக்கு ஒருவிராகனிடை சேர்த்துகூட சுத்தி செய்த நேர்வாளம் விராகனிடை யைத்துங்கூட்டி வென்னீர்விட்டரைத்து அரைகழஞ்சுப்பிரமாணம் உருண்டைசெய்து வைத்துக்கொண்டு தேனிலாவது சுக்கு கியாழத்திலாவது ஒருமாத்திரை கொடுக்க பேதியாகும் முளகுநீர்சாதம் சாப்பிடவும் முருங்கை சுத்திரிபிஞ்சு சேர்க்கவும்—எ-று.

தீத்திப்புசுகபேதிகுழம்புமுறை.

ஓமஞ்சுக்குமிளகுடனே இவைகள்மூன்றும்
  உத்தமனேவிராகனிடை வகைக்கோவொன்று
சேமமாம்ரஸ்தாளி பழமோபத்து
  சேரப்பாதிராக்ஷி பழம்பலமேயஞ்சி
சோமப்பாகடுகுரோகணி பலமோமூன்று
  சுத்திசெய்தநேர்வாளம் பலமோவஞ்சி
ஆமப்பாகடுகெண்ணை பலந்தானென்று
  ஆவின்னெய்பலன்றெண்டு சேர்த்துகேளே

(இ-ள்) ஓமம்-சுக்கு-மிளகு இவைமூன்றும் வகைக்கு விராகனி டையொன்று ரஸ்த்தாளிப்பழம்-ம--தீராகஷிப்பழம் பலம் - ரு-கடுகுரோ கணிபலம் மூன்று சுத்திசெய்தசேர்வாளம் பலம்-ரு-கடுகெண்ணெபல மொன்று ஆவின்நெய் பலம்ரெண்டுசேரும்—எ-று.

சேர்த்துமேபத்தோடு புதியத்தேனைப்
சிக்கெனவேபலமைந்து கூடவிட்டு
நேர்த்தியாக்ப்கல்வமிட்டு நாலுசாமம்
நன்றாகவரைத்ததனை வழித்தெடுத்து
காற்றுபோகாகல்ஜாடி தனிலேவைத்து
காசிடைதான் அப்பத்தில் குழவிக்கே
வார்த்திடவேசுகபேதி யதிகமானல்
வசம்புசுட்டுவெந்நீரில் குழைத்துயீயே.

(இ-ள்) புதியதேனைப் ஐந்து பலம் ஊற்றி கல்வத்தில்யிட்டுநாலு சாமம் நன்றாய் அரைத்து வழித்தெடுத்து காற்றுபோகாமல் யிருக்கி ன்ற கல்ஜாடியில் இந்தமருந்தைபோட்டு வைத்துக்கொண்டு குழந் தைகளுக்கு காசியிடையெடுத்து அப்பத்தில் கடவிகொடுக்க யிளப்பி ல்லாமல் சுகபேதியாகும் அப்படிபேதியதிகமானல் வசம்பை வெந்நீரில் குழைத்துக்கொடு பேதிநிற்கும் பத்தியம் இச்ச மாக யிருக்கவேண்டும். எ-று.

சுகபேதியெண்ணெமுறை.

முருங்கைபட்டை மூக்கரனைச் சாரைவேரும்
முதலாகயீருள்ளி இவைகள்மூன்றும்
நெருங்கவேசமனிடையாய் நிறுத்தெடுத்து
நேராகதட்டியதில் சாறுவாங்கு
தருங்கவேமுக்கெண்ணெ சமனைச்சேர்த்து
தான்காச்சிசிறுகரண்டியுண்ணக்கேளு
சிரங்கோடுமலபங்கம் சேராதோடும்
சித்தியென்றேயிச்சா பத்தியத்தைக்காரே.

(இ-ள்.) முருங்கைப்பட்டை மூக்கரணைச்சாரைவேர் யீருள்ளி இவைகள் மூன்றுஞ் சமனிடையாக நிருத்துயிடித்து சார்பிழிந்து அந்தச்சாரளவு விளக்கெண்ணெவிட்டு அடுப்பிலேற்றி காச்சி யிரைக் கிவைத்துக்கொண்டு ஒருகரண்டிவீதங்கொடுக்க பேதியாகும் கரப்ப ன் சிரங்கு இவைகள்தீரும் இச்சாபத்தியமாக யிருக்கவேண்டும்எ-று

கியாழபேதிமுறை.

நிலாவிரை-கடுக்கா-சடுகுரோகணி-சுக்கு-மிளகு-இந்த-ரு சையும் வகைக்கு அரைபலமாக யெடுத்து-நசிக்கி மூன்றுழாக்கு சல த்தில் நசிக்கி யதைப்போட்டு அடுப்பிலேற்றி காச்சி மூக்காலாழாக் குக்கு யிறக்கி இந்துப்பு அரைபலம்போட்டு சாப்பிடபேதியாகும்பத் தியமில்லை

சீதபேதிகட்டும்முறை.

பசறைக்கீரையிடித்து ஆழாக்குச்சார் பிழிந்து பனவெல்லம் இரண்டுபலம்போட்டு யிப்படி மூன்றுநாள்சாப்பிடவும் பேதிகட்டும் மீன்கருவாடுநீக்கவும்.

சீதபேதிக்குவேறுமுறை.

கையால் ஒருபிடி மிளகெடுத்து உழக்கு பெருமைதயிர் கொண்டுவந்து மிளகைப்பதிற்போட்டு இராமுழுதும் ஊறவைத்து காலையில்மிளகையெடுத்து மைபோலரைத்து ஒருகோப்பையில் போட்டு கால்பலம் நெய்விட்டு குழம்பாய்கலக்கி மெழுகுபோல்செய்து சீனிசர்க்கரை இரண்டுபலம்போட்டு காலைமாலை மூன்றுநாள்சாப்பிட சீதபேதி நிற்கும்

பேதிக்கு யெண்ணைமுறை.

சுக்கு-பாக்கு-சித்தரத்தை-மிளகு இவை நான்கும் வகைக்கு பலம் ஒன்றாகவும் கடுகுரோகணி பலம் அரையாகும் இந்துப்பு அரை பலமும் கடுக்காய் இரண்டுபலமும் ஆக இந்தயேழுதினிசையும் நரிக்கிபொழமிட்டு காலாழாக்கு சலத்திர்க்குபிருக்கு அத்துடன் சித்தாமணக்கெண்ணை ஒருபலம்விட்டு சாப்பிடவும் பேதியாகும் யிச்சாபத்தியம்.

இராத்திரிபேதிக்கு.

வாளம் பூசம் ரசபஸ்பம் இவைமூன்றும் வகைக்கு பலங்காலாகவாங்கி கல்வத்தில்யிட்டு க-பிடி சாதம்போட்டு அரைத்து மிளகுபிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலுலர்த்தி வைத்துக் கொள்ளவும்இராத்திரியில் சாதம்சாப்பிட்டு படுக்கும்போது கொஞ்சம் சாதத்தில் முழுமாத்திரையாக திரேகத்திற்கு தக்கினவாமஒன்று அல்லது இரண்டுமாத்திரை வைத்து முழுங்கி விடவும் மூன்றாவது ஜாமமுதல் பேதியாகும் திரேகத்திற்கு அலிப்பிராது காலையில் சூப்புசாதம் சாப்பிடவும் ரசபஸ்பம் செய்ய சாத்தியப்படாவிட்டால் மருந்துகடையில் கால்மல் என்றுகேட்டால் கொடுப்பார்கள்.

பேதிக்குகாசிகட்டிமாத்திரை.

காசுக்கட்டி வராகனிடை ௬ தேன்விட்டு க ஜாமம் அரைத்து குண்டுமணிப்பிரமாணம் மாத்திரைசெய்து வைத்துக்கொள்ளவும் அனுபானம் க மாத்திரையை பொடித்து வாயில்போட்டு கொஞ்சம் ஜலங்குடிக்கவும் பேதியாகும் வயற்றுவலி வாந்தி கடினமானபே

திகண்டால் எலுமிச்சம்பழஞ்சார் குடிக்கநிற்கும் அல்லது குளிர்ந்தஜலத்தில் குளித்துவிட்டு மோர்சாதஞ் சாப்பிடநிற்கும் மாலையில் மிளகுகியாழம் சாப்பிடவும்.

வாலைபேதிக்குளிகை.

மிளகு வராகனிடை-டு வாளம் வராகனிடை டு சுக்கு ஓமம் ரோகணி ஆமைஓடு கோஷ்டம் வகைக்கு வராகனிடை க இவைகளெலாங் கல்வத்திலிட்டு பழஞ்சார்விட்டு அரைத்து மிளகுப்பிரமாணம் மாத்திரைசெய்து வைத்துக்கொள்ளவும் க மாத்திரையை முலைப்பாலில் இழைத்து குழந்தைகளுக்கு கொடுக்க பேதியாகும் சன்னிசுரம் தோசுரம் தீரும்' அதிகபேதியானால் வென்னீர்சாதங் கொடுக்கவும்.

பூவரசன்பேதி.

உண்ணுநீ புரசைவித்து ஆவின்பாலில் உரிதியுடன் அரைத்துண்ணபேதியாகும். சண்ணுமடாநோயெல்லாந் திருந்திரேகம் சவுக்கியமாம் சண்டாளக்கிறிமிசாகும் நண்ணுகின்றகிறிமிசாகும், . நண்ணுகின்றகிறிமிசாக யின்னமொன்று நவிவ்கொன்றை மரத்துடைய கொழுந்துவாங்கி, வண்ணமுடனுப்பில்லாத விழ்த்தேபுண்ண மற்றுனாள் கூண்டோடே விழும்பாரே.

(இ-ள்.) புரசன்வித்து பலங் வ யெடுத்து அம்மியிலாவது கல்வத்திலாவது வைத்து அரைதது ஆழாக்கு பசும்பாலில்கலக்கி சாப்பிட பேதியாகும் வயற்றிலுள்ள கிரிமிபூச்சுகள சாகும் அன்று யிரவில் சரக்கொன்னை மறத்தினுடைய யிலையில் கொழுந்தாகக்கொண்டு வந்து உப்புசேர்க்காமல் அவிழ்ததுதின்ன மற்றுனாள் காலையில் மலத்தினோடு கூண்டாகவந்துவிழும்—எ-று.

துவரைபேதி.

வீழுமடாதுவரையுடபேதிகேளு மிதபாகநற்றுவரை வேகவைத்து, ஆழுமந்ததுவரைநீக்கி ஜெலத்தைவாங்கி அப்பனே கரும்புவெல்லமதிலேபோட்டு, சூழுமந்ததுவரைதான்வெல்ல நீரைசோறுமனுண்டுவரபேதியாகும், தாழுகின்றதுவரையிலே மிளகுபோட்டு தண்ணீர்போல்காச்சிபகல்சாத முன்னே.

(இ- ள்.) முழுதுவரை ஆழாக்கு கொண்டுவந்து மூன்றுஆழாக்குஜலம்வைத்து ஆழாக்குசெலத்திற்கு யிறைக்கி நெல்லவெல்லம் அரைபலம்போட்டு ரசம்வைத்து சாதம்சாப்பிடவும்—எ-று.

மூன்றும்பாகம் முற்றிற்று.

☞ இனி நான்காம்பாகம், சகலவியாதிக்கும் மாத்திரைவகுப்பு.

உ

கடவுள் துணை.

பதினெண்சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

வைத்திய திரவுகோல்.

நான்காம்பாகம்.

சகலவியாதிக்கும் மாத்திரைமுறைகள்.

கலி-விருத்தம்.

நான்காம்பாகம் நலம்பெறப்புவியினில்
பாங்காய்மாத்திரைப் பரணியுரைத்திட
நீங்காமலெந்தன் நாவிற்குடிபுகும்
ஓங்காரியுமை யருள்சுதனைகாப்பரே.

முகவுரை-விருத்தம்.

சித்தரவர் மருமமதாய்ச் சொன்னநூலை
ஜெகத்தோர்க்குத் தெளிவாக வேண்டுமென்று
உத்தமனேபதினெண்பேர் நூல்திரட்டி
உண்மையென்றவனுபோகங் கண்டுதானும்
பத்தியதாய்பண்டிதரே யின்நூல்தேடி
பார்மீதுமாத்திரைகள் செய்யுமாற்கம்
சித்தமதாய்செஞ்சி யேகாப்பரந்தான்
செப்பினேனன்னை முறையாய் செய்துபாரே.

நான்முக விருத்தம்.

ஜன்னிமுதலானதற்கும் ஆனந்தபயிரவிமாத்திரை.

கெந்தகம்நாவிக்கிழங்கு ஜாதிலிங்கம்
கிருபையுடன் வெங்காரஞ் சூதஞ்சேறு
தொந்தமுள்ள மனோசிலை யிவைகளாறும்
தோணவேவகைக்குவிரா னிடையேவாங்கி
அந்தமுள்ளவெலிமிச்சன் பழஞ்சார்விட்டு
அரைத்துசிறுபயறளவு மாத்திரைசெய்து
பங்கமறும்முலைப்பாலில் ஜன்னிக்குண்ண
பறக்குமடாசுரத்திற்கு இஞ்சிச்சாறே.

(இ-ள்.) நாவிக்கிழங்கு கெந்தகம் சூதம் ஜாதிலிங்கம் மனோசிலை வெண்காரம் இந்தசரக்குகள் சு-ம் வகைக்கு விராகனிடை க-ன்று

வாங்கி யெலிமிச்சன்பழஞ்சாற்றில் இரண்டுஜாமம் அரைத்து சிறு பயரளவு மாத்திரைசெய்துவைத்துக் கொள்ளவும் ஜன்னிக்கிமுலைப் பாலில் கொடுக்கவும் குளிர்காச்சலுக்கு இஞ்சிச்சாற்றில் கொடுக்க தீரும் இச்சாபத்தியம்.

குழந்தைகள்விடாதகழிச்சலுக்கு கட்டுவாதிமாத்திரை.

வ-ம் ஜாதிக்காய் ஜாபத்ரி அதிவிடையம் அபினி யிந்த நாலு தினுசும் வகைக்கு விராகனிடை உ0-பாக நிறுத்தெடுத்து நல்லெண்ணெயில்தோய்த்து உ-ஜாமம் அரைத்து பணவிடையாக உருண்டைசெய்து முலைப்பாலில் கொடுக்கவும் க. நாளைக்கி காலை மாலை உச்சி மூன்றுதடவையும் கொடுக்க பேதினிற்கும்.

கிராணிகழிச்சலுக்கு.

ஜாதிக்காயபினியொரு லவங்கங்கிராம்பு
சரியானஅதிவிடையம் சுக்கோடாறும்
ஓதியேவகைக்குவொண் ணேகால்விராகன்
இடையாகநிறுத்தெடுத்து யியம்பக்கேளு
மாதளம்பிஞ்சிரெண்டில் யெள்ளெண்ணெவார்த்து
மரவாமல்கறிக்கிமுன் தினுசுஞ்சேர்த்து
ஆதியென்றதயிர்வார்த்து அரைத்தெடுத்து
அருந்துவாய்சுண்டக்காயளவுதானே.

(இ - ள்.) அபினி லெவங்கம் ஜாதிக்காய் அதிவிடையம் கிராம்பு சுக்கு வகைக்கு-கவ-விராகனிடையாக யெடுத்து மாதளம்பிஞ்சி யிரண்டு எண்ணெவார்த்து கரிக்கி மேற்படி தினுசுகளுங்கூட்டி தயிர்வார்த்து அரைத்து சுண்டக்காய்பிரமாணம் உருண்டை செய்துதயிரில் மூன்றுநாள் கொடுக்கத்தீரும் இச்சாபத்தியம்.

மாந்தகழிச்சலுக்குமாத்திரை.

வ-ம்.ஜாதிலிங்கம் விராகனிடை ச திப்பிலி விராகனிடை க-ஆவின்பால்விட்டு ஒருஜாமமரைத்து பயரளவு மாத்திரை செய்து சீசாவில் வைத்துக்கொள்ளவும் (அனுபானம்) கரசனுங்கண்ணி மிளகு நாயுரிவிவேர் பிரண்டைவேர் வசம்பு இந்த ரு தினுசும்சாம்பலாக்கி கருஞ்சீரகம் வெடிக்கவிட்டு கொஞ்சியிலையை சிவக்கவருத்துஉழக்கு சலம்விட்டு சுக்கு தட்டிபோட்டு ஆழாக்குகியாழமாக காச்சியிரைக்கி ஒருபாலடை கியாழத்திற்கு ஒருமாத்திரை யிழைத்துக் கொடுக்க மாந்தக்கழிச்சல் நிர்க்கும்.

வெள்ளைக்குமாத்திரை.

ரசகற்பூரமொடு ரசசெந்தூரம்
வெவ்வேறாய்விராகனிடை ஐந்துகொள்ளு
சரியாககெந்தகந்தான் விராகன்கூட்டு
சங்கங்குப்பிசாற்றிலொரு ஜாமமாட்டி
வசமாகபணவிடைதான் குளிகைசெய்து
வரிந்தியேயொருமாத்ரை சுக்குதூளில்
நிசமாகமூன்றுநாள் காலைபுண்ணு
நிலைவிட்டுவோடுமடா தீராவெள்ளை.

(இ - ள்.) ரசகற்பூரம் விராகனிடை ரு ரசசெந்தூரம் விராகனிடை ரு கெந்தகம் விராகனிடை க இந்தமூன்றும் கல்வத்திலிட்டு சங்கங்குப்பிசாற்றினால் க ஜாமமரைத்து பணவிடைபிரமாணம் குளிகை செய்து சுக்குத்தூள் ஒருகிட்டிகையில் ஒருமாத்திரைவைத்து காலையில் கொடுக்கவும் ௩ நாள்கொடுக்க தீராவெள்ளை மேகப்பிடிப்பு தீரும் இச்சாபத்தியம்.

தாபசுரத்திற்குமாத்திரை.

அரிதாரம்விராகனது மூன்றேயாகும்
அதனோடுரசம்வொன்று கெந்திரெண்டாம்
சரியானமனோசிலை விராகனொண்ணு
ஜாதிலிங்கமைந்தோடு வெங்காரமாறு
நிரையானகடுகுரோ கணிதானேழு
நேர்வாளயெட்டுடனே நாபிவொண்ணு
குறையாமல்பழஞ்சார்விட் டரைத்துக்குன்றி
கோரியேமாத்திரைநீ செய்துலர்த்தே.

(இ-ள்.) ரசம் விராகனிடை க கெந்தி விராகனிடை உ அரிதாரம் விராகனிடை ௩ மனோசிலை விராகனிடை க ஜாதிலிங்கம் விராகனிடை ரு வெண்காரம் விராகனிடை சூ கடுகுரோகணி விராகனிடை எ சுத்திசெய்த நேர்வாளம் விராகனிடை அ நாபி விராகனிடை க இவையெல்லாம் பெலுமிச்சப்பழஞ்சார்விட்டரைத்து குன்றிப் பிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும் யிஞ்சிச்சாற்றில் கொடுக்கவேண்டியது இச்சாபத்தியம்.

லவுங்காதிமாத்திரை.

கேள்ப்பாவாளமுடன் லவுங்கந்தானும்
கண்மணியேவகைக்குவிரா னிடை தானொன்று

கேளப்பா வங்காரம் பூரலிங்கம்
   கருத்தாக விராகனெடை யொன்று சேர்த்துக்கொள்ளு
கேளப்பா பழஞ்சார்விட் டரைத்துக்குன்றி
   கணக்காக மாத்திரைதான் செய்துலர்த்தி
கேளப்பா இஞ்சிச்சாற்றில் சுரத்திற்குண்ணு
   கெடுதிசெய்யும் ஜலுப்புக்கோ முலைப்பால்தேனே.

(இ-ள்.) லவுங்கம் வாளம் இவைரெண்டும் வகைக்குவிராகனிடை க பூரலிங்கம் வங்காரம் இந்தமூன்றும் வகைக்கு விராகனிடை க இவைகளை கலவத்திலிட்டு எலுமிச்சம்பழம் சார்விட்டு உ ஜாமம அரைத்து குன்றிமணிப்பிரமாணம மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு சுரத்திற்கு இஞ்சிரசத்தில் கொடுக்கவும் ஜலுப்புமுதலானதுக்கு தேன் அல்லது முலைப்பாலில் சாப்பிடதீரும்.

இராஜபூபதிமாத்திரை.

வ-ம் உலர்ந்தலிங்கம் நெல்லிகெந்தகம் வெங்காரம் வாலைரசம் நாபி மனோசிலை சுக்கு திப்பிலி மிளகு ஏலரிசி இவையெல்லாம் வகைக்கு விராகனிடை க இவைகளை கல்வத்திலிட்டு இஞ்சிச்சாற்றிலொருஜாமமரைத்து மிளகளவு மாத்திரைசெய்து வைக்கவும் அனுபானம் முலைப்பால் தேன் திரிகடுகுசூரணம் இஞ்சிரசம் இதில் (க) மாத்திரை கொடுக்க சகலசுரமும் தோஷமும் தீரும் கடுப்பத்தியமாக யிருக்கவேண்டும்.

சுரங்கள் ஜன்னிக்குவைரவானந்தக்குளிகை.

சுக்கோடுமிளகுதிப்பிலி வெங்காரந்தான்
   சேர்த்துக்கொள் ரசம்நாபி நெல்லிகெந்தம்
பக்குவமாய்ஜாதிலிங்கம் இவைகளெட்டும்
   பகுத்துமேவகைக்குவிராகனிடைதானொன்று
சிக்கனவேபழஞ்சார்விட் டரைத்துக்கொண்டு
   செய்யப்பாஉளுந்தளவு மாத்திரைதான்
நீக்கமேசுத்தியோடு அனுபானங்கள்
   நிகழ்த்தியவாசகத்தில் கண்டுவுண்ணே.

இ-ள். சுக்கு திப்பிலி மிளகு வெங்காரம் ரசம் நாபி நெல்லி கெந்தகம் ஜாதிலிங்கம் இவைகளை கிரமப்படி சுத்திசெய்து க- விராகனிடையாக நிறுத்தெடுத்து எலுமிச்சம்பழஞ் சார்விட்டு அரைத்து உளுந்துப்பிரமாணம் மாத்திரைசெய்து சீசாவில் வைத்துக்கொள்ளவும் அனுபானம் இஞ்சிசுரசம் தேன் முலைப்பால் பஞ்சமூலக்கியாழம் இவைகளில் எதிலேனும் க மாத்திரை யிழைத்துக் கொடுக்கவும் நோய்க்குதக்கவாறு யோசித்து இரண்டுவேளை கொடுத்தாலுங்கொடுக்கலாம் சன்னிசுரம் சிலேற்பனந்தீரும் கசப்பு புளிப்பு மாங்கிஷம் நீக்கவும்.

ஜீவசஞ்ஜீவித்துளிகை.

வ-ம்.—சுக்கு திப்பிலி கடுக்காய் தான்றிக்காய் வசம்புசித்திரை மூலம்வேப்பட்டை சீந்திர்கிழங்கு சேராங்கொட்டை வாய்விளங்கம் நாபி இவைகளை சமனிடையாக தூக்கிகல்வத்தில்யிட்டு கோசலம்விட்டரைத்து குண்டுமணி பிரமாணம் மாத்திரைசெய்து நிழலுலர்த்திபுட்டியில் போட்டுவைத்துக் கொள்ளவும் இதற்கு அனுபானம் அஜீரணத்திற்கு க மாத்திரை வாந்தி பேதிக்கு உ-மாத்திரை பாம்பின் விஷத்திற்கு ந-மாத்திரை சன்னி பாதத்திற்கு நான்கு மாத்திரையாக திரேகதிடமறிந்து இஞ்சி சாற்றிலிடவும்.

மகாபோகத்துளிகை.

வ-ம். தங்கரேக்கு விராகனிடை (க) கஸ்தூரிவிராகனிடை (க) கோரோஜனைவிராகனிடை (எ,உ) பச்சைகர்பூரம் விராகனிடை (ரு) குங்குமப்பூவிராகனிடை (ரு) மயில்மேனஜனம் விராகனிடை (க) படிகாரசுன்னம்விராகனிடை (உ) இவைகளை பிசுரமூலிரசத்தால் அரைத்து மிளகுபிரமாணம் மாத்திரைசெய்து நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு இரவில் புளிநீக்கி போஜனஞ்செய்தபிறகு (க) மாத்திரை சாப்பிட்டு (ரு) பலம்பசும்பால் சாப்பிடவும் போகத்திற்கு முயலுங்கால் அதிகஉல்லாசமும் மனக்களிப்பும் சகலசீதள சுறசன்னிகளும்நீங்கும்.

பூபதிமாத்திரை.

வ-ம்.—நாபி சுக்கு சூதம் திப்பிலி தாரம் மிளகு கெந்தி காயம் இவைகள் சமனிடையாகச்சேர்த்து சித்திரமூலக்கியாழத்தில் (எ) நாள்அரைத்து மிளகுப்பிரமாணம் மாத்திரைசெய்து தேன் அல்லது இஞ்சிசுரசத்திலிட ஜன்னிசுரதோஷம் வாதம் வாய்வு குன்மம் நாவரட்சி சயகாசம்மேகம் இவைகள்தீரும்.

கஸ்தூரிமாத்திரை.

வ-ம். கஸ்தூரி குங்குமப்பூ கோரோஜனை பச்சைகர்பூரம் லவுங்கம் வால்மிளகு ஏலக்காய் கற்பூரம் ஜாதிக்காய் ஜாபத்திரி மிளகு திப்பிலி மேற்கண்டதினுசுகள் கஸ்தூரிமாத்திரம் (உ) விராகனிடை மற்றதினுசுகளெல்லாம் வகைக்கு (க) விராகனிடையாகவாங்கி லவுங்கக்கியாழத்தில் அரைத்து சிறுபயறு பிரமாணம்மாத்திரை செய்து நிழலுலர்த்தி புட்டியில் போட்டுவைத்துக் கொள்ளவும் தோஷம் நாவரசுஷி ஜனுப்பு தலைபாரம் இதுகளுக்கு முலைப்பாலிலிட தீரும் இச்சாபத்தியம்.

திசைமுகக் குளிகை.

வ-ம். பச்சைகற்பூரம் லவங்கப்பட்டை ஜாதிக்காய் வகைக்குவி ராகனிடை (உ) இதற்குசரியிலிடைவாளம் சேர்த்து குமரிச்சார்விட்டரைக்கவும் உளுந்துப்பிரமாணம் மாத்திரைசெய்து நிழலுலர்த்தி சீசாவில்வைக்கவும் (அனுபானம்) சக்கரையில் (க) மாத்திரை கொடுக்கபேதியாகும் சுரம்தீரும் இச்சாபத்தியம்.

விருத்தம்.

சுரங்களுந்தும் ஜன்னிக்கும் மாத்திரை.

போமென்றசருவரீ பெல்லாந்திரப் புகலுகிறேனனந்த மாத்திரைதான், தாமென்றதிரிகடுகு தாரம்இந்துதனியான வாளமொடு நாவிலிங்கம், வேமென்ற சமனெடைதான் கல்வத்திட்டுவெள்ளுளளிக்குபிலமுடனிந்திச்ச றும், ஆமென்ற ஏழுநாள்மயனம்போல ஆட்டியேகுன்றியளவுண்டைசெய்யே.

இதுவுமது.

செய்தவுண்டை நிழலுலர்த்திச் செப்பிலிட்டுச் சிறப்பான நெற்புடத்தி லிட்டுவாங்கு, தொய்சமுள்ள விந்திச்சார் தேனிலூட்டு தொலையாதஜன்னிபதின் மூன்றுமோடும் மெய்தனுறாமுவேழுதோஷமெங்கே மூளையானபதினெட்டுச்சுரமுமெங்கே, ஐதவண்டவாதமெண்பதுவுமெங்கே அதில் பிறந்தநோபெல்லா மெங்கேபோச்சே.

பிள்ளைகள்சகலகழிச்சலுக்கும் உருண்டை.

வ-ம். ஜாதிக்காய் ஜாபத்ரி லவங்கம் ஏலம் அதிமதுரம் அதிவிடையம் அபினி கஞ்சா குரோசானி கோரக்கிழங்கு வெந்தயம் சீரகம்சிறுநாகப்பு புளியாரை கட்டாக்கிப்பு மாதளம்பிஞ்சு வாழைப்பு இவையெல்லாம் சமமாகசேர்த்து யிடித்து பிட்டவியலாக அவித்தெடுத்து வாழைப்பு சாற்றிலாவது மாதளம்பழம் சாற்றிலாவது அறைத்து மிளகுபோல் உருண்டைசெய்து நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு ஒருமாத்திரையை பொடித்து சக்கரையில் கலந்து கொடுக்கவும் இப்படி அநதி சந்தி கொடுக்க நீங்கும்.

சகலசுரத்திற்குமாத்திரை.

வ-ம். ஆடுதின்னாப்பாளைவேரை நிழலுலர்த்தி கருவாய்ப்பட்டைசமன்கூட்டி பொடித்து வஸ்திரகாயஞ்செய்து எலுமிச்சம் பழரசத்தாலாட்டி பரித்துக்கொட்டை பிரமாணம் மாத்திரைசெய்து இஞ்சிரசம் தேன் இதுகளில் கொடுக்க நீங்கும்.

ஆராதரெணங்களுக்குமோலாம்.

வ-ம். லிங்கம் பூரம் முதார்சிங்கு தினுசுக்கு வ பலம் கொண்டு வந்து கலவத்திலிட்டு மைபோல்பொடி செய்து வைக்கவும் படிகாரம் காலேயரிக்காபலம் ஒரேகட்டியாய் கொண்டுவந்து கட்டைநெருப்பில்வைத்து பொங்கினபிரகு சூரணத்துடன்வைத்து ஞன்னைகயுமை போலரைத்து பசும்வெண்ணை ஒருபலத்தில் கலந்து குழப்பி ஒரு பரணியில் வழித்துக்கொள்ளவும் கடுக்கா காசிகட்டி தினுசு ஒன்றுக்கு கால்பலம் கொண்டுவந்து யிடித்து ஒருபாத்திரத்தில் ஒருபடி தண்ணீர்விட்டு யிந்ததூளை கொட்டிக்காச்சி அரைபடி ஜலத்திற்கு யிரக்கி ரெணத்தை,கழுவி துணியால் துடைத்துவிட்டு யிந்தமுலாமை போடவும் ஆராதரணமாரும்.

பல்லுனோயிக்கிபோடி.

பரந்துபோம்பல்லுநோய் பல்லுக்குத்தல்
   பல்புழுகுரெத்தம்விழல் யிவைகளெல்லாம்
யெருக்கயிலைபழுப்புதன்னை அரைத்துகொண்டு
   யிரண்டுபுரைகந்தைதசுத்தி சாணிபூசி
சிறுக்கவேபுடம்போட்டு சூரணமாக்கி
   சிக்கெனவோருபடியும் பெருக்கம்பாலால்
தருக்கித்துபில்லைதட்டி ஒட்டில்வைத்து
   தட்டாமல்மூன்றெருவால் புடத்தைப்போடே.

போடுமூன்றும்புடமும் போண்டுக்கொண்டு
   பத்திரமாய் அதைவேரே வைத்துக்கொண்டு
தேடவேமுடக்கத்தான் சமூலத்தோடே
   தேரினதாய்கடுக்காயுங் சுக்காங்கல்லு
கூடவேகரிவேலள் பட்டைதுத்தம்
   கூட்டியைந்தும் வோரிடையாயிடித்துதூளாய்.
ஜாடுவாய்ஜலம்விட்டு மைபோலாட்டு
   சாந்துபோலானபின்பு பில்லைதட்டே.

பில்லைதட்டிவெய்யலிலே உலர்த்திகொண்டு
   பின்னெடுந்துஒருவரட்டி யாலேசுட்டு
சொல்லிவைத்த யெருக்கன்சூரணத்திலோடே
   சேர்த்திரண்டும் ஒன்றாகக்கலந்துகொண்டு
பல்லுக்குஅந்திசந்தி யெட்டுநாள்தான்
   பால்மாராமல்துலக்கி வந்தியானால்
தொல்லையர்தபல்லிலுள்ள நோய்களெல்லாம்
   துஷ்டனெ ரேவுன்னைவிட்டு வோடுப்பாரே.

(இ-ள்.) எருக்கம்பழுப்பு ௫0-பலம் கொண்டுவந்து கல்வத்திலி ட்டு கட்டியாய்நெகிழ அரைத்து உண்டைசெய்து துணியால் ரெண்டு புரைசுத்தி சாணியைப்பூசி வெய்யலில் காயவைத்து காய்ந்தபிரகு காடைபுடம்போட்டு தணித்தபிரகு துணியை பிரித்தெடுத்துவிட்டு ஒருபாத்திரத்தில் பெருக்கம்பாலேகொண்டு வந்து அம்மியில் சூரணத்தைவைத்து பாலேவிட்டு நெகிழ அரைத்து பில்லேதட்டி வெய்யலில் காயவைத்து பானேவோட்டை யிரண்டுபில்லே நரிக்கி ஒரு பில்லேயின் பேரில் மருந்தைவைத்து மற்றொருபில்லே மேல்மூடி மூணுவரட்டியி ல்புடம்போட்டு சூரணத்தை ஒரு டப்பியில்வைக்கவும். முடக்கத் தான்வேர்சமூலம் ௫ பலம் கடுக்காதோல் ௫ பலம் கரிவேலம்பட்டை ௫ பலம் மயில்துத்தம் ௨ பலம் யிதுகளை மைபோலரைத்து லேசாக பில்லேதட்டி வெய்யலில் காயவைத்து ஒரு வரட்டியில் சுட்டு எருக் கம்பழுப்பு சூரணத்துடன் சேர்த்து காலே மாலே பல்தேய்க்கவும் பல் னோப் பல்லில்ரத்தம்வருதல் பல்லில் புழுவிழுதல் பல் சொத்தை வி ழாமை தந்தவியாதிகளுக்கு சஞ்சீவியென்றரியவும்.

சாதாரணபல்லுப்பொடி

பாப்பாரமுள்ளியெனுங்கண்டங்கத்திரி
பாண்டத்திலிட்டு கரிக்கியெடுத்ததை
ராப்பகல்நித்தந்துலக்கிவந்திடில்
ராவணன்போலேபடிந்திடும்உண்மையே.

(இ-ள்.) கண்டங்கத்திரிக்காய் முத்தினதாயும் பழுத்சுதாயும் ஒருவீசைகொண்டுவந்து வெய்யலில்காயப்போட்டு காய்ந்தபிரகுஒரு சட்டியை அடுப்பில்வைத்து காய்ந்தகாயை சட்டியில்வாரிப்போட்டு வருத்து சாம்பலானபிரகு ஒருபாத்திரத்தில் வைத்துக்கொண்டுகாலே ஒருசிட்டிகையெடுத்து பல்துலக்கவும் பல்லில்பூச்சி சேராது பல்லுக் குரிதியாம்.

கலிக்கம்.

வ-ம் பெருங்காயம் திப்பிலி மிளகு வெள்ளுள்ளி கிரும்பு இவைசமனிடையா யெடுத்து கலவத்திலிட்டு வெத்திலேச்சார் குப்ப மேனிச்சார் வெள்ளேசாரணேசார்விட்டு ஒருஜாமமரைத்து நிழலுலர்த்தா யுலர்த்திவைத்துக்கொண்டு முலேப்பாலில் உரைத்து கண்ணிலிட ஜன்னி முதலானதும் நீங்கும்.

நான்காம்பாகம் - முற்றிற்று.

☞ இனி - ஐந்தாம்பாகம் சூரணவகுப்பு.

உ

கடவுள் துணை,

பதினெண் சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய.

வையித்திய திரவுகோல்.

ஐந்தாமபாகம் சூரணமுறைகள்.

விருத்தம்.

பூரணமாகயிந்த புவிதனிலுள்ளோரெல்லாம்
சூரணமுறைகடன்னை சுருக்கமாயறிந்துகொள்ள
நாரணன்மருகோனாதி நற்றமிழ்க்குதவிசெய்ய
வாரணமுகத்தோனெங்கள் வைங்கரன்காப்புத்தானே.

முகவுரை - விருத்தம்.

சங்கரனோடயன் மாலுஞ் சத்திகாற்க
சர்வவுயிரும்படைக்கும் பிரமங்காற்க
பொங்கமுடன்வையிதிய திரவுகோலில்
புகழானயிதுஐந்தாம் பாகம்ப்பா.
சங்கையிலாசூரணத்தின் முறைகடன்னை
சாற்றுகிறேன்பண்டிதற்குஞ் சகலபேற்கும்
இங்கிதமாய்கண்ணுற்றுக் களிக்கவேதான்
இயம்பினேன்செஞ்சியேகாம்பரந்தானே.

நூன்முகவிருத்தம்.

திருகடுகுசூரணம்.

சுக்குதிப்பிலிமிளகு யிவைகள்மூன்றும்
சரியிடையாய்தூக்கியே யுலர்த்திடித்து
பக்குவமாய்வஸ்த்திரகாயஞ் செய்துக்கொண்டு
பாலகனேகாலணா யிடைதானப்பா
சிக்கனவேபனம்வெல்லந் தன்னிலுண்ணு
சிராகபதினஞ்சி நாள்தானப்பா
தூக்கமுரும்வாய்வோடு மாந்தக்கழிச்சல்
துஷ்டனென்றேஉன்னைவிட்டு வோடும்பாரே

(இ-ள்.) சுக்கு திப்பிலி மிளகு சரியிடைதூக்கி உலத்தியிடித்து வஸ்திரகாயஞ்செய்து சீசாவில் வைத்துக்கொண்டு வேண்டியபோதுகாலணாயிடை சூரணத்தை பனவெல்லங்கூட்டி பிசைந்து சாப்பிடவும்

அ-ம-மரு-நாள் கொள்ள வாய்வுமாந்தக்கழிச்சல் முதலானவியாதிகள் தீரும் மற்றமேகாதிபற்பங்களுக்கும் இது அநுபானமென்றறிக-எ-று.

மேகராஜாங்கசூரணம்.

(வ-ம்.) வெட்டிவேர் சீரகம் லவங்கப்பட்டை ஜாதிக்காய் ஜாபத்திரி கிராம்பு கோஷ்டம் நெல்லிவற்றல் நிலப்பனங்கிழங்கு அரேணுகம் முந்திரிப்பழம் பேரீச்சம்பழம் குங்குமம்பூ கோரோஜனை சிறுநாகப்பூ தாமரைவளையம் அதின்தாது பச்சைக்கற்பூரம் சந்தனம் திரிகடுகு அதிமதுரம் நெற்பொறி அமுக்குராங்கிழங்குகள் சிங்கி தக்கோலம் குங்குமப்பட்டை மேற்கூறியதினுசுகளெல்லாம் வகைக்குபலம் (௩) யெடுத்து சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து மேற்கூரிய சூரணயிடைக்கு சீனிசர்க்கரைக்கலந்து வேளையொன்றுக்கு திருகடிகைப்பிரமாணம் ஆவின்வெண்ணெயில் (க) மண்டலங்கொள்ளவும் கை கால் யெரிவு யெனும்புரிக்கி நீர்தாரை வழியாய்மோர்போல் யிரங்கும் சுற்பிரமியம் நீர் சிரிப்பு கல்லடைப்புநீர்தாரையெரிவு தேகவரட்சி உடல்சுரம் பித்தட்சயம் தீரும் இச்சாபத்தியம்.

குங்கிலியச்சூரணம்.

குங்கிலியம்ஒருபலந்தான் கொண்டுவந்து
 கொற்றவனேஐந்திளநீர் நீரும்விட்டு
தங்கவேயிவைரெண்டுங் காச்சியேதான்
 தண்ணிரெல்லாம்சுண்டினபின் யிறக்கிக்கொண்டு
பொங்கமுடன்கல்வத்திட் டரைத்துதானும்
 புகழாகஅரிசியிடை நெய்யிலுண்ண
தங்குமொருநாபிரெணம் பரந்தேபோகும்
 தானுரைத்தகைமுறையை கண்டுசெய்யே,

(இ-ள்.) வெள்ளைக்குங்கிலியம் (க) பலம் கொண்டுவந்து ரு யிளநீர் உடைத்து சட்டியிலிட்டு குங்கிலியக்கட்டியை அதில்போட்டு அடுப்பேற்றி நீர்சுண்டுகிறவரையில்யெறித்து பிறகுகுங்கிலியகட்டியை யெடுத்து கல்வத்திலிட்டுப் பொடித்துசூரணமாக்கி புட்டியில்வைத்துக்கொண்டு இரண்டு அரிசியிடை சூரணத்தை வெண்ணை அல்லது நெய்யில் குழைத்துக் கொடுக்கவும் நாபிரெணம் உலர்ந்து சூடுதணியும்.

திராக்ஷிப்பழம்சூரணம்.

(வ-ம்.) முந்திரிப்பழம் திப்பிலி மூலம் திரிகடுகு செங்கழுநீர்கிழங்கு வெட்டிவேர் சந்தனம் விலாமிச்சு தக்கோலம் அதிமதுரம் முத்தக்காசு வில்வப்பூ ஏலம் மல்லி திருபலை நெற்பொறி பேரிச்சம்பழம் பச்சைகற்பூரம் கற்கண்டு இலவங்கப்பத்திரி சிறுநாகப்பூ குகைநீர் இவைகளை யோர்நிரையாக யெடுத்திடித்து சூரணஞ்செய்துக்கொண்டு வேளையொன்றுக்கு (எ) திருகடிகைப்பிரமாணம் சாப்பிட்டுவர பித்

தம் கைகால்யெரிவு வயரெரிவு இரத்தபித்தம் சத்தி கிருகிருப்புத்தி ரும் பித்தபாண்டுதீரும் இச்சாபத்தியம்.

குன்மமாருக்கும் உப்புசூரணம்.

உப்புடனேயெருமைமோர் படிதானொன்று
உளவானகுமிட்டிச்சார் படிதானாகும்
செப்புமொருஇந்துப்பு சவுட்டுஉப்பு
சேரப்பாவெடியுப்பு வளையலுப்பு
தப்பாமல்வகைக்கரிக்கால் ஒன்றாய்போட்டு
தான்காச்சிபூவரசன் குச்சால்கிண்டு
இப்படியேகிண்டிவர சக்கரையாகும்
இரக்கிவிராநிடை நீராகாரத்திலுண்ணே.

(இ-ள்.) உப்புபடி (க) யெருமைமோர்படி (க) வரிகுமட்டிச்சார்ப டி (க) இந்துப்பு வெடியுப்பு சவுட்டுப்பு வளையலுப்பு இவைகள்வகை க்கு பலம் அரிக்கால் இவையாவும் ஒன்றாகப்போட்டு அடுப்பேற்றி யெறித்துக்கொண்டிருப்பதுடன் பூவரசன்குச்சியினால் கிளரவும் சக்க ரைபோலாகும் சமையத்தில் யிரக்கிவைத்துக்கொள்ளவும் ஒருவிராக நிடைஉப்பு வாயில்போட்டுக்கொண்டு நீராகாரம்சாப்பிடவும் வாய்வு சோகை காமாலை எரிவு சுவிசை கிரிச்சினம் கெண்டை இவைதீரும் இச்சாபத்தியம்குன்மம் (சு) க்கும்ஓர்விதகுந்தபிரையோகமிதுவாம்.

சீரகச்சூரணம்.

(வ-ம்.) சீரகத்தை ச பலம் கொண்டுவந்து இஞ்சிச்சாற்றில் சு நா ள் ஊரவைத்து உலர்த்தி அப்பால் மொசுமொசுக்கைசாற்றில் க நாள் ஊரவைத்து உலர்த்திக்கொண்டு ஏலம் திருகடுகு கோஷ்டம் நெல்லி வற்றல் நெற்பொரி வில்வப்பழம் இவைகள் வகைக்கு விரை (உ) யெடுத்து பொடித்து சூரணமாக்கி அதற்குச் சரியிடையாய் சீனிச்சர் க்கரைக்கலந்து வேளையொன்றுக்கு திரிகடுகுபிரமாணம் சாப்பிட்டுவ ர பித்தம் அரோசியம் பித்தவாய்வு கிருகிருப்பு ஊஷ்ணம் வாய்நாற் றம் வழுவழுப்புத்தீரும் இச்சாபத்தியம்.

தாளிச்சபத்ரிசூரணம்.

தேடப்பாஒருபலம் தாளிச்சபத்திரி
திருகடுகுதிருபலாதி யேலங்கிராம்பு
கூடப்பாபத்திரிகை இவைகளெல்லாம்
குணமாகவகைக்குஅரை பலமேவாங்கி
நாடப்பாசூரணித்து வைத்துக்கொண்டு

நலமாகசீனிபலம் மூணுஞ்சேர்த்து
கோடப்பாதிருகடிகை கொள்ளுகொள்ளு
கல்லடப்புவெள்வெட்டை நீர்கட்டும்போமே

(இ-ள்.) தாளிச்சபத்திரி பலம் (க) திரிகடுகு திரிபலாதிவலங்கிராம்புபத்திரி வகைக்கு பலம் (௩) வாங்கி சூரணித்து சீனிசர்க்கரை ௩ பலம் கலந்து திருகடிகைபிரயாணம் சாப்பிட்டுவர மூலக்கடுப்பு ரத்தக்கடுப்பு வெள்வெட்டை நீர்கட்டு கல்லடப்புத்தீரும் பத்தியமில்லை என்றவாறு.

பஞ்சலவணச்சூரணம்.

(வ-ம்.) பஞ்சலவணம் நவாச்சாரம் சத்திச்சாரம் அசுமதாகம் மரமஞ்சள் திப்பிலி திப்பிலிமூலம் மஞ்சள் முள்ளிவேர் கண்டங்கத்திரிவேர் கோஷ்டம் முத்தக்காசு சிறுதேக்கு கருஞ்சீரகம் நற்சீரகம் கடுகு திருபலை அத்தி வாய்விளங்கம் பெருங்காயம் கொடிவேலிவேர் அதிவிடையம் செவியம் பங்கம் பாளைவேர் பெருமரத்துப்பட்டை வெட்பாலையரிசி இவைகளை யோர்நிரையாகபிடித்துச் சூரணஞ்செய்து அதற்குப் பாதிசீனிகலந்து நெய்யில் குழைத்து வுண்ணவும் அஜீரணபேதி கிராணி வாயூரல் வாந்தி சூலை சீதசுரம் பாண்டு காமாலை சுவாசகாசம் க்ஷயம் திமிர்வாய்வு மூலம் இவைகள் தீரும் இச்சாபத்தியம்.

இலைக்கள்ளிவேர்சூரணம்.

இலைக்கள்ளிவேரின்பட்டை யியல்புடன்உலர்த்தக்கேளு
கலக்கமொன்றில்லாமல்நீ கருக்கெனசூரணித்து
நிலைக்கவேகாலைமாலை துட்டிடைதேனிலுண்ண
விலக்கவேவாய்வுனோடு விஷமுதல்நீங்கும்பாரே.

(இ-ள்.) இலைக்கள்ளிவேர் பட்டையை உலர்த்தியிடித்து சூரணித்து வைத்துக்கொண்டு பிரதிதினம் காலை மாலை துட்டிடையெடுத்துதேனில்குழைத்து உண்ண வாய்வுயாவுந் தீர்வதுடன் யெலிமுதலான சிலவிஷங்கள் தீரும் இச்சாபத்தியம்.—எ-று.

ராட்சதசூரணம்.

(வ-ம்.) இந்துப்பு பொட்டிலுப்பு கல்லுப்பு கரியுப்பு வெடியுப்பு வகைக்குவிராகனிடை (உ௩) வாய்விளங்கம் பலம் (க) கருஞ்சீரகம் பலம் (௩) ஓமம் பலம் (௩) இவைகளை யெல்லாம் இடித்துசூரணித்து வஸ்திரகாயஞ்செய்து நிறுத்து அவ்விடைக்கி சமனிடையாய் இண்டம்பட்டை சூரணஞ்சேர்த்து வைத்துக்கொண்டு காலையில் திருகடிசூரணம் யெடுத்து தேன் நெய் இதுகளை ரெண்டுங் கலந்து குழைத்து சாப்பிடவும் பேகம் ஊஷ்ணம் இவைகள்தீரும் பத்தியம் செங்கீரைத்தண்டு துவரை நெத்திலி சுரா இவைகளாகும்.—எ-று.

திப்பிலிசூரணம்.

திப்பிலியுஞ்சீரகமும் இவைகள்ரெண்டும்
திரமாகவகைக்குவிரா னிடையெட்டாகும்
ஒப்பியேநன்றாக உலர்த்திநன்றாய்
உத்தமனேதானிடித்து வுளவைக்கேளு
தெப்பெனவேவஸ்த்திரகாயஞ் செய்துக்கொண்டு
தேடியேதிருகடிகை தேனிலுண்ணு
அப்போதேபரக்குமடா பெருவிக்கந்தான்
அனுபோகமுறையிதனை யறிந்துவுண்ணே,

(இ-ள்.) திப்பிலி விராகனிடை (அ) சீரகம் விரானிடை (அ) இவைகள்ரெண்டையும் உலர்த்தி யிடித்து வஸ்த்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு வேளைஒன்றுக்கு திருகடி தேனில்சாப்பிட பெரும்விக்சம் தீரும் இச்சாபத்தியம்—ஏ-று.

நிலாவரைச்சூரணம்.

(வ-ம்.) நிலாவிரைச்சமூலம் சுக்கு மிளகு விளங்கம் ஓமம் வகைக்கு பலம் க வெடுத்து ரவியில்வுலர்த்தி யிடித்து வஸ்த்திரகாயஞ்செய்து அத்துடன் சர்க்கரை சமனிடையாகக்கலந்து திருகடிகைப்பிரமாணம் சாப்பிட்டுவர வாய்வு பித்தம் ஊஷ்ணம் பொருமல் கபம் விக்கல வாந்தி இவைகள்தீரும்.

வல்லாரைச்சூரணம்.

(வ-ம்) வல்லாரையை பாலிலவித்து ரவியில்உலாத்தி வடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணத்தில்பலம் சு கிராம்பு ஏலம் ஜாதிக்காய் ஜாபத்திரி மாசிக்காய் தாளிச்சப்பத்திரி திருபலாதிவகைக்கு பலம் க வெதிப்பிப்பொடித்து ஒன்றாய்க்கலந்துசர்க்கரைசமன்கலந்து திருகடிகைப்பிரமாணம் நெய்யில் கொள்ள மேகங் காங்கைமூலச்சூடு உடம்பெரிவுதீர்ந்து தேகங்குளிரும்.

சந்தனச்சூரணம்.

(வ-ம்.) சந்தனம் கோஷ்டம் நன்னாரிவேர் கடுகுரோகணி கற்பூரம் சிந்திற் சர்க்கரை முத்தக்காசு மஞ்சள் இலுப்பைப்பூ முந்திரிப்பழம் மதுரம் பூலாக்கிழங்கு ஏலம் தாமரைக்கிழங்கு நெய்தற்கிழங்கு மரமஞ்சள் விலாமிச்சன்வேர் நெல்லிவற்றல் இவைகளைசூரணித்து அதற்குநிகர் சர்க்கரைக்கலந்து திருகடிகைப் பிரமாணம் வெண்ணெயிலாவது ஆவின்பாலிலாவது கொள்ள சீதம் ரத்தம்விழுதல் வாயாலரத்தங்கக்கல் முதலானமேகம் உக திரும் இச்சாபத்தியம்.

கோடிவேலிச்சூரணம்.

(வ-ம்.) கொடிவேலிவேர் புங்கம்வேர் ஆயில்லிபப்பட்டை இவைகளையிடித்து சூரணமாக்கி வகைக்குபலம் (க) கடுக்காய் திப்பிலி கடுகு கருஞ்சீரகம் வகைக்குப்பலம் (௰) இவைகளை வெதிப்பி சூரணித்து வொன்றாய்கலந்து வேளையொன்றுக்கு திருகடிகைப் பிரமாணம்ஒருமண்டலங்கொள்ள வாதவாய்வுபித்தவாதம் தீரும் இச்சாபத்தியம்.

மதுராதிச்சூரணம்.

(வ-ம்.) அதிமதுரம் கோஷ்டம் அக்கிராகாரம் விலாமிச்சுவேர் தக்கோலம் ஏலம் சிருநாகப்பூ மல்லி கிராம்பு சிருதேக்கு மிளகு திருபலை குகைநீர் முத்தக்காசு திப்பிலி லவங்கப்பத்திரி நன்னாரிவேர் பரித்திவிரைபருப்பு நெற்பொரி நற்சீரகம் இவைகள் வகைக்கி விராகனிடை ரெண்டு வெதிப்பிபொடித்து தாளிச்சப்பத்திரிச்சூரணம் விராகனிடை (ச) சீனிபலம் (௰) கூட்டித் திருகடிகைப்பிரமாணம் சாப்பிட்டுவர பித்தம் அரோசிபம் நெஞ்செரிவு கிருகிருப்பு வாந்திதீரும்.

வஜ்ஜிரவல்லிச்சூரணம்.

(வ-ம்.) திருகடுகு திருபலை கல்லுப்பு ஏலம் லவங்கம் சித்ரத்தை திப்பிலி மூலம் கருஞ்சீரகம் நற்சீரகம் பரங்கிப்பட்டை அக்கிராகாரம் இந்துப்பு கிராம்பு சாதிக்காய் சாபத்திரி அமுக்குறாங்கிழங்கு வகைக்கு கழஞ்சு (௩) கடுகுரோகணி வெங்காரம் ஓமம் வகைக்கு கழஞ்சு (உ) நவாச்சாரம் கல்மதம்வகைக்கு கழஞ்சு (க) இவைகளையிடித்துச் சூரணஞ்செய்து அதற்கு நிகர் முத்தினபிரண்டைச்சூரணம் பாதியும் சீனிபாதியுங்கலந்து திருகடிப்பிரமாணம் தேன் நெய் பால் இவைகளில்கொள்ள கபாலவாயவு குன்மம் தாகம் கபம் பித்தம் உஷ்ணம் வெட்டை அபானவாய்வு மூலமாய்வுதீரும்

கூழ்பாண்டச்சூரணம்.

(வ-ம்.) ஒருபெரும் பூசினிக்காயையெடுத்து குடல்மேற்றோல்நீக்கி அறிந்து பிட்டவியலாக அவித்து பிழிந்து சட்டியிலிட்டு ஆவின்நெய்தெளித்து சிவக்கவருத்துசூரணத்துடன் கடுக்காய் தான்றிக்காய்திருகடுகு அதிமதுரம் ஏலம் லவங்கம் சண்பகப்பூ கல்பதம் சீரகம்வகைக்கு கழஞ்சி (க) வெதுப்பி பொடித்து சூரணத்தையும்ஒன்றாய்கலந்து அதர்க்கு சமனிடை சீனிகலந்து வேளையொன்றுக்கு திரிகடிகைபிரமா

ணங்கொள்ள மேகம் பவுத்திரம் மூலம் மூத்திரப்பாளைகிரிச்சனம்பெ ரும்பாடு வெள்ளைக்கடுப்பு மேககாங்கை கல்லடைப்பு நீரடைப்பு இவைகள் நீங்கும்.

இங்குலாதிச்சூரணம்.

(வ-ம்.) பெருங்காயம் வசம்பு சுட்டகரியாதாளம்வேர் ஓமம் மல்லி கோஷ்டம் பொன்முசுட்டைவேர் செங்கழுநீர்க்கிழங்கு கொட்டாங் கரந்தைசமூலம் கொடிவேலிவேர் பஞ்சலவணம் செவியம் ஆனைத்தி ப்பிலி திரிகடுகு சீரகம் வாய்விளங்கம் குருசாணி ஓமம் கருவேப்பிலை ஓர்நிறையாகவெடுத்துசூரணித்து திரிகடிகைப்பிரமாணம் வெந்நீரி ல்கொள்ள அக்கினிமந்தம் வாய்நீரூறல் வாந்தி வெள்ளைக்காளம் விக் கல் தீரும் யிச்சாபத்தியம்.

அக்கினிச்சூரணம்.

(வ-ம்.) கொடிவேலிவேர் திருகடுகு வோமம் சிறுதேக்கு ஆனைத் திப்பிலி கோஷ்டம் இந்துப்பு வகைக்குப்பலம் (க) காயம்வசம்பு க ட்டைகரி வகைக்கு பலம் (வ) கடுகுபலம் (௬) ஓர்நிறைபாய் சூரணி த்து அதற்குசீகர் சீனிகலந்து திரிகடிகைப்பிரமாணம் வெந்நீரில் கொள்ள அசீரணம் மந்தம் பொருமல் கிராணிநீங்கும்.

மேகச்சூரணம்.

(வ-ம்.) வெள்ளாட்டு உதரவழி நீரைப்பிசைந்து வருத்திடித்த தூ ளைவடிகட்டின சூரணம்பலம் (உ) குங்குமப்பூ கோரோசனம் திப்பிலி மூலம் ஓமம் அரத்தைசீரகம் கிராம்பு சுத்திசெய்தமனோசிலை கொப் பொரி கோஷ்டம் வகைக்கு கழஞ்சி (க) வெதுப்பிப் பொடைத்து இருவகைச்சூரணத்தையும் ஒன்றாய்க்கலந்து திரிகடிகைப்பிரமாணம் ஆவிநெய்யில் மண்டலங்கொள்ள சிலேத்மநோய் (கஉ) ம் தீரும்.

நிலவாகைச்சூரணம்.

(வ-ம்.) நிலவாகைசமூலம் சுக்கு மிளகு விளங்கம் ஓமம் வகைக்குப் பலம்(க) ரவியிலுலர்த்தி யிடித்து சர்க்கரைசமன்கலந்து திரிகடிகைப் பிரமாணம் சாப்பிட்டுவர வாய்வு பித்தம் ஊஷ்ணம் பொருமல கபம் விக்கல் வாந்தி தீரும்.

இராஜ அமிர்தாதிச்சூரணம்.

(வ-ம்.) ஏலம் லவங்கம் அதிமதுரம் நற்சீரகம் மகரப்பூ குரோசாணி ஓமம் வால்மிளகு திப்பிலி வாய்விளங்கம் குங்குமப்பூ சீடாமஞ்சி கடுகுரோகணி திப்புலிமூலம் நிலவாகை இவைகளை ஓர்நிரையாய்ச் சூரணஞ்செய்து அதற்குநிகர் சீனிகூட்டி திரிகடிகைபிரமாணஞ்சாப்பிட்டுவர கைகாலெரிச்சல் உள்ளுருக்கி எலும்புருக்கி பிரமியம் கரப்பன் மூலமும் வாதபித்தம் ஊஷ்ணவாய்வு முதலான சகலவாய்வுந் தீர்ந்து தீரமுண்டாக்கும் தேகங்குளிரும்.

பஞ்சலவணச்சூரணம்.

(வ-ம்.) பஞ்சலவணம் நவாச்சாரம் சத்திச்சாரம் அசமதாகம் மரமஞ்சள் திப்பிலிமூலம் மஞ்சள் முள்ளிவேர் கண்டங்கத்திரிவேர்கோஷ்டம் முத்தக்காசு சிறுதேக்கு கருஞ்சீரகம் நற்சீரகம் கடுகுதிரிபலை அத்திதிப்பிலி வாய்விளங்கம் பெருங்காயங் கொடிவேலிவேர் அதிவிடையம் செவியம் பங்கம்பாளைவேர் பெருமரத்துப்பட்டை வெட்பாலையரிசி இவைகளை ஓரிடையாயெடுத்து யிடித்து சூரணஞ்செய்து அதற்குப்பாதி சீனிகலந்து நெய்யிற்கொள்ள அஜீரணபேதி கிராணி வாயூரல் வாந்தி சூலை சீதசுரம் பாண்டு காமாலை சுவாசகாசம் க்ஷயம் திமிர்வாய்வு மூலம் இவைகள்தீரும்.

அஸ்வகெந்திச்சூரணம்.

(வ-ம்.) ஆவின்பாலில் அவித்துச்சுத்திசெய்த அமுக்குரும்வேர் பலம் (௩) சுக்கு யேலம் குகைநீர் வகைக்குப்பலம் (௧௨) கிராம்பு சிறுநாகப்பூ பலம் (௨) திப்பிலிபலம் (௮) மிளகு பலம் (௪) இவைகளையிடித்துச் சூரணஞ்செய்து சீனிபலம் (௪) கூட்டி தேன் யிஞ்சிச்சாற்றிற்கொள்ள மந்தவாய்வு வயற்றுவலி ஆரோசியம் வாதபித்தம் உப்புஷம் நெஞ்சரிவு வாந்தி சயம் ஈளையிருமல் தீரும்.

ஐந்தாம்பாகம் - முற்றிற்று.

☞ இனி - ஆறம்பாகம் பற்பவகுப்பு.

கடவுள்துணை.

பதினெண்சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

வையித்தியதிரவுகோல்.

ஆரும்பாகம் பற்பமுறைகள்.

விருத்தம்.

கூறும்பற்பங் குறைநூலெல்லாமாய்ந்து
சீறுமேசரக் கானவறுபதும்
தேறநீற்றினஞ் செய்யவேபண்டிதர்
காறமாமுனி கடியவரைந்ததே.

முகவுரை - விருத்தம்.

பூரணமாதிருகால முணர்ந்தஞானம்
புண்ணியதன்னடிபணியுங் கருத்துள்ளோர்க்கு
காரணமாம்வையித்திய திரவுகோலை
காட்டியேயாரும்பாகங் கழறுதற்கு
வாரணமாம்சித்தரொடு பாதம்போற்றி
வரையுமொரு பற்பவகையுலகோர்காண
சேரணமாங்கைமுறையா யெவருஞ்செய்யச்
செஞ்சியேகாம்பரமும் வெளியிட்டேனே.

நான்முகவிருத்தம்.

வெள்வங்கபற்பம்.

வெள்வங்கம்நாலுபலம் யெடுத்துக்கொண்டு
அரசம்பட்டைதனையிடித்து வரையக்கேளு
உள்ளபடிகோணிபட்டை யதினில்வைத்து
உத்தமனேவங்கமதை நடுவில்வைத்து
கள்ளமில்லைசுரிட்டியண் சீலைசெய்து
கனைக்காய்முப்பதுவரட்டி புடத்தில்வைத்து
தெள்ளவேயரைத்துநெய்யில் தேடிபுண்ணு
தீருமொருயிருபத்தோர் மேகம்போமே.

(இ-ள்.) வெள்வெங்கம் நாலுபலம்நிறுத்தெடுத்து அரசம்பட்டையை யிடித்து கோணிபட்டையில் வைத்து அதின்னடுவில்வங்கத்

தைதலைவத்து சரிட்டி பண்ணிலைகவசஞ்செய்து (கூ0) வரட்டியில் புடம் போட்டு யெடுத்து கல்வத்தில் அரைந்து சீசாவில்வைத்துக் கொள் ளவும் இதை நெய்யில் கொடுக்க மேகம் (உ௲) ந்தீரும் கடுகு நல்லெ ண்ணெ மீன் பூசினிக்கா ஆகாது எ-று.

கர்ப்பூரசிலாசத்துபற்பம்

வ-ம். சிலாசித்து பலம் (க) பொட்டிலுப்பு பலம் (க) பொரி காரம் பலம் (உ) இவைகளை சுண்ணாம்பு தெளிவுநீரில் அரைத்து ௪ நாளானபிறகு யெடுத்து ௪-பில்லைக்கும் வெவ்வேராக சீலைமண் செய் துஉலர்த்தி கூ0-வது வரட்டியில்புடமபோட பற்பமாம் அதையெடுத் துசீசாவில்வைத்துக் கொள்ளவும் வெண்ணெயிலாவது சீரககியாழத்தி லாவது கொடுக்க நீர் உடையும் குளிர்த்தியானபதார்த்தம் சேர்க்க வும் இச்சாபத்தியம.

சீமைகல்நாற்பற்பம்.

ஐந்துபலங்கல்நாறை யிடித்துடைத்து
அடைத்துமேகுடுவைதனில் பழச்சார்விட்டு
நிந்தையில்லைசார்சுண்ட நிழலில்வைத்து
நேராகயிபமுமாசெய் தைந்துநாள்கார்
பிந்தியேமுப்பாநெரிவில் புடத்திற்போடடு
பினனெடுத்து அரைத்துநீ வைத்துகேளு
தொந்தமாம்வெண்ணெயுடன் நெய்யிலுண்ணு
தொலையுமேமார்நோய்பல் நோயுந்தானே.

(இ-ள்.) கல்நார் ரு பலம் கொண்டுவந்து துண்டுதுண்டாக பொடி த்து புதுகுடுவையில்போட்டு யெலுமிச்சம்பழஞ் சார்விட்டு நிழலில் ஊறவைத்து சுண்டினபிறகு இதேபாதிரியாய் ரு திறம் ஊரவைத்து யெடுத்து கூ0-வரட்டியால் புடம்போட்டு பிறகு கல்வத்திலிட்டு அறை த்து வைத்துக்கொள்ளவும் நெய் அல்லது வெண்ணெயில் கொடுக்க பல்நோய் மார்நோய் இதுகள்தீரும் குடுதணியும் இச்சாபத்தியம் யி ருக்கவும்.

பவளபற்பம்.

வ-ம். கெட்டிப்பவழம் க-பலம் வாங்கி மூசையில்போட்டு அதி ன்மேல் வெள்ளைபாஷாணம் அரைபலம்பொடித்து பவழத்தின் மேல் போட்டு செப்புதகடுதட்டி மேல்வாய்மூடி சீலைமண் ௩-செய்து ௰௫- வரட்டியில் புடம்போடவும் ஆறினபிறகு யெடுத்து வெள்ளெறுக்கன் பால்விட்டு அறைத்து பில்லைதட்டி காயவைத்து ஓட்டிலிட்டு மேல்மூ

டிசீலைமண்செய்து ம வரட்டியில் புடம்போட்டெடுத்து கல்வத்தில் பொடித்து வைத்துக்கொண்டு ஸ்ரீகஸ்பிரசவித்தபோது காணுகிற அசாத்தியமானசன்னிக்கு அரிசியிடை தேனில் கொடுக்க நீங்கும் இது சர்வசன்னிக்குமாகும் இச்சாபத்தியம்.

லிங்கபற்பம்.

லிங்கம்பலம்கடலுப் பாழாக்குங்கொண்டு
நேராககருந்துளசி சாற்றிலாட்டி
லிங்கத்திற்குக்கவசஞ்செய்து சீலைசுத்தி
நவிலுபத்துவறட்டியினால் புடத்தைப்போட
பொங்கமுடன்பற்பமது வாகுமப்பா
பொல்லாதஜன்னிகுளிர் சுரங்களுக்கு
தங்கவேதேன்சர்க்கரை இஞ்சிசுரசம்
தனிலுண்ணஜன்னிகுளிர் பரக்கும்பாரே.

(இ-ள்.) லிங்கம் க-பலம்பெடுத்து கடலுப்பு ஆழாக்குகொண்டுவந்து கருந்துளசிசாரிவிட்டு அரைத்து மேல்படிலிங்கத்திற்கு கவசஞ்செய்து சீலைசுத்திசாபவைத்து ய-வரட்டியில் புடம்போட்டெடு பற்பமாகும் சன்னிதோஷங்களுக்கும் குளிசுரங்களுக்கும் கொடுக்கவும் (அனுபானம்) இஞ்சிசுரசம் தேன்சர்க்கரை இதுகளாகும்.

படிகாரபற்பம்.

வ-ம். சிறியமண்குடுவையில் க-பலம் பசுபவெண்ணையை யிட்டு அதின் மத்தியில் உ பலம் படிகாரம் ஒரேகட்டியாக அதிநடியிலிரங்க சொரிகிவைத்து வாய்பரம் ஒருமூடி சீலை ரு செய்து ரு வரட்டியில் புடம்போடவும் நீர்த்தபஸ்பமாயிருக்கும் அதை வெண்ணையில் மிளகுபிடை கொழைத்துக்கொடுக்க மூணுநாள் ஆறுவேளையில் வெள்ளை நீர்க்கடுப்பு யிதுகள் நீங்கும் மூன்று குன்றுமணியிடை முசுமுசுக்கையிலை மூன்றில் பத்தியாய் அடிக்கி படித்துச் சாப்பிட யிருமல்தீரும் எ-நாள் சாப்பிடவும் தினம்ஒருயிலை அதிகப்படுத்தவும்.

பலகரைபற்பம்.

பலகரைதான்மூன்றுபலம் நிறுத்தெடுத்து
பக்குவமாய்புதுகுடுவை தன்னிலிட்டு
நலமாகபழஞ்சாரிவிட் கவசஞ்செய்து
நாட்டியேபத்தெருவில் புட தனைபோட்டு

வனுவாககல்வத்தில் அரைத்தெடுத்து
வனுபானம்நெய்தேனில் லிந்துவுண்ண
பலமானபக்ககூலை மார்நோய்வாயும்
பதிவிட்டுவோமேடா பரிக்ஷைபாரே.

(இ-ள்-) பலகரை ௩-பலம்வாங்கி புதியகுடுவையில்போட்டுள ஜம்பிச்சம்பழஞ்சார்விட்டு கவசஞ்செய்து ம-வரட்டியில் புடம்போட்டுயெடுத்து கல்வத்திலரைத்து வைத்துக்கொள்ளவும் இதை நெய்யில் தேனில்கொடுக்க பக்ககூலை மார்நோய் வாய்வுநீங்கும் கடுகு நல்லெண்ணை மீன் ஆகாது.

தங்கபற்பம்.

வ-ம். தங்கரேக்கை முள்ளுக்கீரை சாற்றில் மூன்றுநாள் ஊற வைத்து ரவிபிற்காயவைத்து கல்வத்தில்யிட்டு சித்திரைப்பாலாடைச் சாற்றில் மைபோல் அரைத்து அகலில்வைதது மூடி ௭- சீலைமண்செய்து (ஈ) வரட்டியில்புடம்போட பற்பமாகும் சவுரியிலைச்சார்படி அ-சிருகசிருத ஒருசட்டியில்யிட்டு காயவைதது திரட்டி ெறுத்து அந்த யிடைக்கு ஆடாதோடையிலையும் ௩-பலம் புனுகும் (உ) கழஞ்சுமேற் படி பற்பமும சேர்தது மெழுகுபோல் அரைத்து நெல்லிக்காபோல் உரிட்டி வெள்ளெண்ணையில் போட்டு அந்திசந்தி ஒவ்வொரு உருண்டைவீதம் (௬) மாதஞ்சாப்பிட்டு மேற்படி யெண்ணையை வார்த்து இரண்டுமுறை ஸ்தானஞ்செய்து போகம்நீக்க மாமிஷபதார்த்தமும் தள்ளிவைக்க வெண்குட்டமுதலான சகலகுட்டமுந்தீரும்.

ரசபற்பம்.

கொள்ளப்பாரசபோதான் விராகனொன்றை
கூட்டியேசிவகரந்தை சாற்றிலாட்டி
வில்லைவேபில்லைசெய்து ஓட்டில்வைத்து
வேண்டியேமூணுமண் சீலைசெய்து
கள்ளமில்லைகோழிபுடம் போடநிற்கும்
கண்மணியேபனவெல்லந் தன்னிலுண்ண
துள்ளுமொருகிரந்திமேகம் வெள்ளைதீரும்
துணையாகயிச்சாபத்திய குருந்துகாரே.

(இ-ள்.) ரசம் உ௦-விராகனிடை யெடுத்து சிவகரந்தை சாற்றில்அரைத்து பில்லைசெய்து ரவியிலுலர்த்தி ஓட்டில்வைத்து மேல்வோடுமூடி ௩-சீலைமண்செய்து கோழிபுடம்போட நீரும் இதை பனவெல்லத்தில் கொடுக்க கிரந்தி மேகம் வெள்ளை தீரும் இச்சாபத்தியம்.

வெள்ளீயபற்பம்.

வ-ம். வெள்ளியம் ௪ பலம் கொண்டுவந்து யிலைபோல் தகடு தட்டி நூலைப்போல்சன்னப்பொடிகளாகத்தரித்து வைத்துக்கொண்டு புதியசடைக்கஞ்சா ஒருபலங்கொண்டுவந்து கொழ அரைத்து ஒரு வட்டமான ஓட்டுபில்லையில் பாதிவைத்து அதின்மேல்கத்திரித்தபொடிகளைபரப்பி மேலே அரைதத பில்லைபவைத்து மேலோடுமூடிசீலை மண் ௩ செய்து ௩௰ வாட்டில் புடமிட்டு எடுக்கவும் பற்பமாகும் மேகங்களுக்கு வெண்ணை நெய்யில் பிரையோகப்படுத்தலாம் இச்சாபத்தியம்.

மான்கொம்புபற்பம்.

வ-ம். மான்கொம்பு ௨ வீசைவாங்கி துண்டுதுண்டாக நரிக்கி உடைத்து இதையும் அகத்திக்கீரையும் பெரியபானையில்போட்டு(௧)ஜாமம் வேகவைத்து எடுத்து பிறகு நீர்முள்ளியிலையை அரைத்து மேல்கவசஞ்செய்து சீலைமூடி ௫௰ கை வரட்டியில் புடம்போட பஸ்பமாகும் கல்வத்தில் அரைத்துவைத்துக் கொள்ளவும் நெய்யில் கொடுக்க மார்நோய் இடுப்புநோய் நாவரட்சி வெள்ளை மேகம் இதுகள் தீரும் இச்சாபத்தியம்.

நாகபற்பம்.

வ-ம். நாகத்தை ௧ பலங்கொண்டுவந்து இலுப்பை நெய்யில் யிருபதுதடவை உரிக்கி காய்த்து சுத்திசெய்து ௨ பலம் நாகத்தை உருக்கும்போது கண்விட்டு ஆடையில் சிற்றாமணக்குயிலையை கசக்கி ௫ அல்லது ௬ துளி பிழிய சத்தமிடும் மருபடியும் ௫ ௬ துளிபிழியசத்தமடங்கும் துரித்தியை விசையாயூதி மருபடியும் ௫ ௬ துளிபிழிந்து சிற்றாமணக்கன் வேரால் கிண்டிவற மல்லிகைபூவைப்போல் நீரும் அதைஅனுபானங்களில்யிட வெள்ளை வெட்டை சிலேத்மம் குன்மம் மூலம் தாதுவிர்த்தியுண்டாம்.

ஆமையோடுபற்பம்.

வ-ம். ஆமையோட்டைநரிக்கி பச்சகோரைக்கிழங்கை யரைத்து அதின்மேல்பூசி கவசஞ்செய்து உலர்த்தி ௫௰ பது வரட்டியில் புடம்வைக்க பஸ்பமாகும் நெய்யில்கொடுக்க பசிதீபனமுண்டாகும் அஜீரணம் நீங்கும் இச்சாபத்தியம்.

தங்கபற்பம்.

வ-ம்.—தங்கரேக்கு விராகநிடை ஏ சுத்திசெய்த சித்தன்டை யோடு விராகநிடை க இவ்விரண்டையும் அரைத்து உத்தாமணிப்பால் ரு துளிவிட்டு பிசரிமூசையிலிட்டு ஓடுமூடி சீலைசெய்து ஒருகுண்டு சட்டியில் உமிகொட்டி அதின்மத்தியில் வைத்து தீயிடபற்பமாகும் காசரோகத்திற்கும் அதிக கொழுமையினால் அடைந்ததாது சேர்வை நீங்கும்.

தாளகபர்பம்.

வ-ம். ஒருபலம் தாளகத்தை பொடியாயிடித்து ஒருகலயத்தில் யிட்டு பெருக்கன்பால் தளரவிட்டு ஒருநாள் சூரியபுடம் வைத்து யெடுத்து மேலோடுமூடி சீலமண்செய்து உமி வரட்டியில் புடம்போட வும்பற்பமாம் தேனில் அரிசியிடைகொடுக்க காச்சல் யிருமல்தீரும் அயப்பொடியும் இப்படியே செய்துக்கொள்ளவும்.

வெள்ளிபற்பசெந்தூரம்.

வ-ம். சரிகைவெள்ளியை லேசாகதட்டி பழுக்கக்காச்சி பழுபாகக்கிழங்குச்சாற்றில் எ தரம்தோய்த்து மூசையில்வைத்து உரிக்கிகண் விட்டாடும்போது மகிழம்புசாற்றைச் சிருகவிட்டு ஊதப்பொடியாய் போகும் அதை மேற்படி சாற்றுலாட்டி பில்லைதட்டி காயவைத்து முக்காவேளைவேரை மேற்படி சாற்றுலாட்டி மூசையில்வைத்துமூடி ௭ சீலமண்செய்து நூரு வரட்டியில் புடம்போட நீரும் அதில்பணவிடை திப்பிலிலேகியத்தில் கொள்ள சிலேத்துமம் கூசு-ம் சூலைதீரும்.

கைகாலில்பித்தவெடிகண்டால்மருந்து.

வ-ம். மருதம்யிலையை ஒருபிடிகொண்டுவந்து பசும்பால் விட்டரைத்து பின்னக்காயளவுயெடுத்து கால்படிபசுப்பாலில் கரைத்துபோஜனம் செய்தபிரகு சாப்பிடவும் ௩ நாள் சாப்பிட சொஸ்தப்படும்.

நீரில் இரத்தங்கண்டால்மருந்து.

வ-ம்.—பச்சரிசி விராலியிலை இரண்டும் சமன்கொண்டு எருமைப்பால்விட்டரைத்து பின்னக்காயளவெடுத்து தேற்றான்வித்து சூரணம் கழற்சிக்காயளவு கலந்து பிசைந்து இருவேளையும் ௩ நாள்சாப்பிடவும்.

பிள்ளைபெற்றவர்களுக்கு சீழ்திரங்கட்டினால் மருந்து.

வ-ம்—வாழைமரத்தின் குருத்தை கொண்டுவந்து சுட்டு சாம பலாக்கி பனைவெட்டு சமன்போட்டு பிசைந்து பாக்களவாக இருவேளையும் சாப்பிட ௩-௪ விசை மலமுஞ்சழியும் வியாதியும் தீரும்.

பிள்ளைகள்பல்லில் இரத்தம்வடிதலுக்கு மருந்து.

வ-ம்—பச்சைநன்னாரிவேரைக் கொண்டுவந்து வென்னீர்விட்டரைத்து கொட்டைப்பாக்களவு கொடுக்கவும் க நாளைக்கு மூன்று விசையாக காலையுச்சி மாலை இப்படி நிற்கிறவரையில் கொடுக்கவும்.

சதையடைப்புக்கு மருந்து.

வ-ம்—முற்றின கோழியின்குடலிலிருக்கும் சிறுகல்லும் வெள்ளரிப்பிஞ்சும் பூனகமும் வெல்லமும் வகைக்கு ஒரு கொட்டைப்பாக்களவு யெடுத்தறைத்து ஆவின்பாலில் கலக்கி கொடுக்கத்தீரும் இப்படி ஆறுநாள் கொடுக்கவும்.

கல்லடைப்புக்கு மருந்து.

முள்ளிலவம்	க	பலம்	நாவல்கொழுந்து	க	பலம்
பூலா	க	,,	வெட்பூலா	க	
முத்தக்காசு	க	,,	நன்னாரி	க	
முல்லை	க	,,	சீந்தில்	க	
செந்தாமறை	க	,,	சித்தாமுட்டி	க	
செங்கழுநீர்	க	,,	சிறுகீரை	க	
விராலி	க	,,	வெட்டிவேர்	க	
விலாமிச்சம்வேர்	க	,,	பொன்னாங்காணி	க	

நால்படியிளநீரில் போட்டு அரைபடி கியாழமாய் வற்றக்காச்சி வடிகட்டி கொடுக்கத்தீரும்.

ஊஷ்டபேதிக்கு கரியுப்பு.

வ-ம்—கரியுப்பு கவ-பலம் துத்திவேர் பட்டை எ பலம் அதின்சமூலம்-௩.

இதுகளைக்கொண்டு வந்து வேர்பட்டையும் வெவ்வேறாக உரலிலிட்டுபிடித்து பிறகுவிளாங்காய் பிரமாணம் மண்குடுவைகொண்டு

வந்து பிடித்கவேவரையும் பிலையையும் ஐந்துபாகமாக்கி ஒருபாகம்வே
ரில் பாதிகுடுவையில்போட்டு பிறகு உப்பை மத்தியில் வைத்து அ
தின்மேல் பிலையையும் போட்டு குடுவைமேல் ஒரு ஓட்டுபில்லைமூடி
சீலையில் மண்கவசஞ்செய்து கோழிப்புடம்போடவும் யிப்படி ஐந்து
புடம்போட்டு யெடுத்து கல்வத்திலிட்டு அரைத்து புட்டியில் போட்டு
வைத்துக்கொள்ளவும் சாப்பிடுகிறதற்கு ஒருகுன்றிஎடை யெடுத்து
அப்பட்டமான தேனில்குழைத்து காலை மாலை ஐந்துநாள் சாப்பிட
வும் தீரும் வியாதி மேகவாய்வு உஷ்ணவாயு கைகால்பிடிப்பு அஜீர
ணம் பித்தம் இவைமுதலானதும் தீரும். பக்கியம் நல்லெண்ணை க
டுகு கொள்ளுபருப்பு அகத்திக்கீரை பூசினிக்கா லாகிரி யிதுகள் கூ
டாவாம்.

மதனசஞ்சீவிநெய்.

திருகடுகு	௪	களஞ்சி	சிறுநாகப்பூ	௪	களஞ்சி
கிராம்பு	௪		பத்திரி	௪	
வால்மிளகு	௪		சீரகம்	௪	
தக்கோலம்	௪				
கோரக்கர்மூலி	௫		அபினி	௫	

இவைகளை ஆவின்பாலிலரைத்து முக்காபடி நெய்யில் வேகவை
த்து நெய்யை வடிகட்டிக்கொண்டு ஒருகரண்டி நெய் சாப்பிடவும் பு
ளியைத்தள்ளி பாலுஞ்சாதம் சாப்பிட்டு சுகித்தால் இன்பங் கொடுக்
கும்.

மேகவாய்வுக்குபற்பம்.

சொக்கவெள்ளியாவது ரூபாவெள்ளியாவது காலுரூபாயிடை
யெடுத்து சுணைவாழைமரத்தடியில் சொருகிவைத்து ௧௫-நாள்பொ
ருத்து போய்பார்த்தால் சொருகிவைத்த வெள்ளியின்மேல் முட்டை
முட்டையாக கிளம்பியிருக்கும் இதைகொண்டுவந்து குப்பைமேனி
சார்விட்டு-அரைத்துபில்லைதட்டி வெய்யில்வைத்து காய்ந்த பிறகு ம
ண் அகலை ரெண்டுகொண்டு வந்து ஒருஅகலில் பில்லையை வைத்துமே
ல்ஒரு அகலைமூடி சீலையில் மண்பூசி கவசஞ்செய்து ௰ கைவரட்டியில்
புடம்போடவும் சுண்ணமாகும் அதைகல்வத்திலிட்டு அரைத்து வைத்
துக்கொண்டு வேளையொன்றுக்கு அரிசியிடை பசும்வெண்ணெயில் கு
ழைத்து காலைமாலை ஐந்துநாள் சாப்பிடவும் அரையாப்பு கொறுக்கு
கைகால்பிடிப்புடன் இருபத்தோர் மேகமும் தீரும் இச்சாபத்தியம்.

ஆறாம்பாகம்-முற்றிற்று.

☞ இனி-ஏழாம்பாகம் செந்தூரமுறைகள்.

உ

கடவுள் துணை.

பதினெண் சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

வையித்திய திரவுகோல்.

ஏழாம்பாகம் செந்தூரவகுப்பு மெழுகுவகுப்பு.

விநாயகர் துதி

விருத்தம்.

அந்தமாய்ப்பதி னெண்பேர்நூலாந் துமே
செந்தூரவகை செப்பிடபுவியினில்
தொந்தமாய்ப்பல் மேலோர்கள்களித்திட
தந்திமாமுகன் தாளிணைப்போற்றுவாம்.

முகவுரை விருத்தம்.

எத்தனைதான்வாகடங்கள் படித்தபோதும்
எண்ணறிபவித்தைகளைக் கற்றபோதும்
சுத்தமுடன்வுணர்வதற்கு குருதான்வேண்டும்
தொண்டுசெய்துயடுத்தாலு மருமம்விள்ளார்
சித்திபுள்ளவையித்திய திரவுகோலில்
திரையொன்றுமில்லாமல் திரந்துநன்றாய்
இத்தரைமேலனைவோர்க்கும் வேணுமென்று
இயம்பினேன் செஞ்சியேகாம்பரந்தானே.

நூன்முக விருத்தம்.

ராமபாணசெந்தூரம்.

ரசம்பூரம்லிங்கம்வீரம் ரசசெந்தூரம்
நெல்லிகெந்தய்யிவைவகைக்கு களஞ்சிதாக்கு
வசமாகமுலைப்பால்விட்டு நாலுஜாமம்
அரைத்துரவிதனில்வைக்க செந்தூரமாகும்
இசைவாகயெடுத்துக்கொண்டு பனவெல்லத்தில்
ஈந்திடுவாயரிசியிடை யிச்சாபத்தியம்
விசையானநீரேத்தம் மேகஞ்சன்னி
வாய்வுவீக்கமாதாவும் வாங்கும்பாரே.

(இ-ள்) வீரம்-பூரம்-ரசசெந்தூரம்-லிங்கம்-கெல்லிகெந்தம் இவ்வகள் வகைக்கு களஞ்சிவீதம்யெடுத்து முலைப்பாலில் (ச) ஜாமம் அரைத்து வெய்யலில்வைத்தால் செந்தூரமாகும் யெடுத்துக்கொண்டு பனம்வெல்லத்தில் அரிசியிடைகொடுக்கவும் இச்சாபத்தியம் வாய்வு-விக்கம்-சுரம்-மேகம்-ஜன்னி-சீரத்தம்-இவைகள்-நீங்கும்—எ-று.

அன்னபேதிசெந்தூரம்.

அன்னபேதி ய விராகனிடைவாங்கி புளிச்சதண்ணீரில் வேகவைத்து கல்வத்திட்டு (ரு) யெலுமிச்சம்பழம் ரசம்விட்டரைத்து பில்லை செய்து உலரவைத்து ஓட்டில்வைத்து மேலோடுமூடி ஒருசீலைமண் செய்து (ய) வரட்டியில் புடம்போட்டெடுத்து இதை தேனிலிட மேகவாய்வு மார்நோய்நீங்கும் பசியுண்டாம்.

லிங்கசெந்தூரம்.

சேரப்பாலிங்கம்பலம் நிருத்தெடுத்து
சித்திரைமூலம்வேர்பட்டை தனையறுத்து
சேரப்பாலிங்கமுடன் கவசஞ்செய்து
சீலைமண்செய்துபத்து வரட்டியாலே
சேரப்பாபுடம்போடசெந்தூரமாகும்
சிக்கெனவே அரிசியிடை தேனிலுண்ணு
சேரப்பாவாய்வெல்லாம் பரந்துபோகும்
சிராகயிச்சாபத்திய மிருந்துகாரே.

(இ-ள்.) முதல்தரமானலிங்கம் (க) பலம் நிருத்தெடுத்து சித்திரைமூலம்வேர்பட்டையை கொண்டுவந்து அரைத்து மேல்படி லிங்கத்திற்கு கவசங்கட்டி சீலைமண்செய்து பத்துயெருவில் புடம்போட்டு ஆரியபின்யெடுக்க செந்தூரமாம் தேனிலாவது இஞ்சிரசத்திலாவது அரிசியிடை கொடுக்கவும் சகலவாய்வுகளையும் கண்டிக்கும்—எ-று.

தீநலோகசெந்தூரம்.

அயப்பொடிபலம் (க) கெந்திபலம் (உ) தங்கப்பொடி விராகனிடை (ஏ) வெள்ளிப்பொடி விராகனிடை (க) இவைகளை கல்வத்திலிட்டு கல்சுண்ணாம்புசாரமும் சமனாகக்கூட்டி நல்லஜலத்தில் கரைத்து தெளிவுநீரையெடுத்து அந்தநீரினால் மேற்படிசரக்கை (ச) ஜாமமரைத்துவுலர்த்தி புகைவோட்டிலிட்டு அடுப்பேற்றி லேசாகவருக்கும்போது சிவந்துவரும்பதத்தில் யெடுத்துக்கொண்டு தேனில் பணவிடை கொடுத்துக்கொண்டுவரவும் சோகை-வெளிறு-ஊதல்-நீரேற்றம்-பசிமந்தம்-வாய்வு-இவைகள்தீர்ந்து ரத்தவிர்த்தியாகும்.

பாலசெந்தூரம்.

சிரியதோர்குடுவைதனில் நெல்லிகெந்தி
சீராககால்பலந்தான் உள்ளேவைத்து
அரிபலேபாலைரசங் கீழ்மேலூற்றி
தெரியவேமூன்றெறிவில் புடத்தைப்போட்டு
தெளிவாக அரிசியிடைதேனிலுண்ணு
திரையானவாய்வுசுரங் காணாதோடும்
நேராகும்அநுபோகமுறையிதாகும்

(இ-ள்) சிரியகுடுவையில் கால்பலம் நெல்லிக்கா கெந்தியை ஒரு பலம் பாலை ரசத்துக்கு கீழ்மேலுமிட்டு ஓடுமூடிசீலைசெய்து மூன்று யெருவில் புடமிட்டுயெடுக்கவும் அரிசியிடை தேனிலிட வாய்வு சுரம் தீரும் இச்சாபத்தியம்—எ-று.

கரிவுப்புசெந்தூரம்.

கரியுப்பை-யெருக்கன்பால்-திருகுகள்ளிப்பால் - தும்பை - கவுரி தும்பை-மருதம்பட்டை-குமரி-யெலுமிச்சம்பழம்-பொடுதலை இவைக ளின்சாற்றில் வகைக்கு இரண்டுபுடம்போட செந்தூரமாகும் அதை மூன்றுபணவிடை தேனிற்கொடுக்ககுன்மம் - உதிரரோகம் - க்ஷயம் சூலை-வீக்கம்-வாய்வு-கிராணி-முதலானவை தீரும்.

பூனாகிசெந்தூரம்.

பூங்காவிபடிகாரம் யிவைகள்ரெண்டும்
புண்ணியனேவிராகனிடை வகைக்குரெண்டு
ஓங்கியேயரைத்துவெண்ணை தன்னிலுண்ணு
ஒடுமொருகியாதிகளை உரைக்கக்கேளு
நீங்குமேபசிமைவெள்ளை ரத்தகாசம்
மேகவெட்டைஉள்காசல் உஷ்ணவாய்வு
வாங்குமேநாவரக்ஷி யிச்சாபத்தியம்
வளையுமொருகடுகுநெல் லெண்ணைநீக்கே.

(இ-ள்) பூங்காவி பலம் (௨) படிகாரம் பலம் (௨) இவைகளை கல்வ த்திலரைத்து வெண்ணையல்லது நெய்யில் சாப்பிடவும் பெரும்பாடு வெள்ளை பசிமை ரத்தகாசம் மேகவெட்டை உள்காச்சல் உஷ்ணவா ய்வு நாக்குவரக்ஷி இதுகள்தீரும் இச்சாபத்தியம் கடுகு நெல்லெண் ணெய் நீக்கவும்.

சண்டமார்த்தாண்டசெந்தூரம்.

பூரம் வராகனிடை (ம) லிங்கம் விராகனிடை (அ) ரசசெந்தூரம் விராகனிடை (௨) நெல்லிக்கா கெந்தகம் விராகனிடை (௬) இவைகளை கல்வத்திலிட்டு முலைப்பால்விட்டு (அ) ஜாமம் அரைத்து கோழிமுட் டை வெள்ளையம்பிலியால் யெட்டுநாள் அரைத்து பில்லை செய்து நிழலுலர்த்தி நல்ஜலம் (௩) படிக்கொதிக்கக்காச்சி அதில் யிந்த

பில்லையைப்போட்டு சூடு ஆறினபிறகு யெடுத்து உணர்த்திகல்வத்தில் அரைக்கச் செந்தூரமாகும் அரிசிபிரமாணம்தேனில்கொடுக்க பாரிச வாய்வு ஜன்னிதீரும் கடுகு நெல்லெண்ணை தயிர்பால் ஆகாது.

காளமேகசெந்தூரம்.

பாரப்பாவிராகனிடை ரசந்தானாறு
  பக்குவமாந்தாளகங்கெந்திலிங்கம்
சேரப்பாவகைக்கிவிராகனொன்று
  சேர்த்துமேகுமரிசாற்றில்ஜாமமாட்டி
வாரப்பாபழஞ்சாற்றில்ஜாமமாட்டி
  அரைத்துமேபில்லைதட்டிகாயவைத்து
காரப்பாஅகல்தனிலே மண்சீலைசெய்து
  கணக்காகயந்தெருவில்புடஞ்செந்தூரமாமே

(இ-ள்.) இரசம் விராகனிடை (௬) தாளகம்-கெந்தி-லிங்கம் இவை மூன்றும்வகைக்கி (௧) விராகனிடையாகக்கொண்டு கல்வத்திலிட்டு குமரிசார்விட்டு (௧) ஜாமம் அரைத்து பழஞ்சார்விட்டு (௧) ஜாமம்அரைத்து பில்லைதட்டிக்காயவைத்து அகலில்வைத்து மேல்மூடி சீலைமண் (௩) செய்து (௫) யெருவில் புடம்போட செந்தூரமாம் (அநுபானம்) நெய்-தேன்-வெண்ணை யிதுகளில்பணவிடை கொடுக்க-தந்திமேகம்-மதுமேகம்-சுக்கிலமேகம்-கண்டமாலையிதுகள்தீரும் வயற்று நோவிற்கு சக்கரையில்கொடுக்கவும் புளிதள்ளவேண்டியதுநோய்திடமிருந்து (௩) நாள் அல்லது (௫) நாள்கொடுக்கவும்

பஞ்சலோகசெந்தூரம்.

தங்கம் வெள்ளி காந்தம் இரும்பு செம்பு இவைகளோர் நிறையாக சுத்திசெய்து அதற்கு (௨) பங்குகெந்தகம்-சூதகம் (௭) பங்குவீரம் (௰) பங்குகூட்டி-முப்புச்சுன்னம்-கழஞ்சு (௧) எலுமிச்சம்பழஞ்சாற்றிலும்கரிச்சாற்றிலும்வகைக்கி (௪) ஜாமம் அரைத்து முழுபுடம்போட செந்தூரமாகும் அதின்பணவிடை திருகடுகுசெந்தூரத்தில் வைத்துத் தேன்விட்டு மத்தித்து மண்டலங்கொள்ள வாய்வு என்பதும் பித்தம் மூலம்சிலேத்தமம்நீங்கும்.

சண்டமாருதசெந்தூரம்.

லிங்கம் பூரம் வகைக்கு விராகனிடை (௰) வீரம் விராகனிடை (௨) கெந்தி விராகனிடை ௧ ரசச்செந்தூரம்விராகனிடை (௧) இவைகளை கல்வத்திலிட்டு (௨) ஜாமம் உரைத்து புட்டியில்வைத்துக்கொள்ளவும் பணவெல்லத்தில் பணவிடைசெந்தூரம்வைத்து சாப்பிடவும் (௫௭) நாள்கொள்ளவும் யிச்சாபத்தியம் ஜன்னி (௰) வாதம் அம்பிலிபவுத்திரம் தனுர்வாதம் விரைவாதம் முக்கல் கடுக்கல் கிரந்திபுண் வெடிசூலை கண்டமாலை பெரும்பாடு அரையாப்பு சிலந்தி வெள்ளிதாராளம் தீரும்.

பஞ்சபாணசெந்தூரம்.

சூதத்துகற்பூரம் ஜாதிலிங்கம் மனோசிலை தாளகம் காந்தம் ரசம் சங்கபஷாணம் கெந்தகம் இவைகள்வகைக்கு க பலம்வாங்கிகல்வத்திலிட்டு மேனிச்சாற்றினால் ௩ ஜாமம்அறைத்து அப்படியே கீழ்விலாரவைத்து மறுநாள் கருப்புவெத்திலைச்சாற்றால் செம்பருத்திச்சாற்றால் வெள்ளருகுசாற்றால் துளசிசாற்றால் வேலிபருத்திசாற்றால் பொடுதலைசாற்றாலும் ஒவ்வொருநாளைக்கு ஒவ்வொருசாற்றால் ச ஜாமம்துறையாபலறைத்து ஒரு சட்டியில் கம்மாறுவெத்திலைபரப்பி அறைத்தமருந்தை சபிலைகட்டி அதன்மேல்வைத்துமேல்மூடிசீலைமண் எசெய்து அடுப்பிலேற்றிஒரேசாதியாகால் ச ஜாமம்யெரிக்கவும்அடிசட்டிசிவக்கக்கண்டால் தீபைவாங்கி கமலம்போல் யெரிக்கவும் இப்படி ஒருநாழிகைபெரிக்கபின்பிரக்கி ஆறினபிறகு பெடுக்க செந்தூரமாம் புட்டியில்வைத்துக்கொள்ளவும இஞ்சிதேன் இவைகளில் உ அரிசியிடை கொடுக்கவும்.

சுரம் கூச ஜன்னி ௰௩ குட்டம் ௰அ கிரந்தி சலைசாய்ந்தவாய்வு உகூ வாதம் அ௰ மேகம் உக குன்மம் அ கிராணி கூ முடக்குசூலைவெடிசூலை கன்னபுத்து யோனிப்புத்து அண்டப்புத்துகபாலகுட்டம கண்டமலை குஷ்டநோய் அரிகரப்பான் சொரிகரப்பான் தேமல் குழிவாழை நொடைவாழை அழுகண்ணி அறையாப்பு கபாலகுத்தல் கண்ணோய் வத்திரம் பிளவை ரணம் மூலம் காசநோகம் இப்புசூலை இவைபெல்லாந்தீரும் இச்சாபத்தியம் நோயின்கிடமறிந்து ரு எ நாள் கொடுக்கவும் மறுபத்தியம் அப்படியே காக்கவும் பிறகுஸ்தானம்செய்விக்கவும்.

தாம்பிரசெந்தூரம்.

சல்லிகாசியைகாச்சிபிலேபோல் தகடுகளாகத்தட்டி சிவக்கக்காச்சி எலுமிச்சம்பழரசத்தில்யிச தடவை காய்ச்சி காய்ச்சி தோய்க்கவும் தோய்த்தபிறகு அகத்திக்கீரையை அரைத்து உண்டைசெய்து தகட்டை புதைத்துச் சொரிகை சன்னகோணிப்பட்டையை சேற்றில் புரட்டி சவசநசெய்து இரண்டுமுழமும் அகலங்களமுள்ள கெஜபுடத்தில் நாறுகைவரட்டியில்புடம்போடவும் நாலுநாளானபிறகு யெடுத்து கல்வத்திலிட்டு எருக்கம்பால்விட்டரைத்து வில்லைகளாகச்செய்து நிழலில்உலர்த்தி அகலில்வைத்து மேல் அகல்மூடி சீலைசவ்சம்செய்து அன்பதுவரட்டியில் புடம்வைக்கவும்பூ நாளையெடுத்துப்பார்க்க ஊதா செந்தூரமாகயிருக்கும் அதைகல்வத்திலிட்டு அரைத்துபுட்டியில் வைத்துக்கொள்ளவும் அனுபானம் காலபடி புளித்ததண்ணீர் உபலம்மிளகுபோட்டு ௩ நாள் ஊரவைத்து நாலாநாள்யெடுத்து வெய்யலில்உலர்த்தி சூரணம்செய்து நெய்யமூக்கியசட்டியில் தேன இஞ்சிரசம் பசுநெய் வகைக்கு க ரூபாயிடைசட்டியில்விட்டு மிளகுசூரணத்தைக் கொட்டி லேகியமாய்கிளரிவைக்கவும் புளியங்கொட்டை பிரமாணம் லேகியத்தில் அரிசியிடை செந்தூரம்வைத்துசாப்பிடவும் வாதசுரம் மேகவாய்வு பாரிசவாய்வுகண்டமாலைகிரந்திதீரும்பிச்சாபத்தியம்.

கடவுள்துணை.

மெழுகின்முறைகள்.

ஒற்றைவிரைவாதத்திற்கு மெழுகு.

விருத்தம்.

லிங்கமதுவிராகனிடை யொண்ணேகால்தான்
விதமாகமிளகுதான் பலந்தானொன்று
மிஞ்சமுடன்களஞ்சியொன்று பூரம்வாங்கு
மிசையவேதேன்விட்டு ஒருஜாமந்தான்
குன்றுமணிமெழுகதுபோல் அரைத்தெடுத்து
குறையாமல்தூதளங்காய் பிரமாணந்தான்
விந்தையாய்இருவேளை சாப்பிடத்தான்
வேண்டாதேவாய்வுள்ள பதார்த்தந்தானே.

(வ-ம்) லிங்கம்விராகனிடை (௧௰) மிளகு பலம் (௧) பூரம்களஞ்சி பலம் ௧ இவைமூன்றையுந்தேன்விட்டு ஒருஜாமரைத்துமெழுகுபதத்தில் வைத்துக்கொள்ளவும் தூதளங்காய் பிரமாணம் இருவேளை சாப்பிடவும் வாய்வுபதார்த்தமாகாது இச்சாபத்தியம்.

வீரமெழுகு.

சுக்கு திப்பிலி மிளகு லிங்கம் வீரம்பூரம்வகைக்குயிரண்டுவிராகநிடை யெடுத்து தேன்விட்டரைத்து பரணியில் வைக்கவும் (அனுபானம்) கடலைபிரமாணம் சீனியில்கொடுக்கபேதியாகும் பேதிஅதிகப்பட்டால் மோர்சாதம்கொடுக்கவும்இஞ்சிரசத்தில்தேனில்கொடுக்கவாதத்தைகெட்கும் அன்றுசாயரட்சை மிளகு சுக்குகியாழமிட்டு சாப்பிடவும்,

சூதகவாழ்விற்குமெழுகு.

வீரம்பூரம்சாரம் படிகாரம் வகைக்குகால்பலமாகதிருத்தெடுத்து கல்வத்திட்டரைத்துகோழிமுட்டை நாலுடைத்து மேல்தோல்போக்கி அம்பிலிச மூலம் ஊத்தவும் யெலிமிச்சம்பழம் பதினைந்து

அருத்தாவிரை நீக்கி சார்பிழிந்து சூரியபுடம்வைத்து சுண்டினபிறகெடுத்து அரைத்து வைத்துக்கொள்ளவும் அநுபானம் ஒருவேளைக்கு மிளகு பிரமாணமாக ௩-நாள் யிருவேளைசாப்பிடவும் யிச்சாபத்தியம்.

கோரோஜனமெழுகு.

லிங்கம்-பூரம்-சுத்தி செய்தவாளம்-லவுங்கம் விராகனிடை-௨-உ வீரம்-கோரோஜனம்-கரிமஞ்சள்-ஏலரிசி-சுக்கு வகைக்கு விராகனிடை (க) யிவையெல்லாம் சூரணிப்பதை சூரணஞ்செய்யவும் சுத்தி செய்வதை சுத்திசெய்யவும் யிவையெல்லாம் கல்வத்திலிட்டு ௰௨-பலம் பனைவெல்லங்கூட்டி அரைத்தெடுக்கவும் உளுந்து பிரமாணம் கருப்பன் கட்டியில் கொடுக்க இரைப்பு உப்புஷம் வீக்கம் சகலமானவாய்வுந்தீரும்.

கஸ்தூரிமெழுகு.

கோரோசனை குங்குமப்பூமலர் நீக்கிய லவுங்கம் வால்மிளகு வகைக்கு விராகனிடை-௪-புனுகு சவ்வாது வகைக்கு விராகனிடை-௨-ஏலக்கா அரிசி சிறுலவுங்கைப்பட்டை வகைக்கு விராகனிடை ௮-கஸ்தூரி விராகனிடை-க-பச்சைகற்பூரம் விராகனிடை-௨-யிதில் சூரணிப்பதை சூரணஞ்செய்து சகலமும ஒன்றுப்கூட்டி கற்பூரவாசனை வெத்திலை ரசத்தாலும் கற்பூரவள்ளிரசத்தாலும் தூதுவேளைரசத்தாலும் தோல்நீங்கிய யிஞ்சிரசத்தாலும் மிளகுகியாழத்தாலும் சித்திரமூலவேர் கியாழத்தாலும் மஞ்சள்கரிச்சாலை ரசத்தாலும் தனித்தனியாக ஒவ்வொருஜாமம் அரைத்து நிழலுலர்த்தி சுபமானதேனினால் மெழுகுபதமாயரைத்து வைத்துக்கொள்ளவும் பயறுபிரமாணம் தேனில்சாப்பிட ஜன்னி சீதளம் சுரம் கபரோகம் உப்பிஷம் முகவாதஜன்னி யிருமல் மாறடைப்பு வாதம் யிவ்விதவியாதிகளை நீக்கும்.

துஷ்டந்நிர்த்து கெந்தகமெழுகு.

வ ம்.—பருப்பு கெந்தகம் பலம் ௨ புதுகுடுவையில் அடியில் சின்ன துவாரம்செய்து இன்னமொருகுடுவையில் பசுந்தயிர்கால்படி விட்டு கெந்தகக்குடுவையை தயிர்குடுவையை பூமியில் புதைத்து மேல்குடுவையின்மீதில் ௰ யெருவில் புடமிட கெந்தகம் உருகி தயிர் குடுவையில்விழும் மேல்படி கெந்தகத்தை யெடுத்துவைத்துக்கொண்டு பூவன்வாழைப்பழம் ௨ரு ஒருமியசட்டியில்போடு காட்டுக்காயை நன்

ருய் பொடித்து வஸ்திரகாயஞ் செய்தநூள் பலம் ௩ பழத்திலேபோட்டு நன்ருய்கையினுல் பிசைந்தால் சலமாகும் நன்ருய் பழங்களைசட்டியில் மேல்படி பழரசத்தை கொஞ்சம்கொஞ்சமாய் யிரண்டுதபாவாக விட்டு பெட்டிவிரகால் சலம்சுண்டுமெர பரியந்தம் பெரித்தால் மெழுகாகும் பெரிக்கும்போது கிளரிக்கொண்டே யிருக்கவும் மேற்படி மெழுது குண்டுமணிபிரமாணம்கொடுக்கவும் இச்சாபத்தியம்.

நோஷ அமிர்தமெழுது,

ஓமம் பலம் உ லிங்கம் பூரம் வகைக்கு விராகனிடை ௫ இம்மூன்றையும் முலைப்பால்விட்டு ச ஜாமமரைத்து பிரகு தேன் அரைபலம் துளி துளியாகவிட்டு ஒருஜாமமரைத்து பீங்கானில் வைத்துக்கொண்டு தேனிலாவது யிஞ்சிசுரசத்திலாவது கொடுக்க ஜன்னி சுரதோஷம் தீரும் யிச்சாபத்தியம் சாயரட்சை மிளகு சுக்குகிழாயம் கொடுக்கவும்.

வீரமெழுது.

வீரம் ஒருபலங் கொண்டுவந்து மெல்லியசீலையில் முடிந்து பேடுபத்தாத யிளநீர் ச கொண்டுவந்து உடைத்துபழங்கலயத்தில்வூத்தி அடுப்பேற்றி அதில் மேல்படி வீரத்தைவிட்டு தொலாந்திரமாகக் கட்டிபெறிக்கவும் யிரண்டுநாழிகை யெரிந்தாபின்பு கலயத்தைஎடுத்துவிட்டு தொலாந்திரம்கட்டியிருக்கும் வீரமூட்டையை அடுப்புக்குநேராய் தொங்கவிட்டு அடுப்பினெருப்பைக்கிளரி அனல்காட்டி நெருப்பு அவிந்தபிரகு முடியை அவிழ்த்து மருந்தை ஒருயேனத்தில் வைத்துக்கொள்ளவும் அநுபானம் உளுந்து பிரமாணம் தேன் முலைப்பால் இஞ்சிசுரசத்தில் கொடுக்கவும் ஜன்னிசுரதோஷம்யாவுந்திரும் இச்சாபத்தியம் மாலைமிளகுகியாழம் கொடுக்கவும்.

மெழுகுவகைகள்-முற்றிற்று.

உ

கடவுள்துணை

பதினெண்சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

வைத்திய திரவுகோல்,

எட்டாம்பாகம் லேகியமுறைகள்.

விநாயகர்துதி

விருத்தம்.

பாக்கியமாகநாளும் பல்லோர்கள்களித்துக்காண
லேக்கியமுறைதானெட்டாம் பாகமாமிதனைக்கூற
வாக்கினில்குடியாநின்று வருந்தமிழ்நுதவிசெய்துக்
காற்கவேவிநாயகன்றன் கடிமலர்காப்புதானே.

முகவுரை-விருத்தம்.

பூட்டினாற்லேகியத்தின் வயதுமார்க்கம்
பொல்லாதபாவிகட்க்குங் கரிமிகழ்க்குங்
காட்டினார்வயதுதான் திங்களெட்டு
களிப்புறவேதின்பதுவு மமிர்தமாகும்
மாட்டினாற்சித்தர்கள்தான் செய்புமாற்கம்
மகிமையுடன்மண்டலத்தில் யார்க்குங்கிட்ட
மூட்டினார்வைத்திய திரவுகோலை
மேதினியில்யேகாம்பரம் வெளியிட்டேனே

நான்முகவிருத்தம்.

சுக்குலேகியம்.

சுக்குபலம்யிருபத்தி யஞ்சிதூக்கி
சேரவேபடிரெண்டரை ஜலத்தில்போட்டு
பக்குவமாயெட்டொன்றாக் கியாழமிட்டு
பனவெல்லம்பலம்ரெண்டரைசரியாய்போடு
சிக்கெனவேஅரைபலந்தான் கரிவேப்பில்லை
சேர்த்தறிக்கால் படிநெய்யில்கிளறிபுண்ண
துக்கமுறுங்கிராணிமூலம் கடுப்புவீக்கம்
துடருமொருபால்சோகை மந்தம்போமே.

(இ-ள்.) சுக்கு உரு பலம் நிருத்திடித்து வஸ்திரகாயஞ்செய்து இரெண்டரைபடி தண்ணீரில் கொட்டியெட்டுக்குஒருபங்காய்கியாழ ம்வடித்து பணவெல்லம் ரெண்டரைபலம் ஓமங் கால்படிகரிவேப்பிலை அரைபலம் பிஸவகளை யிடித்து வஸ்திரகாயஞ்செய்து கியாழத்தில்

கொட்டி நெய்அரிக்கால்படிவிட்டு இவைகளை லேகியமாகக்கிளரி சாப்பிட கிரராணி மூலம் வாய்வு அதிசாரம் கடுப்பு ரத்தம் வீக்கம் பாரிசவாய்வு மந்தங் புளியேப்பம் தீரும்—எ-று

கைகால்பிடிப்புக்குலேகியம்.

வ-ம்.—மாவிலிங்கப்பட்டை சிருகாஞ்சொரி அமுக்குறாங்கிழங்கு கண்டங்கத்திரி பரங்கிப்பட்டை நீரடிமுத்து ஓரிலைதாமரைவேர்செப்புநெரிஞ்சிவேர் முடக்கத்தான்வேர் தாழயிதழ்சாறு பெரண்டைவேர் பூனைவணங்கிவேர் மிளகரணைவேர் இவைகள் வகைக்கி பலம்(க) கோரோசனம் விராகனிடை அரிக்கால் கஸ்தூரி விராகனிடை அரிக்கால் ஓமப்பூ விராகனிடை அரிக்கால் இவைகளைசூரணித்துசமநிடைசர்க்கரைகலந்து அந்தி சந்தி திரிகடிகைப்பிரமாணம் தின்னலாம் அல்லது (க) வீசை விளக்கெண்ணையில்போட்டு காச்சியுஞ்சாப்பிடலாம் அல்லது (டு) பலம் நெய்யில் சூரணத்தைக்கொட்டி அடுப்பேற்றி கிளரிக்கொண்டுவருகையில் நெய்போதாவிட்டால் தேன்போதுமான மட்டும் விட்டு கிளரி யிரக்கி வைத்துக்கொண்டுகெச்சக்காய்பிரமாணம் இருபதுநாள் சாப்பிடவும் இச்சாபத்தியம்

கடுக்காலேகியம்

இருபத்தியைந்துபலம் கடுக்காய்தன்னை
  இரண்டரைபடிஜலத்தில் போட்டுக்காச்சி
இருத்துக்கொள்யெட்டொன்றாய் கண்டவைத்து
  இஞ்சிவோமம் மிளகுசிவதைதிப்பிலியும்
கருத்தாகசுக்குசக்கரை இவைகளெல்லாம்
  கால்பலமாய்சூரணித்து கியாழத்திட்டு
வருத்தமில்லைகால்படிதான் நெய்யும்விட்டு
  வளமாகக்கிளறிபுன்னக்காய்போ லுண்ணே.

(இ-ள்.) கடுக்காபலம் (உரு) கொட்டைப்போக்கி சூரணித்து வஸ்த்திரகாயஞ்செய்து இரெண்டரைபடி ஜலத்தில் கொட்டி எட்டொருபங்காய் கியாழம்வடித்து சிவதை. இஞ்சி மிளகு ஓமம் திப்பிலி சுக்கு சர்க்கரை வகைக்கிபலங் கால் சூரணஞ்செய்து மேல்படிகியாழத்தை அடுப்பில்வைத்து இந்தச்சூரணத்தைக்கொட்டி பசும்நெய் கால்படிவிட்டு லேகியமாய்கிளரி புன்னைக்காயளவுசாப்பிடவும் திரும்வியாதிஅக்கினிமந்தம் சூலை மலஜலவாய்வு ஆருந்தீரும்.

உஷ்ணத்திற்குலேகியம்.

வ-ம்.—சுக்குபலம் (௨) அரிசிதிப்பிலி பலம் (க) திப்பிலியை ஒருதுடுவையில்போட்டு கொஞ்சம் உமியைப்போட்டு அதுமுழுகும்

படியாய் ஜெலம்விட்டு வேகவைத்துபிரக்கி திப்பிலியை எடுத்துக்கொண்டு சுக்கும்கூடச்சேர்த்து கல்வத்திலிட்டு நெகிழ அரைத்து பில்லை தட்டி யெண்ணெவூரியசட்டியை அடுப்பில்வைத்து ரெண்டரைபலம்நெய்யைவிட்டு அதில்பில்லையைவைத்து (௨) நாழிகை யெரிக்கவும் பிறகுயெடுத்து கல்வத்தில்தானவைத்து அரைத்து பில்லைதட்டி மறுபடியும் நெய்யில் வேகவைக்கவும் இப்படி ஐந்துவிசை அரைத்து வேகவைத்தெடுக்க யிளகியிருக்கும் லேகியமாகபிசைந்து வைத்துக்கொண்டு சுண்டக்காய்பிரமாணம் அந்திசந்தி சாப்பிடவும் இச்சாபத்தியம் கடுகு நல்லெண்ணெகூடாது ஊஷ்ணந்தீரும் தேகம்தணியும்.

நெல்லிக்காலேகியம்.

முன்போலநெல்லிக்காய் கியாழம்வாங்கி
மிளகுதிப்பிலிசுக்குவோமம் ஏலங்கிராம்பு
தண்மைதரும்குக்கில்வாய் விளக்கந்தனியா
தான்சேருசீரகம் குகைநீர்மதுரம்
சொன்னவகைகால்பலமாஞ் சர்க்கரைரெண்டு
சேர்த்தரிக்கால்படிநெய்யில் லேகியத்தை
உன்னிதமாம்பாக்களவு கொண்டையானால்
ஓடுமேப்பாகூயங்கிராணி வாய்வுயீளை.

(இ-ள்.) நெல்லிக்காய்பலம் (உ௫) முன்போலகியாழம்வடித்து திப்பிலி மிளகு சுக்கு ஓமம் கிராம்பு ஏலம் குக்கில் வாய்விளங்கம சீரகம் தனியா குகைநீரு மதுரம் வகைக்கு பல (வ) சர்க்கரைபலம் (உ௨) நெய்படி (வ) லேகியங்கிளரி பாக்களவுசாப்பிடவும் மேகம் அஸ்திசுரம் காய்சல் கிராணி வாய்வு பொருமல் யிருமல் கடியம் ஈளை கிலேர்ப்பனந்தீரும்.

கட்டுவாதிலேகியம்.

வ-ம்—சீமை அதிவிடையம் கடுக்காய்ப்பூ மாசிக்காய் மாதுளம்பழந்தோல் ஜாதிக்காய் லவுங்கப்பட்டை போஸ்தக்காய் கசகசா மாங்கொட்டைப்பருப்பு புளியங்கொட்டைத்தோல் இவைகள்வகைக்குவிராகனிடை (க) அபினி கோரோஜனம் இவைகள்வகைக்குவிராகனிடை (௨) நெல்லவெல்லம் பலம் (௨) நெய்பலம் (க) நெய்யை அடுப்பிலேற்றி வெல்லத்தைப்போட்டு இவைரெண்டும்கலந்து பாகு ஆகும்போது மேற்படி தினுசுகளை சூரணஞ்செய்து வைத்துக்கொண்டிருந்து பாகில் சிருகசிருகபோட்டுகிளரிலேகியம்போல்பிரக்கவும்பெரியவர்கள் குழந்தைகளுக்கும் ஆகும் சுண்டக்காய்வீதமகாலையில்கொடுக்கவும் (௩) வேளையில் சீதக்கழிச்சல் ரெத்தமநதம் அல்லது அஜீரணம் நிற்கும்.

இநமலுக்குலேகியம்.

மிளகுபலம்நிருத்தெடுத்து சூரணித்து
மகிட்சியாய்பசும்வெண்ணே பலந்தான்வாங்கி
உளவாக அடுப்பேற்றி யுருகும்போது
உத்தமனேகற்கண்டு பலந்தான்போடு
மிளகவேசூரணத்தை கொட்டிநீதான்
பிரக்கிடுவாய்லேகியம்போல் பதமாய்கிண்டி
அளவாககளர்ச்சிக்காய் வீதங்கொள்ளு
அகனுமடாயிரும்பனுந்தா னிச்சாபத்தியம்.

(இ-ள்.) மிளகுபலம் (க) பசும்வெண்ணேபலம் (க) சீனிகற்கண்டு பலம் (க) மிளகை சூரணித்து ஒருசட்டியை அடுப்பில்வைத்து நெய்யைஊற்றி உரிகினவுடன் மிளகுசூரணம்போட்டு கற்கண்டு போட்டு சிவந்துவருமளவுங்கிளரி லேகியமாக்கிவைத்துக்கொண்டு களற்ச்சிக்காய் வீதஞ் சாப்பிடவும் இச்சாபத்தியம்—எ-று.

மதனகாமேசுரலேகியம்.

வ-ம்.—சுக்கு கிராம்பு திப்பிலி ஏலம் லவங்கப்பட்டை கொத்தமல்லி அசுவகெந்தி தக்கோலம் உளுந்து திராக்ஷி பெருஞ் சீரகம் மிளகு சிருநாகப்பு ஜாதிக்காய் லவங்கப்பத்திரி தாளிச்சப்பத்திரி செண்பகப்பூ கசகசா முள்வேலம்பிசினி அபினி அதிமதுரம் வால் மிளகு திருபலாதி ஜாபத்திரி கோஷ்டம் கருஞ்சீரகம் கஸ்தூரிமஞ்கள் நீர்முள்ளிவைத்து நிலப்பனங்கிழங்கு இவைகள் வகைக்கி அரைபலமாகயெடுத்து வருக்கவேண்டியதினுசுகளே வருத்து தூள்செய்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு இதற்கு சரியிடையாய் கெஞ்சாவை நிருத்தெடுத்து நல்லஜெலத்தில் (எ) திரம் கழுவியெடுத்து விரைகாம்புமுதலானதும் நீக்கி (உ) படி நல்லசலத்தில் (ற) படி பசுநெய்விட்டு அதில் கெஞ்சாவைபோட்டு நன்ருய்காச்சி சிட்டிகட்டி நெய்யை அயசட்டியில் பிழிந்துக்கொண்டு மற்றநெய்யும் கையால் நன்ருய்வழித்துக்கொண்டு பசும்பால் உழக்கு சர்க்கரைபலம் (௩௰) ஒன்ருய்விட்டு அடுப்பேற்றி பாகுபதத்தில் சூரணங்களேக்கொட்டி நெய்யைவிட்டு பதமாகக்கிளரி யிரக்கவும் இரவில் புசித்தான்பிறகு ஒருகளஞ்சிமுதல் (௩) களஞ்சிவரையில்புசிக்கலாம்வீரியம் அதிகரிக்கும் திரேகம்சிவந்துவரும் கண்குளிர்ந்துபிரகாசிக்கும் மீளே பிருமல் பந்தம் சூலே பழையசுரம் க்ஷயம்இவைகள் நீங்கும் திரேக ஆரோக்கியமும் மனதிடமுண்டாகும்.

மிளகுலேகியம்.

வ-ம்.—மிளகுபலம் (உரு) இரெண்டரைபடி தண்ணீரில் கியாழ ம்வைத்து யெட்டுக்கு ஒருபங்காய்சுண்டயிரக்கி கற்கண்டுரெண்டரை பலம் அக்கிராகாரம் சீரகம் கிராம்பு ஏலம் கோஷ்டம் மதுரம்சிருதே க்கு வால்விளங்கம் நருக்குமூலம் வகைக்கு (வ) பலமாகயெடுத்துசூர ணித்து நெய்கால்ஆழாக்கு தேன்அரிக்காலாழாக்கு மேற்படி லேகிய த்தில் சூரணத்தைக்கொட்டி நெய் தேன் முதலானதும்விட்டு லேகிய மாய்கிண்டி கெச்சக்காய்விதம் சாப்பிட (கூகூ) கிலேற்பனமும்கபங்க ள் நீர்தோஷம் சில்விஷம் மூன்றுசுரமும் வாதமுந்தீரும்,

இந்திரியவலுவிற்குமாணிலேகியம்.

வ-ம்.—வெள்ளாட்டின்பீஜம் (ருய) வாங்கி பொடியாக அரிந்து வெய்யலில் உணர்த்தி தூள்செய்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக் கொண்டு அமுக்குறாங்கிழங்கு பலம் (க) கசகசா திருகடுகு ஓமம்ஜா திக்காய் ஜாதிபத்திரி கிராம்பு அதிமதுரம் கோஷ்டம் அக்கராகாரம்ல வுங்கப்பட்டை லவுங்கப்பத்திரி நீர்முள்ளிவிரை பூனைக்காலிவிரைஆல ன்வித்து அரசன்வித்து சாரைப்பருப்பு பாதம்பருப்பு வகைக்கும்பல ம் வ இளம்வருப்பாகவருத்து சூரணஞ்செய்து வைத்துக்கொண்டு கெஞ்சா ரெண்டுபலம் யெடுத்துக்கொண்டு நல்லசலத்தில் யேழுதரங் கழிவி விரைகாம்புமுதலானதும் நீக்கி உலர்த்தி நெய்யில்வருத்துசூர ணஞ்செய்து வைத்துக்கொள்ளவும் பசும்பால் முக்கால்படி அடுப்பி ன்மேல்வைத்து சக்கரை (உய) பலம் போட்டு பாகுபதத்தில்சூரணங் களைகலந்து கொஞ்சங்கொஞ்சமாய்கிளரிக்கொடுத்துநெய்(உய)பலம் தேன் (ய) பலம்விட்டு லேகியபாகமாய்கிளரிகிண்டி யிரக்கிக்கொண்டு கொட்டபாக்குபிரமாணம் இரவில் புசித்தானபிறகு சாப்பிடவும்,

மேகம் உக-க்கு லேகியம்.

வ-ம்.—செகப்புநாயுரிவிவேர் செகப்புநெரிஞ்சிவேர் கையாந்தக ரைவேர் மாவிலிங்கன்வேர் மிளகரணைவேர்சிவன்வேம்புவேர் காட்டுக் கருணைவேர் நீர்முள்ளிவேர் வில்வவேர் தூத்திவேர் வெள்ளெருக்கன் வேர் சிதேவிசெங்கழுணிவேர் நிலமந்தைவேர் வெள்ளைவிஷ்ணுகாந்தி வேர் ஆனைநெரிஞ்சிவேர் பொன்னாங்கண்ணிவேர்உப்பிலாங்கொடிவே ர் அவுரிவேர் முடக்கத்தான்வேர் புங்கன்வேர் கருவூமத்தன்வேர் யெ ட்டிவேர் ஆடுதிண்ணாப்பாளைவேர் விரைரிவேர் சிருகட்டுக்கொடிவேர் ஆலம்பட்டை பூமிசர்க்கரைக்கிழங்கி மருதம்பட்டைபூவரசன்பட்டை

மல்லவேபழச்சாற்றுலாட்டிமைபோல்
  மைந்தனைசட்டியிலே யிட்டுக்கேளு
அல்லவேசீரக மிளகோடேலம்
  அதிமதுரந்திப்பிலியுங் கோஷ்டமூலம்
கல்லவேவாலுழுவை தாளிச்சபத்திரி
  கடுகோடுகொத்தமில்லி சித்திரமூலம்
அல்லவேசிங்கியொடு குரோசானிவோமம்
  அப்பனேவகைக்குஅரை பலமேதூக்கே.
தூக்கியேகரிசாலை யூலாவும்பழச்சாற்றால்
  துவளாத்துமுன் மருந்தோ டொக்கச்சேரு
ஊக்கமாம்பிரண்டையது மோரிலுப்பிட்டு
  உலர்த்திடித்துஒருபலமே போடுபோடு
ஆக்கவேவங்காளச் சீனியப்பா
  அதில்பாதிபோட்டாவி நெய்யைவாரோ
நெய்வார்த்துலேகியம்போல் பண்ணிக்கொண்டு
  நேரமொருபாக்களவு அந்திசந்தி கொள்ளு
பொய்யல்லபித்தவாய்வு உஷ்ணகாந்தி
  பிரட்டல்லசத்திவலிகுன்மம் பித்தகுன்மம்
மெய்யானஅஸ்திசுரம் சன்னிதோஷம்
  வீரானஎரிகுன்மம் அசீர்ணவாய்வு
செய்யவேவுப்பசமும் அரோசிகமுந்தீரும்
  தீபமாம்பசியரிந்து சீராய்க்கொள்ளே.

(இ-ள்.) தோல்போக்கின யிஞ்சிபலம் ய கலவத்திலிட்டு யெலுமிச்ரம்பழஞ்சார்விட்டு மைபோலரைத்து ஒருசட்டியை அடுப்பேற்றி மேல்படிசாற்றை அதில்விட்டு பிரகு சீரகம் மிளகு யேலம் அதிமதுரம்திப்பிலி கோஷ்டம் மூலம் வாலுழுவை தாளிச்சபத்ரிகடுகு கொத்தமில்லி சித்திரமூலம் சிங்கி குருசானி வோமம்பிவைகள்வகைக்கு அரைபலமாகயெடுத்து கரிச்சாலைச்சாற்றிலும் அல்லது பழஞ்சாற்றிலும் துவளஅரைத்து முன்மருந்துடன் சேர்க்கவும் பிரண்டையை மோரில்உப்பிட்டு ஊரவைத்துலர்த்தியிடித்து க பலம்முன்மருந்துடன்சேர்க்கவும் சீனிசர்க்கரை மேல்படிமருந்துயிடைக்கு பாதிசேர்த்து ஆவிநெய் போதுமானவரைக்கும்விட்டு லேக்கியம்போல்கிளரி யெரக்கிக்கொள்ளவும்.

வேளையொன்றுக்கு கொட்டைப்பாக்கு பிரமாணம் அந்திசந்தி உம-நாள்சாப்பிட பித்தவாய்வு வுஷ்ணகாந்தி பிரட்டல் அசத்தி வலிகுன்மம் பித்தகுன்மம் அஸ்திசுரம் ஜன்னி தோஷம் குன்மம் அஜீரணவாய்வு வுப்புஷம் அரோசிகம் தீரும் யிச்சாபத்தியம்.

எட்டாம்பாகம் - முற்றிற்று.

உ

கடவுள் துணை.

பதினெண்சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய

வைத்தியதிரவுகோல்.

ஒன்பதாம்பாகம் எண்ணை தயிலமுறைகள்.

விநாயகர்துதி.

கலி - விருத்தம்.

மன்னுலகோர் மகிழ்ந்துகளித்திட
பெண்ணைபாக மிபம்பிடவேபின்று
கண்மூன்றுடையவன் களித்தளித்திட்டதோர்
விண்ணவர்தொழும் விநாயகன்காப்பாரே.

முகவுரைவிருத்தம்.

வாதியாம்வைதியரு மற்றபேற்கும்
வன்மையுடன்குட்சமதா யுணர்ந்துசெய்ய
ஆதரவாம்வைதியத் திரவுகோலை
அடவாகக்கண்டோர்பண் டிதரேயாக
ஓதினேனொன்பதாம் பாகந்தன்னில்
உத்தமனேயெண்ணையொடு தயிலவர்க்கம்
போதவேபரிபாஷை யில்லைமற்றுன்
பேசினேன்செஞ்சியேகாப்பாந் தானே.

நூன்முக-விருத்தம்.

கெற்பஸ்திரீகள் வயற்றுவலிக்கு பழயதுயெண்ணை.

வாங்கியேவிளக்கெண்ணை வீசையொன்று
வளமாகவடுப்பேற்றி சொல்லக்கேளு
நீங்கவேதாளிவே ரொருபிடிதான்கொண்டு
நிலையாகயெண்ணைதனில் போட்டுக்காச்சு
தாங்கவேவேறதலை யொடித்துப்பாரு
தானதுவுமமொளுக்கென்றால் யெரக்கிப்போடு
பாங்காகவுள்ளுக்கு செலுத்தும்வண்ணம்
பார்த்திடுவாய்வாசகத்தில் பரிட்சையோடு.

(இ-ள்.) விளக்கெண்ணை (க) வீசை அடுப்பேற்றி தாளிவேர் ஒரு பிடிகொண்டுவந்து யெண்ணையில்போட்டு காச்சவும் அந்தவேரையெ டுத்து ஒடித்தால் மளுக்கென்றுடையும் உடனே யெண்ணையை யிரக்க

வும் காலையில் (௭) பலம் யெண்ணை சாப்பிட்டு உடனே பழையது சாப்பிடவும் கணச்சூடுநீரும் கெற்பத்திலுள்ள சிசுவிற்கு யாதொரு வியாதியும் அணுகாது கெர்ப்பஸ்திரி (௫) வது மாதமுதல் (௯) வது மாதவரையில் அந்தந்தமாசமுதலில் (௩) நாள் சாப்பிடவும் மிச்சாபத்தியம் ஆரோக்கியமாயிருக்கும்-எ-று.

நாரசிம்மயெண்ணை.

வ-ம். வெள்ளைக்கலியாண முருக்கன்பட்டை பூவரசன்பட்டை இலவம்பட்டை தனித்தனியிளநீர்விட்டு யிடித்துப்பிழிந்து (வ) படி ரசம் பிரம்மதண்டிரசம் துத்தியிலைரசம் சிருசின்னிரசம் வகைக்குபடி (வ) கத்தாழைச்சோற் றேங்காய்ப் பிரமாணம் வெநதியம்பலம் (உ௭) தூள்செய்து (௫௰) பலம் சித்தாமணக்கெண்ணெயை அடுப்பிலேற்றி வெந்தியத்தூளைப்போட்டு கத்தாழைசோத்தை போட்டு மேல்படி பிழிந்துவைத்திருக்கும் ரசங்களையும் ஊத்திக்காச்சி பதத்தில்வடித்துக்கொண்டு பூரம் (௭) பலம் மேல்படி யெண்ணை விட்டரைத்து அதில் கலந்துவைத்துக்கொண்டு காலையில் ஒருரூபாயிடை யெண்ணை புசித்து வென்னீரசாதம் சாப்பிடவும் ௫ நாள் அல்லது எ-நாள் சாப்பிடவும் மறுபத்தியம் அரையுப்பு அரைபுளிசேர்த்துக்கொள்ளவும் தீரும்வியாதி சர்வமேகவட்டை குட்டரிணங்களும் தீரும்.

கேணச்சூட்டுக்கு குளிர்ச்சியெண்ணை.

சித்தாமணக்குயெண்ணை படிதானென்று
  சேர்த்திடுவாய்வல்லாரை அரைபடிச்சார்
உத்தமனேவெந்தியம் பலந்தான்ரெண்டு
  உளவாகபசும்பாலில்விட் டரைத்துப்போடு
சித்தியுடன்யெண்ணைதனில் கலக்கியேதான்
  சீராககாச்சிசர்க்கரை போட்டிரைக்கி
உத்தமனேசிருகரண்டி விதமேகொள்ளு
  உடலிலுள்ளசூடகன்று தணியும்பாரே.

(இ-ள்.) சித்தாமணக்கெண்ணை படி (க) வல்லாரை ரசம்படி (௭) வெந்தியப்பலம் (உ) ஆவின்பாலிலரைத்து யெண்ணையில் கலந்து காச்சிவடித்து கொஞ்சம்சர்க்கரை போட்டு கொடுத்துவரவும் திரேகம்தணிந்து குளிர்த்தியுண்டாகும்-எ-று.

அணைக்கட்டாத்தூர் யெண்ணை.

வ-ம். கரசனுங்கண்ணி பொன்னுங்கண்ணி னிலக்கடம்பு நுணாயிலை பிரமியிலை முடக்கத்தான் பொடுதலை செருப்படை வெள்ளருகு முசுமுசுக்கை புங்கம்வேர் வெங்காயம் யெலுமிச்சம்பழம் இவைகளின்சாறு தினுசுக்கு (அரிக்கால்படி) விளக்கெண்ணை (௬௫) பலம் யிவையெல்லாம் ஒன்றாய்க்கலந்து அடுப்பேற்றி பதமாய்க்காச்சி மெழுகுபதத்தில் இறக்கிவைத்துக்கொள்ளவும் காலையில் ஒருகரண்டியெண்ணையில் அரிக்கால்பலம் சர்க்கரை ஒருபலம் சீரகாரம் கூட்டி சாப்பு

டவும் உப்புகூட்டலாம் மேகம் (உக) ம் இரத்தப்பிரமியம் கண்டமாலை மேகரிணம் பவுத்திரம் மூலம் முடக்கு பிடிப்பு மேகவாய்வு மேகஞூ ரல் மேகபடலம் புண் சிலந்தி கிரந்தி அண்டவாய்வு இவைகள் தீ ரும்.

பசீகசூலை கெப்பசூலைக்கு யெண்ணை.

வ-ம். முளகரணியிலையைஉரலிலிட்டுஜலம்வார்த்துயிடித்து (டீஉ) பலம் ரசம்பிழிந்துக்கொண்டு அதில் டீஉ பலம் முத்தெண்ணை வி ட்டு உரித்தெரித்தபூண்டு திருகு ச பலம் கூட்டி காச்சிவடித்து திரே கதிடப்படி ௬ நாளைக்கி கொடுத்துவர பேதியாகும் பேதியதிகமானால் நோய்நீங்கினதென்று தெரிந்துக்கொண்டு நிருத்திவிடவும் யிச்சாபத் தியம்.

குழந்தைகட்கு மாந்தயெண்ணை.

வ-ம். உத்தாமணிரசம் (எ௰) பலம் விளக்கெண்ணை (எ) பலம் யிரண்டும்கலந்து அடுப்பேற்றிக்காச்சி யிரக்கினவுடன் பூரம் ஏலரிசி ல வங்கப்பட்டை சுக்கு வகைக்கு விராகனிடை யிவைகளை தூள்செய்து கல்வத்திலரைத்து யெண்ணையில்கலந்து வைத்துக்கொண்டு வேளைக் கி சிறுகரண்டிவீதம் கொடுக்கவும் உப்பில்லாபத்தியம் தாயார்கூட யி ருக்கவேண்டும்.

சகலரோணத்தீற்கும் யெண்ணை.

வ-ம். கொடிக்கள்ளிச்சார்படி அரிக்கால் சித்திரமூலம்வேர் யெரு க்கன்வேர் கொடிக்கள்ளிவேர் அமுக்கனுங்கிழங்கு யிவைவகைக்கு ப லம்(க)ரசம் ரசசெந்தூரம் கெந்தகம் யிவைவகைக்கு களஞ்சி(க)வே றுவகையாவும் யிடித்து சூரணித்து பற்றசரக்குபாவும் கல்வத்திலிட் டு விளக்கெண்ணைவார்த்து(உ)ஜாமம் அரைத்து ஒருபடி விளக்கெண் ணையில் போட்டுக்கலக்கி மேல்படி கள்ளிச்சாறும்விட்டு மெழுகு பத மாய்காச்சி வடித்து காலையில் உச்சிகரண்டிவிதம் ௫ அல்லது எ நாள் சாப்பிடவும் யிச்சாபத்தியம் அரைகாரம் சேர்க்கவும் சுட்ட புளி உப்பு பு சேர்ப்பதே உத்தமம்.

கைகால்பிடிப்புக்கு யெண்ணை.

வ-ம். சுத்திசெய்தவாளம் விராகனிடை(ச)மேலம் சுக்கு பூரம் வகைக்கு விராகனிடை(உ)புங்கம்பால் பலம்(க)விளக்கெண்ணை பலம் (ப) யிந்த நாலுவகை மருந்தையும் கல்வத்திட்டு விளக்கெண்ணை விட்

டரைத்து மேல்படி யெண்ணெயில்கலக்கி மூன்றுநாள் சூரியபுடம்வை க்கவு காலேயில் கரண்டிவிதம்(ரு) (எ)நாள்சாப்பிடவும் சுட்டபுளி வருத்தபுப்பு கூட்டவும்.

அச்சரத்திற்கு யெண்ணெ.

வசம்போடுபுளிகருணை கிழங்குதானும்
வெங்காயம்வெள்ளருகு நஞ்சஞ்சருப்பன்வேறு
உளவாகனிலப்பனம் கிழங்குதானும்
உத்தமனேபெருங்கிழங்கு தூம்பராஷ்டம்
விதமாககருஞ்சீரகம் கடுகுரோகணியும்
வேண்டப்பாவினை தீர காட்டுக்கருணைகிழங்கு
யிவையெல்லாம்வகைவகைக்கு பலந்தான்கொள்ளு
யெளிதிவிட்டேன்வாசகத்தில் வெளியாய்தானே.

இ-ள். வசம்பு புளி கருணைகிழங்கு வெங்காயம் வெள்ளருகு நஞ்சருப்பான்வேறு னிலப்பனங்கிழங்கு பெருங்கிழங்கு தூமராஷ்டம் கருஞ்சீரகம் கடுகுரோகணி காட்டுக்கருணைக்கிழங்கு இவைவகைக்கு க)பலம் ஆத்துத்துமுட்டிக்காய்(உ)பலம் சவுரிக்கிழங்கு பலம்(க)யிந்த கினுசுகள் யாவும் பஞ்சுபோலிடித்து ஒருபடி விளக்கெண்ணெயில் போட்டு காச்சிவடித்து உச்சிக்கரண்டிபளவுவார்க்கவும்(௪) (ரு)விசை பேதியாகும் அதிகமாய்பேதியானல் ஓமங்கொண்டுவந்து வேன்னீரில் அரைத்து பால்பிழிந்து(க) அல்லது(உ)பாலாடைவார்க்கவும்யெண்ணெ(ங)நாள்கொடுக்கவும் சுட்டபுளி வருத்தவுப்பு சிறுபிள்ளையானல் தாய்பத்தியமிருக்கவேணும்.

கொருக்குத்த வெள்ளைக்கு யெண்ணெ.

பூரமுடன்யேலம்வோமம் யிவைகள்மூன்றும்
புண்ணியனேவிராகனிடை ஒன்றுசேரு
சீராகலவுங்கம்யெட்டு விரானுங்கூடி
செம்பரித்திசாரில்நாலு சாமமாட்டி
நேராகவிளக்கெண்ணெ யஞ்சிபலமும்விட்டு
நம்பியேரவிபுடம்வோர் நாளும்வைத்து
பேராககரண்டிவிதம் யேழ்நாளுண்ண
பறக்குமடாகொருக்குவெள்ளை யிச்சாபத்தியம்

(இ-ள்.) பூரம் ஓமம் ஏலம் வகைக்குவிராகனிடை(க)லவுங்கம் விராகனிடை(அ)இவைநான்கும் செம்பருத்திசார்விட்டு (ச) ஜாமம் அரைத்து(ரு)பலம் விளக்கெண்ணெயில் கலக்கி ஒருநாள் சூரியபுடம் வைத்து மறுநாள்முதல் காலேயில் கரண்டிவிதம்(ரு)நாள் அல்லது எநாள் சாப்பிடவும் இச்சாபத்தியம் மறுபத்தியம் அவ்வாறே யிருக்கவும் தீரும்.

யெண்ணெமுறைகள் முற்றிற்று.

கடவுள் துணை.

தைலமுறைகள்.

வெட்டிவேர் தைலம்.

வெட்டிவேர்பத்துபலம் கொண்டுவந்து
வேணயட்டும்யிடித்துரெண்டு படிஜலத்தில்
கொட்டியேகால்படிக்கி கியாழம்சுண்ட
கூட்டப்பாநல்லெண்ணை சபனைகத்தான்
விட்டுவிடு அதிமதுரம் பலந்தானென்று
வேணயட்டும்மையதுபோல் அரைத்துப்போடு
சட்டெனவேமெழுகுபத மாகக்காச்சி
ஸ்தானமதுசெய்துவர வியாதிபோச்சே.

(இ-ள்.) வெட்டிவேர் ௰ பலம் கொண்டுவந்து மைபோலிடித்து ஒருபடிஜலத்தில்கொட்டி அடுப்பேற்றியெரித்து அரிக்கால்படி கியாழத்தில்யிரக்கி யிருத்து கால்படி நல்லெண்ணைசேர்த்து அரைபலம் அதிமதுரம் நெகிழ அரைத்துப்போட்டு மெழுகுபதத்தில் காச்சியிருத்து ஸ்தானம்பண்ணிவர கண்புகைச்சல் காதுமத்திபம் மண்டை சூலை பீனிசம் யிவைதீரும்.

ஜன்னிக்கு பிரம்மராகாசித்தைலம்.

வ-ம். இராகாசி மடலைகொண்டுவந்து வரகுவைக்காலால் வதைக்கி சார்பிழிந்து சாரளவுநல்லெண்ணைசேர்த்து அடுப்பேற்றி சிறுதணலாயெரித்து யிரண்டும் ஒன்றபட்டபிரகு அரைபடி தயிலமிருந்தால் டீக்காமல்லி சீமைகிச்சிலிகிழங்கு வகைக்கு கால்பலம் தூள்செய்துபோட்டு யிறக்கவும் நாலுஸ்தானத்தில் பின்கழுத்துநோய் பல்ஜிலிஜிலிப்பு தலைவலி யிவைகள் நீங்கும் கோழிகூப்பு ஆட்டிரச்சி கத்திரிப்பிஞ்சி துவரை மிளகி நீர் ஸ்தானம் செய்ததினம் பகலில் நித்திரை பொடி சுருட்டு அதிகவாசிப்பு ஆகாது.

வில்வாதித் தைலம்.

பத்துபலம்வில்வவேர் கொண்டுவந்து
பஞ்சுபோல்நரிக்கிகொண்டு படிஜலத்தில்
சுட்டுவிடுகால்படிக்கி சுண்டக்காச்சி
தூகளாமல்கியாழமதை யிருத்துப்போடு

சிக்கெனவேநல்லெண்ணை சமமாய்ச்சேரு
சந்தனந்தான்பலம்வொன்று நிருத்துப்போடு
கொப்பெனவேஸ்தானமது செய்வாயானால்
குடிகொண்டபித்தசூலை கண்புகைச்சல்போமே

(இ-ள்.) வில்வவேர் (௰) பலம் கொண்டுவந்து யிடித்து (௨) படிஜலத்தில்போட்டு கால்படியாக சுண்டக்காச்சி வடித்து அதற்குச் சரியாக நல்லெண்ணை சேர்த்து அடுப்பேற்றி சந்தனம்(௧)பலம் அரைத்துப்போட்டு மெழுகுபதமாய்க்காச்சிமுழுகவும் பித்தம்(௧)பாலவெட்டை மேகம் கண்குளிர்ச்சி யுண்டாகும் யிச்சாபத்தியம்.

கீழாநெல்லித் தைலம்.

வ-ம். சமூலம் கீழாநெல்லி கொண்டுவந்து யிடித்து (அரை) படி சார்பிழிந்து (அரை) படி நல்லெண்ணைவிட்டு சித்தாமுட்டி அதிமதுரம்சந்தனம் வகைக்கு (௨) பலம் அரைத்துப்போட்டு பதமாய்க்காச்சி தலைமுழுகிவர பித்தம் கைகாலெரிவு வெள்ளோர்க்காளம் வாயூரல் நீர்சுருக்கு இவைகள்நீக்கும் யிச்சாபத்தியம்.

சாலேசுரத்திற்கு சந்தனாதித்தைலம்.

வ-ம். சந்தனஅத்தர் பலம் அரை கஸ்தூரிவோமப்பூ வலாரிவேர் அவுரிவேர் மாவிலிங்கம்வேர் பொன்னாங்கணிவேர் ஓரிலைத்தாமரைவேர் செப்புநெரிஞ்சிவேர் அமுக்குருங்கிழங்கு கஸ்தூரிமஞ்சள் வகைக்குகால்பலம் இவையில் கஸ்தூரியும் அத்தரும்தவிர மற்றதினுசுகளை உலர்த்தியிடித்து சூரணஞ்செய்து ௧ படி நல்லெண்ணையில் போட்டு கடுகுபதமாய்காச்சி ஸ்நானஞ்செய்யவும் கண்சாலேசரம் உடனே நீங்கும்.

கழந்திசுவிற்குத் தைலம்.

வ-ம். பேய்த்துமுட்டிகாயொன்றை சிறுபில்லைகளாக அருத்து நல்லெண்ணை ௫ பலத்தில்போட்டு கிச்சிலிக்கிழங்கு கஸ்தூரிமஞ்சள் யிவையிரண்டும் தட்டிடை கஸ்தூரி ஒருவிராகனிடை யிவை மூன்றும் பொடித்து யெண்ணையில்போட்டு காச்சி தலைமுழுகி வரவும் கழுத்திசுப்பு நீங்கும்.

சர்வரிணந்திர்தும் சிங்கிச்தைலம்.

முதார்சிங்கிகெந்தகந்தான் சூதம்நாவி
சிறப்பானவசம்பேடு படிகாரந்தான்
உரைக்கிறேன்நீலமது பரங்கிச்செக்கை
உத்தமனே அரிதமுடன் கடுக்காய்பத்தும்
வகைக்குவகைகால்பலந்தான் நிருத்திடித்து
வளமானபுங்கம்பால் ஒதியம்பாலும்
கருத்தாகதேங்காய்ப்பால் வெங்காயச்சார்
கண்மணியேமெழுகுபதம் விட்டிரக்கே.

(இ-ள்.) முதார்சிங்கு படிகாரம் கெந்தகம் நீலம் சூதம் பரங்கிச் செக்கை நாவி துத்தம்வசம்பு கடுக்கா இவைகள் வகைக்கு(வ)பலமா கயிடித்து வைத்துக்கொள்ளவும் புங்கம்பால் ஒதியம்பால் ஆழாக்கு தேங்காய்ப்பால் உழக்குருபிழிந்து காச்சி நெய்யெடுத்து அந்தநெய்யி ல் தூளைக்கொட்டி மேல்படி யிருவகைப்பாலையும் வூத்தி வெங்காயச் சார் ஆழாக்குவிட்டு கடுகுதிரளக்காச்சி இரக்கிவைத்துக்கொண்டு அ ரையாப்பு ரிணம் ஆராதபுண் புரைரிணம் குழிப்புண் இரத்தக்கசிவு ரி ணம் ஆரி ஆரிசினைக்கும் ஆனை ரிணம் சிங்கிரிணம் யிதுகளுக்கெல்லாம் பூசவும் ஆரிவிடும்.

திரேக நிதானத்தைலம்.

வ-ம். வாத தேகிகளுக்கு பசுப்நெய் (க) யெள்ளெண்ணெ(உ)முத் தெண்ணெ(ங)யிந்தபிடைகளாகக்கூட்டி காச்சிமுழுகவும் பித்ததேகிக ளுக்கு யெள்ளெண்ணெ(க)முத்தெண்ணெ(உ)நெய்(ங)யிந்தயிடைகளா கக்கூட்டி காச்சிமுழுகிவரவும் சேத்துமதேகிகளுக்கு முத்தெண்ணெக நெய்(உ)யெள்ளெண்ணெ( )யிந்தயெடைகளாகக்கூட்டி காச்சிமுழுகி வரவும் அரப்புசிரகம்.

ஐங்கூட்டுத் தைலம்.

வ-ம். வேப்பம்யெண்ணெ புங்கம்யெண்ணெ யெள்ளெண்ணெ முத் தெண்ணெ பன்னையெண்ணெ யிவைகளை சமமாகக்கூட்டி காச்சிமுழுகி வர வாதம் தனுர்வாதம் மகாவாதம் ஜன்னி சுரம் தோஷம் நிவர்த்தி யாம்.

தலைவலிக்குத் தைலம்.

வ-ம். மிளகுபலம் (ய) கஸ்தூரி மஞ்சள் பலம் க கருஞ்செம்பைச் சாறு யிஞ்சிச்சாறு வகைக்குபடி அரிக்கால் யிரண்டுவகையும் யிடித்து சூரணித்து முக்கால்படி நல்லெண்ணெயில்போட்டு இருவகைச்சாரும்வூத்தி அடுப்பேற்றி கடுகுபதத்தில் காச்சியிரக்கி ச நாள் வட்டமாக ச ஸ்தானம்செய்யவும் தீரும்.

அண்டத் தைலம்.

வ-ம். கோழிமுட்டை ய கொண்டுவந்து அவித்து மஞ்சள்கருவை யெடுத்து யெண்ணைபழகிய சட்டியில்போட்டு அடுப்பில் வைத்துயெரித்தால் தைலமிரங்கும் யெரிக்கும்போது கிளரிக்கொண் டிருக்கவேண்டியது அந்ததைலத்தை ஒருகோப்பையி லிருத்துக்கொண்டு(உ)பலம்பூண்டை மேற்றோல்வுரித்து கல்வத்தில்போட்டு அறைத்து கொஞ்சம்உமிபோட்டு பிசிரிபிழிந்தால் தைலமிரங்கும் கஸ்தூரி விராகனிடை(வ)குங்குமப்பூவிராகனிடை ஒ கோரோசனை விராகனிடை அரை இம்மூவறும் பூண்டுதைலத்தில குழைத்து மேல்படி அண்டத்தைலம் ஒன்றாய்க்கலந்து சீசாவில் வைத்துக்கொண்டு பெரிய துட்டிடை நாக்கில்தடவும் சகலதோஷமும் தீரும் நாவரட்சி வாய்வு முதலானதும்தீரும் யிப்படி(ங)(ரு)அல்லது(எ)நாள் கொடுக்கவும்கடும்பத்தியம்.

ஜன்னிக்குத் தைலம்.

பழிக்காதேயின்னமொருமுறையைக்கேளு பனைமரத்தின்வேர் அறுகம்பில்லுவேறு, செழித்தஅரைக்கீரையுடவேருங்கூட சேரப்பாநாணையுடகிழங்குதானும், பழுத்துலர்ந்தமுளகாயில்யிரண்டுபோடு பலிங்குசாம்பிராணிகால்பலமேபோடு, ஏழுத்தினயிவ்வகையெல்லாம்யிடித்துக்கொண்டு வையப்பா்யெண்ணையரைப்படியைதானே.

அரைப்படிதான்நல்லெண்ணை அடுப்பிலேற்றி ஆறும்ஒன்றாயிடித்து அதிலேபோட்டு, அரைப்பதமாய்த்தயிலமதுகாயும்போது அப்பனேஎட்டிபழம்ஒன்றுபோடு, பருவமாய்காச்சியதைஎறக்கிக்கொண்டு பண்ணப்பாவாரத்துக்கிரண்டுஸ்தானம், சிரசுநோய்புருவநோய்கழுத்துநோயும் சொல்லாமல்போகுமடாகுரூநாதானே.

தைலமுறைகள் முற்றிற்று.

உ

கடவுள் துணை.

பதினெண்சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய

வைத்தியதிரவுகோல்.

பத்தாம்பாகம் கியாழவீரியவிர்த்திமுறைகள்.

விநாயகர் துதி.

விருத்தம்.

ஐயமென்றி யருமுனியென்பர்கள்
கைமுறையெனுங் கியாழமதைசொல்ல
மெய்யருளாகவே முற்றுமேயோங்கிடத்
துய்யகரிமுகன் தன்னடிபோற்றுவாம்.

முகவுரை-விருத்தம்

பூலோகவைத்தியரே சொல்லக்கேளீர்
பொய்யுரையாபதினெண்பேர் புகன்றவர்க்கு
காலமதுசென்றுனு மவர்கள்சொன்னக்
கைமுறையாங்கியாழமது பொய்த்திடாது
ஞாலமதிற்யின்னூலின் பரிக்ஷைகண்டு
நவிலுகின்றமுறைபோலேகண்டுசெய்ய
கோலமுள்ளபிணியாவும் பறந்துபோகக்
கூறினேன் செஞ்சியேகாம்பரந்தானே.

நான்முக-விருத்தம்.

சுரத்திற்குக்கியாழம்.

ருத்திரசடைபாந்தன்னை றுலங்கவேபுட்டுவைத்து
சித்தமாயிறக்கிச்சாறு பிழிந்ததில்சொல்லக்கேளு
பத்திபேமுளகுபேலம் பொடியதுசெய்துப்போட்டு
சுத்தமாய்குடித்தபேர்க்கு சுரமதுபறக்கும்பாரே.

ருத்திரசடையை பிட்டிட்டு பிழிந்து அந்தரசத்தில் மிளகுவலம் தூளாக்கிப்போட்டு கொடுத்தால் சுரம்விட்டுப்போகும்.

உஷ்ணவாயுவிற்குக்கியாழம்.

சிவதைவேர்பலம்ரெண்டை சித்தமாய்கொண்டுவந்து
தவமதாய்படிசலத்தில் தானதைபிடித்துப்போட்டு

அவமதாய்சுண்டககாச்தி யாழாக்குகியாழம்வாங்கி
உவமதாயிருவேளைக்கொள்ள ஒடுமேஉஷ்ணந்தானே.

(உ௰) பலம் சிவதைவேர் கொண்டுவந்து பஞ்சிபோல்யிடித்து ஒருபடி ஜெலம்விட்டு அழாக்கு கியாழமாகக்காச்சி வடித்து இருவேளைகொடுக்க நிவர்த்தியாகும்.

பல்வலிக்குக்கியாழம்.

நன்னயமாகவேதான் நாயுரிவிசமூலந்தன்னை
மன்னனேகியாழம்வாங்கி மருத்ததைநாலொன்றாக்கி
தன்னையோர்நாலுயைந்துத் தடவைநீகொப்பளிக்க
பின்னியபல்லிலுள்ள பிணியதுபறக்கும்பாரே.

நீலிமருந்து செடியென்னும் அவுரிச்செடிசமூலம் கொண்டு வந்துநாலுக்கொன்றாய் கியாழம்வடித்து வாய்கொப்பளிக்க பல்வலி தீரும் (௪-௫) வேளைசெய்யவும்.

பித்தவாய்வினால்கண்ட வயற்றுவலிக்குக்கியாழம்.

பறந்திடவேவற்றுவலி சொல்லக்கேளு
பகரும்வெட்பாலரிசி பலந்தானாலு
சீறகமும்பலம்நாலு சேருசேரு
செப்புவெரிஞ்சிவேர் பலம்அரைதானாகும்
நிரையாகயிம்மூன்று மருந்தும்சேர்த்து
நெரிக்கியதைகியாழம்வைத்து மூன்றுநாளும்
வரமாகஉள்ளுக் கிருவேளைகொள்ள
வயற்றிலுள்ளநோய்களெல்லாப் வாங்கும்பாரே.

வெட்பாலரிசி பலம் (௪) சீரகம்பலம் (௪) செப்புநெரிஞ்சிவேர் பலம (,௰) இம்மூன்று மருந்தும் சேர்த்து யிடித்து மூன்றுநாளைக்கி இரண்டுவேளையும் கியாழம்வைத்து சாப்பிட வயற்றுநோய்தீரும்.

மாந்தசுரத்துக்குக்கியாழம்

மிளகு பலம் ௳ அதை சாம்பலாக்கி சீரகம் பலம் ௳ வெடிக்க விட்டு புதினாயிலை.பிடி உ செவக்கவறுத்து சீவினசுக்கு பலம்-௳- யேலக்காய் பலம-௳- நரிக்கிப்போட்டு தண்ணீர்படி (,௰) வார்த்து-௳-படியாக்கி யிரக்கிமுன்சொன்ன அனுபானத்தில் நாளொன்றுக்குமூன்றுவேளை கொடுக்கவும்.

பித்தசுரத்திற்குக்கியாழம்

கோரக்கிழங்கு சந்தனத்தூள் வெட்டிவேர் சீந்தல்கொடி நன்னாரிவேர் சுக்கு கோஷ்டம் பிலுப்பைப்பூ யேலக்காய் அதிமதுரம்-இவைகளை குளிரயிடித்து சட்டியில்போட்டு-ரு-நிமிஷம் ஊரவைத்து அடுப்பின்மேரில்வைத்து சிருதீயாயெரித்து நாலிலொன்றாய்க் காச்சியிரக்கவும் அனுபானத்தில் நாளொன்றுக்கு மூன்றுவேளை கொடுக்கவும்.

ஊஷ்ணமாந்தத்திற்குக்கியாழம்.

செவியும்சன்ருஷடகம் சித்திரமூலம் வேர்பட்டை சீவினசுக்கு கெண்டுபரங்கி வகையொன்றுக்கு பலம்-வ-யிவையிடித்து சட்டியில் போட்டு உ படி ஜலம்விட்டு ஆழாக்குக்காச்சி நாளொன்றுக்கு மூன்றுவேளை கொடுக்கவும்.

பிள்ளைமாந்தக்கியாழம்.

ஆமணக்குயிலைபிடி உ உப்புபிடி க யிவைகளை சட்டியில் போட்டு சாம்பலாக்கி கொட்டிவிட்டு அந்தசட்டியில் கருஞ்சீரகம் வ ஓமம் வெடிக்கவிட்டு சுக்கு சன்ருஷ்டகம் பலம் வ நரிக்கிப்போட்டு உ படி ஜலம்வார்த்து வ படி யிரக்கவும் நாளொன்றுக்கு மூன்றுவேளை கொடுக்கவும்.

பித்தசுரத்துக்குகியாழம்

வேப்பீர்க்கு புளியீர்க்கு நொச்சியீர்க்கு மாயீர்க்கு நொணுயீர்க்கு பொடுதலை உத்தாமணிபிடி உ பூண்டுதிரி ௩ யிவைகளைசிவக்க வருத்து அரிசி திப்பிலிவிராகனிடை க கோஷ்டம்விராகனிடை க யிவைகளை நரிக்கிப்போட்டு தண்ணீர் மூக்காபடிவிட்டு ௩ ஆழாக்கு யிரக்கி நாளொன்றுக்கு மூன்றுவேளை கொடுக்கவும்.

உப்பிஸமாந்தத்துக்குகியாழம்.

கோரைக்கிழங்கு சீவனசுக்கு சீந்தல்கொடிவில்வவேரோடு கொத்தமல்லி பேய்ப்புடலை திப்பிலி வகைக்குபலம் வ கடுக்காதோல் பலம் உ கடுகுரோகணி பலம் அரை யிவைகளை குமுராயிடித்து ௩-டு பிரித்துஒவ்வொருபங்கை சட்டியிலிட்டு அரைபடி ஜலம்வார்த்து வ-படி ஜலத்துக்குயிரக்கி சாப்பிடவும் மறுநாளும் யிப்படியேசாப்பிடவும்.

சோரந்துகீகுவாய்விர்க்குகியாழம்.

சூரத்துநிலாவிரை பலம் க ஆல்பகடாபழம் பலம் வ அதிமதுரம் பலம் வ கோரோசனம் பலம் வ கடுக்காய்பிஞ்சி பலம் வ இவைகளை குமுறாபிடித்து சட்டியில்போட்டு அரைப்படி ஜெலம்யிட்டு அன்றிராமுழுதும் ஊரவைத்து மறுநாள்காலையில் அடுப்பில்வைத்து சிறுகயெரித்து நாலில்வொன்றாகவறுத்து அதில்தீராட்சி உப்புவிராகனிடை வ சேர்த்து நாளொன்றுக்கு மூன்றுவேளை சாப்பிடவும்.

பித்தசாந்திக்கிகியாழம்.

கரிமஞ்சள் மரமஞ்சள் சரக்கொண்ணைப்பட்டை கண்டுபரங்கி திப்பிலிகட்டை கோரக்கிழங்கு அதிமதுரம் பேலக்காய் இவை வகையொன்றுக்கு பலம் வ இவைகளை குமுறாபிடித்து நாளொன்றுக்கு மூன்றுவேளை கொடுக்கவும்.

பித்தசீதளந்திற்குகியாழம்.

வட்டத்திருப்பி ஆமைவோடு மிளகு நிலவேம்பு காவட்டம்பில்லுகாடிகாரம் கரசலாங்கண்ணி இவைகளை சாம்பலாக வருத்துக்கொண்டு சூரிபகாந்தி விஷ்ணுகாந்தி நிலத்துளசி இம்மூன்றும் பொன்வருப்பாய் வருத்து மேற்படி சாம்பலுடன் போட்டுகொண்டு கருஞ்சிரகம் ஓமம் வெடிக்கவிட்டு சுக்கு சன்னராஷ்டகம் சிந்தல் தண்டு கடுக்காய்த்தோல் களிப்பாக்கு கடுகுரோகணி கத்தாழைசருகு இவைகளை நருக்கிப்போட்டு படிஜெலம்விட்டு கால்படியாக யிரக்கி அந்தியிலும் காலையிலும் வேளைக்கி ஆழாக்கு வீதம் இரண்டுநாள் கொடுக்க நிவர்த்தியாகும்.

பித்தவாய்விற்குகியாழம்.

வட்டத்திருப்பி நிலவேம்பு மிளகு மயிலிறகு பட்டித்துணி வசம்பு இவைகளை சாம்பல் அல்லது பஸ்பமாக வருத்துக்கொண்டு கருஞ்சிரகத்தை வெடிக்கவிட்டு சுக்கு மஞ்சள் கொஞ்சம்போட்டு முக்கால்படி தண்ணீர்விட்டு ஆழாக்குகியாழமாக யிரக்கி இருவேளை சாப்பிடவும்தீரும்.

சாதாரணபித்தத்திற்குகியாழம்.

வசம்பு பலம் வ லவுங்கப்பட்டை பலம் வ வெள்ளைப்பூண்டு பலம் வ இம்மூன்றும் ஒன்றிரண்டாய் உடைத்துவறுத்து ஆழாக்கு ஜெலம்விட்டு அரைபாழாக்கு கியாழமாக யிறக்கி தேன்விட்டு ௫ வேளை கொடுக்கவும்.

குளிர்காச்சலில்கண்டநாவரட்சிக்கியாழம்

வட்டத்திருப்பி வசம்பு நிலவேம்பு நிலப்பூச்சி மிளகு இவை ௫ திறுசும் சட்டியில்போட்டு நீராகக்கருக்கி கருஞ்சீரகம் ஓமம் பொரியவிட்டு அரைப்படி தண்ணீர்விட்டு ஆழாக்கு கியாழமாக யிறக்கி இருவேளை கொடுக்கத்தீரும்.

கியாழமுறைகள்.

முற்றிற்று.

கடவுள் துணை.

வீரியவிர்த்திமுறைகள்.

இந்திரியங்கட்ட.

தண்ணிவிட்டான்கிழங்கு நிலப் பனங்கிழங்கு
  தன்னோடுஆனையென்ற நெரிஞ்சிசேர்த்து
கண்மணியேவகைக்குவொரு பலமாய்தூக்கி
  கருத்தாகமைபோல யரைத்தெடுத்து
திண்ணமிலாகால்படி யாவின்பாலில்
  தான்கலந்துகாச்சியதை யிரவிலுண்ணு
தண்ணியைப்போல்நீத்திருந்த விந்துதானும்
  தானதுவும்நங்கைப்போல் கட்டும்பாரே.

பச்சை நிலப்பனங்கிழங்கு சீனம் தண்ணீர்விட்டான் கிழங்கு ஆனைநெரிஞ்சிக்காய் வகைக்கிதோலா க இவைகளை மைபோலரைத்து காற்படி பசுப்பாலில் கலக்கி காச்சி இரவில் புசித்தான் பிறகு சாப்பிடவும் இப்படி மூன்றுநாள் கொள்ள நீத்திருந்த யிந்திரியங் கட்டும்.

வீரியவிர்த்திக்கி.

சுக்கோடுசந்தணத்துள் வகைக்குரெண்டு
  பலமாககாசினிவிரை பலந்தான்வொண்ணு
சிக்கெனவேசீரகமும் பலந்தானொண்ணு
  சேர்த்துமேகல்வத்தி லிட்டரைத்து
பக்குவமாய்பில்லைதட்டி வுலர்த்திக்கொண்டு
  பாலகனேவேளைக்கு துலானிடையேகொள்ளு
தக்கபடிரூபாயிடை பன்னீருண்ணு
  தப்பினால்நல்லசலம் வுண்டிடீரே.

சந்தனத்தூள் பலம் உ சுக்கு பலம் உ காசினிவிரை பலம் க சீரகம்பலம் க இவைகளை கல்வத்திலரைத்து பில்லை பில்லையாகச் செய்துணர்த்தி வேளைக்கி ஒருதோலாவீதம் கொடுத்து உடனே பன்னீராகிலும் நல்லஜெலமாகிலும் ஒரு ரூபாயிடை சாப்பிடவும்.

இந்திரியக்கட்டுக்கு சூரணம்.

நறுவிலியன் பிஞ்சு கருவேலன்பிஞ்சு காட்டுப்பெரண்டையிலை இவைகளைத் தனித்தனியாய் நிழலிலுணர்த்தி யிடித்து சூரணமாகச் செய்து அதற்குச் சரியிடையாய் சக்கரைகூட்டி இரவில் போஜனஞ் செய்தபிறகு திருகடிபிரமாணம் புசித்து அழாக்கு பால்சாப்பிடவும் இப்படிங்கு (௰௫) நாட்புசிக்க நீத்திருந்த இந்திரியங்கட்டும்.

இந்திரியபுஷ்டிக்கி

ஒருகோழிமுட்டை வெள்ளைக்கருவும் தேன் இஞ்சி சரம யசும்நெய் வெள்ளைவெங்காயம் இவ்வைந்தும் சமயிடையாய் கூட்டிமத்தித்து சிறுலவுங்கப்பட்டை விராசனிடை அரை கூட்டிப்புசிக்கவும் இவ்விதம்-எ-நாளைக்கு புசிக்கும்போது ஒருபலம் நல்லெண்ணெயில் கால்தோலா குங்குமப்பூ கூட்டியிழைத்து லிங்கத்திற்கு லேப் செய்து வரவும் அதாவது முலாம்பூசுவதுபோல் மேலேதடவி வரவும் இந்திரியம் அதிகரிக்கும் லிங்கம் வலிவுதரும்.

வீரியவிர்த்திக்கி

காலையிலெழுந்து பொன்னாங்கண்ணி யிலைகளை பிடிங்கி வாய்கொண்டமட்டும் மென்றுதின்னவும் இப்படி (௪௰) நாளைக்கி தின்றுவர வீரியவிர்த்தியாம்.

விந்துகலிதமாகாதிருக்க

தாழம்பூவின் உள்ளேயிருக்கும் விபூதியை யெடுத்து கோழிமுட்டை வெள்ளைக்கருவாலேயிவிழைத்து தண்டில் பூசிப்புணர விந்து சீக்கிரத்தில் கலிதமாகாது.

பீஜம்கெட்டிப்பட

எட்டிக்கொட்டை அமுக்கனங்கிழங்கு வசம்பு சமநிடையாக யெடுத்து பசும்பால் விட்டரைத்து லிங்கரம்புமீது ஒருவாரம் தேய்த்துவர கெட்டிப்படும் மிகுந்தவலிவுகொள்ளும்.

விரியவிர்த்திக்கி

ஜாதிக்கா அபினி காமப்பூ லவுங்கம் வகைக்கி (கவ) விராகனிடையாக யெடுத்து அரைத்து ஒரு ஊர்க்குருவின்வயற்றைக்கீரி குட

ல்முதலான அசுத்தங்களைநீக்கி அதனுள்வைத்து நூலினால்தைத்துஅ தற்குப்போதுமான நெய்யில்போட்டு பொரித்தெடுத்து பெலும்பு போக்கி மெழுகுபோலரைத்து கெச்சக்காய்பிரமாணம் சாப்பிட்டு உடனே ஆழாக்குபால் சாப்பிடவும் இப்படி -சம-நாள் சாப்பிடவீரிய விர்த்தியும் திரேகவலிவுங் கொடுக்கும்.

வீரியவிர்த்திலேகியம்.

ஜாதிக்கா சாரபருப்பு பாதிமிபருப்பு காமப்பூ மாவுசுக்கு தேத்தான்கொட்டை முருங்கைப்பிசின் முருங்கைப்பூ வகைக்கி உ-அரை விராகனிடையாக வெடுத்து ஒருகோழிமுட்டை வெள்ளைக்கருவினால் மெழுகுபோலறைத்து ஒருபலம் நெய்யில்போட்டு அறைபலம் சற்கரைகூட்டி அடுப்பேற்றி லேகியம்போற் கிண்டி கெச்சக்காய் பிரமாணம் இருவேளை சாப்பிடவும் இப்படி ௯ம நாள் அதுவறையிலும் ஸ்ரீசம் பந்தங்கூடாது.

இருதயவலிவிற்கு.

சிறுலவுங்கப்பட்டை கெப்புநிரமான காவி சந்தனத்தூள் வகைக்கி விராகனிடை க தூள்செய்துவெள்ளைச்சர்க்கரை ௪ விராகனிடையில் கூட்டி புசிக்கவும்.

இதுவுமது

இலவன்கோந்து சுக்கு ஏலரிசி சோம்பு அதிமதுரம் சந்தனம்வில்வசதை ரோஜாப்பு வகைக்கிதோலா(க)தனியாபலம்(௯)சீனைகற்கண்டுபலம் (உ) இவைகளை சூரணஞ்செய்து முன்னைக கற்கண்டை அடுப்பேற்றி ஜெலம்கொஞ்சம்விட்டு பாகுசெய்து அதிற்சூரணங்களை கெட்டிபாகமாய்க கிளரி வேளைக்கு தோலாவீதம்சாப்பிடவும்.

சரீரம்நன்றாக.

சுக்கு கடுக்கா திப்பிலி வாலுளுவையரிசி சமனைச்சேர்த்து தேனில் அரைத்து தூதளங்காய்ப் பிரமாணம் சாப்பிட்டு உடனே பால் ஆழாக்குசாப்பிடவும்.

பத்தாவதுபாகம்-முற்றிற்று.

உ

கடவுள் துணை.

பதினெண்சித்தர்கள் திருவாய்மலர்ந் தருளிய

வைத்தியதிரவுகோல்

11-வது கண்டா அவிழ்தபாகம்

கலி - விருத்தம்.

விநாயகர்-துதி.

கண்டாயவிழ்தங் கனமுடனேதிடும்
பண்டாரும் பதினோராம்பாகமிது
செண்டுபோல்பிணி தானதுபறந்திட
கண்டுதமிழ்க்குமுன் கணபதிகாப்பரே.

நான்முகம்.

நீறேழுக்குக்கு மருந்து.

மன்னனேகேளாதிராக்ஷி பழமதைகொண்டுவந்து
உன்னிதமிளகுசாம்ப லாக்கியேவொக்கசேர்த்து
தன்மையாயரைத்துவுண்ண தங்குநீறெழுக்குநீங்கும்
கன்னலுமொழியேகல் லடைப்பதுதீரும்பாரே.

திவிதாட்சிபழத்துடன் மிளகும் சமமாய்ச்சேர்த் தரைத்துசாப்பிட கல்லடைப்பு நீரொழுக்கு நீங்கும்.

வாய்வேக்காளத்திற்கு மருந்து.

சிந்தையில்கவனமாக திருனீற்றுபச்சிலையைநீதான்
அந்தமாயதிகாலையில் லரிந்துவாய்வாய்கொள்மட்டும்
விந்தையாய்னதுவேயேழு தினமதுதின்றையானால்
பந்தமாம்வாய்வேக்காளம் பறந்திடும்பரிக்ஷைபாரே.

அதிகாலையில் திருநீற்றுப்பச்சிலே வாய்கொண்டமட்டும் மென்றுதினன் நீங்கும் (டு எ) நாள் தின்னவும்.

பல்வலிக்கு கியாழம்.

நன்னாரிவேர்கியாழத்தி நவின றிடுங்காடிவிட்டு
மன்னனேவந்துநாளி மறவாமல்சொல்லக்கேளு
தன்னிகருகவாயில் தான்வார்த்துகொப்பளித்து
உன்னிதமாகவந்தால் ஓடுமேபல்லின்னோயு.

நன்னாரிவேர்கியாழத்தில் காடிகொஞ்சம்விட்டு வாய்கொப்பளித்துவர பல்வலி சுவஸ்தப்படும்,

படைகளுக்குப் பூசும்மருந்து.

நத்தையைசுட்டுசாம்ப லாக்கியேசொல்லக்கேளு
சித்தமாய்தேனில்கூட்டி படைகளின்புண்ணேறத்தில்

சுத்தியேதடவிவந்தால் சொல்படைபுண்களெல்லாம்
தத்தியேவுன்னைவிட்டு தானதுவேயோடும்பாரே.

நத்தையைசுட்ட சாம்பலை தேனில்கலந்து படைகளின் ஓரத்தில்வரும் புண்ணின்மேல்பூச சொஸ்தமாகும்.

இரவுபேதி.

வாளம்-வ, பூரம்-வ, ரசபற்பம் அல்லது கால்பலம் மூன்றையுஞ் சேர்த்து கல்வத்திலிட்டு ஒருபிடிசாதம்போட்டு உ-ஜாமம் அரைத்து மிளகு பிரமாணம் மாத்திரைசெய்து நிழலுலர்த்தி யிராபோஜனமான பின கொஞ்சமசாதத்தில் க-அல்லது உ மாத்திரைவைத்து மிழுங்கவும் மூன்றாவதுஜாமத்தில் சுகமாய்பேதியாகும் ரூப்புசாதம் கத்திரிபிஞ்சு முருங்கைபிஞ்சு சேர்க்கவும்.

சஞ்சீவி மாத்திரை.

இருவி நாபி தாரம் சூதம் கெந்தி வெங்காரம் சுக்கு தான்றிக்கா வருத்தமிளகு திப்பிலி வகைக்கு களஞ்சி க வாளம்-டு களஞ்சியிவைகளை சுத்திசெய்து கையாந்தகரைசாற்றால் எ நாள் அரைத்துகுன்றிப் பிரமாணம் மாத்திரைசெய்து நிழலுலர்த்தி அருவகைமூலத்துவாய்வு விஷக்கடி குன்மம் சூலைப்பிரமியம் மலகட்டு யெரிகுன்மம் க்ஷயத்துக்கும் மிளகுகியாழம் சுக்குகியாழம் யிஞ்சிசுரசம் யிதுகளில் அனுபானததில் கொடுக்கவும்,

சகலசுரத்தீர்க்கும் குயினுமாத்திரை.

குயினு அவுன்ஸ் ச திப்பிலி ச மிளகு வருத்தது ச சித்திரத்தை உ அக்கிராகாரம் உ சுத்திசெய்தரத்தபாளம் உ தனித்தனி தூள்செய்து கூட்டி யிஞ்சிரசத்திலாவது வேலம்கோந்து தெளிவுசெலத்தினால் பிசைந்து கடலைப்பிரமாணம் மாத்திரைசெய்து „தேகந்திடமிருந்து உ ங டு சீதளசொரத்திற்கு தேனிலும் பித்தசுரத்திற்கு யிஞ்சிரதத்திலும் வாதசுரத்திற்கு சின்கொயினுபட்டை கியாழத்திலும் சகலசுரத்துக்கு இந்த அனுபானத்தில் கொடுக்கவும்.

பெரும்பாட்டுக்கு.

ஆனைக்கண்ணன் ஒருபிடியும் அசுர்விரோதியிளப்பிஞ்சும்
கானக்குதிரைமேல்தோலும் காலில்பிடியாய்மாட்டியதும்
தாயைக்கொன்றாள் தனிச்சாற்றில் தயங்கிக்கரைத்துகுடிப்பிராய்
மானேபொழுதும்விழியாளே வடுகும்தமிழுங்குணமாமே.

தாகமடங்க.

சுட்டரொட்டி ஜெலத்திலிட்டு அடுப்புக் கரியின்தூள் கொஞ்சம் போட்டு காச்சிகொடுக்கவும்.

புதிதான மூலநோய்க்கு.

கஞ்சாயிலை ஒருபிடி மஞ்சள்தூள் விராகனிடை உ எள்ளெண்ணெய் விராகனிடை உ இவைகளை கூட்டியரைத்து தடவவும்.

சாதம்யேற்கவும் தேகவலிவிற்தும்.

நிலவேம்பு விராகனிடை ௪ கிச்சிலிதோல் விராகனிடை க தனியா விராகனிடை ௨ சாராயம் விராகனிடை (௩௨) டீ௩ பலம் வெந்நீர் கூட்டி இரண்டுநாள்சென்று வடிகட்டி வேளைக்கி அ விராகனிடையாக இரண்டுவேளை சாப்பிடவும்.

பேதிக்கி

சந்திரமல்லி வேரென்னும் பேதிக்கிளங்கு க விராகனிடை திராட்சி உப்பு ௨ விராகனிடைகூட்டி க விராகனிடைகொடுக்கவும்

இதுவுமது.

அதிமதுரம் விராகனிடை ௩௨ திராட்சி உப்பு விராகனிடை அ கியாழம் வடித்துகொடுக்க பேதியாகும் தாகமடங்கும்.

இதுவுமது.

நிலாவிரை விராகனிடை ௪ தனியாவிராகனிடை க கியாழம் வடித்து திராட்சி உப்பு விராகனிடை ௨ கூட்டிகொடுக்கவும்.

விரைவீக்கத்திற்கு கணுநோய்களுக்கு

நொச்சி யிலையை வேகவைத்துக்கட்ட குணப்படுமாம்.

ஆரோக்கியகலிக்கம்.

தும்பைப்பூ-ന, களாப்பூ-ന, முளகுபலம்-க, மிளகைமாத்திரம் ஒன்றிரண்டாய் தட்டி இந்தமூன்றுநினுசும் (வ) படிநல்லெண்ணெயில்போட்டு ஒருபுட்டியிலூற்றி கார்க்கு அடைத்துபூமியில்-௫-செஜம் ஆழத்தில் குழிவெட்டி புதைத்து (௪௰) நாள் பொருத்தெடுத்துக்கொண்டு வெள்ளிக்கம்பினால்தொட்டு கலிக்கம்போல காலையில்தீட்டி வந்தால் சூடு கண்ணெரிச்சல் காரிகம் நீங்கிவிடும்வெகு ஆரோக்கியங்கொடுக்கும்.

நேத்தீரபேதி.

ஈணு யெருமைப்பாலில் சித்ராமணக்கு பருப்பையிழைத்துத், தீட்டினால் மறுநாள்வரையில் கண்களில் பீளைசாறும் நேத்திரங்கள் பரிசுத்தமாயிருக்கும்.

அந்திமாலைக்கி.

கிருஷ்ண துளசியிலைரசம் இரண்டுதுளியாக நேத்திரத்தில் விடவும்இப்படி மூன்றுநாளைக்கி காலையில்விட குணப்படும்.

நேத்திரசுத்திகம்பி.

காரீயத்தை திருபலாதிகியாழத்திலும் மழைநீரிலும் கரிச்சாலை ரசத்திலும் பசும்நெய்யிலும் தேனிலுந் தனித்தனியாகவுருக்கி யூற்றி (௪) அங்குலநிகளத்தில் கம்பிபோல் நீட்டிவைத்துக்கொண்டு காலையில் எழுந்தவுடனே கண்களில் தீட்டிவந்தால் நேத்திரரோகங்கள் வாராதிருக்கும்.

துர்மாமிசவளர்ச்சிக்கு.

பத்துகெஞ்சாவிரையை ஊசியில்குத்தி தீபத்தில்காட்டி கருக்கி வெண்ணெயில்குழைத்து கண்களில் தீவட்டிவரவும்.

காதுசீழுக்கு.

மஞ்ஞசீலை தாளகம் செங்கொட்டை வகைக்கி விராகனிடை-க வாங்கி தூளாகயிடித்து மூன்றுபலம் நல்லெண்ணெயில் போட்டு வெள்ளாட்டுநீர் ஆழாக்குவிட்டு பதமாய்க்காச்சி வைத்துக்கொண்டு காதுக்கு மூன்றுவேளைவிட தீரும்.

இதுவுமது.

வில்வப்பழஞ்சதையை எள்ளெண்ணெயில்போட்டு வேகவைத்து காதில் விடதீரும்.

காதுசீழ்குத்தலுக்கு.

பருத்தி யிளங்காயும் யெருக்கன்யிளங்காயும் வெதுப்பி சார்பிழிந்து காதில்விடவும்.

காதுசீழ்வேதனைக்கி.

இந்துப்பு சுக்கு யெண்ணெயில்விட்டு காச்சி காதில்விடவும் தீரும்அல்லது.

பெருங்காயம் முள்ளிவேர் முருங்கைவேர் யிலைக்கள்ளியிலை சமனாயெடுத்தறைத்து நல்லெண்ணெயில் காச்சி காதில்விடவும் அல்லது

வெள்ளைப்பூண்டு முருங்கைவேர்பட்டை யெருக்கம்பூ கள்ளிப்பால் வகைக்கி விராகனிடை-க, நண்டு-க, இவைகளை சிதைத்து (வ) படி வேப்பெண்ணெயில்போட்டு காச்சிவிடவும்.

காதிரைச்சலுக்கு.

தைவேளைசாறு நல்லெண்ணெயும் சமமாய்க்கூட்டி காச்சிகாதில் விடவும்.

காதில்சதைவளர்த்திசீழ்.

க-பலம் நல்லெண்ணெயில் ஒருகரப்பான் பூச்சியைபோட்டுக் காச்சிவிடவும்.

காதுபொங்குதல்சீழ்.

க-பலகாரையை அடுப்பில் நன்றாய் சுட்டுயிடித்து தூளாக்கி ஒருசிட்டிக்கை காதில்போட்டு யெலிமிச்சம்பழ ரசம் கொஞ்சம்பிழியவும்

நீர்சுருக்கிற்கு.

முள்ளங்கி கிழங்கையிடித்து சார்பிழிந்து வெள்ளைசர்க்கரை கலந்துசாப்பிடவும்.

இதுவுமது.

காசிலிவிரை வெள்ளிரிவிரை துளசிவிரை அரசிலிஊதுவிளாக் பிசினி வால்மிளகு வகைக்கி (௨) பலம் யெடுத்து சூரணமாக்கி சம யிடை பனங்கற்கண்டு சேர்த்து ஆழாக்கு பசும்பாலில்கலந்து காலே யில்சாப்பிட நீர்சுருக்கு வெள்ளையும் நீங்கும்.

நீரடைப்பிற்கு.

வால்மிளகு விராகனிடை-க௨, யிடித்து வஸ்திரகாயம்செய்து தண்ணீர்பலம் (ய) ல் கரைத்து ஒருநாளைக்கி (ச) திரம் கொடுக்கவும்.

ஆசனகடுப்பிற்கு.

கால்படி பசும்பாலில் (ங) எலுமிச்சம்பழம் பிழிந்து சிறுகுச்கி யினல் கடைவதுபோல் சிலுப்பிதெளியவைத்தால் மேலேதெளிவாக ஜெலம்நிற்கும் அதை யிறுத்துக்குடித்தால் உடனே ஆசனக்களிப்பு நிற்கும்.

கோநக்கிற்கு.

லிங்கம் பூரம் முதார்சிங்கு படிகாரம் படிகாரத்தைமாத்திரம் நெருப்பிலிட்டு பொங்கவைத்து நன்ருய் பூர்த்தபின்யெடுத்து (ச) தினுசும் ஒரிடையாய்நிறுத்து மைபோல்தூளாக்கி கொஞ்சம் வெண் ணெயிட்டு மெழுகுபோல் குழைத்து டப்பியில் வைத்துக்கொண்டு லிங்கத்தின் மேல்வரும் மேகரிணத்திற்கும் சுவர்லெட்டு நீரினல்கழு விதுடைத்துவிட்டு யிந்தமுலாமைத்தடவ மூன்றுவேளையில் உலரும்.

ஆராதரிணங்களுக்கு களிம்பு.

துருசு விராகனிடை-ரு, முதார்சிங்கு விராகனிடை-க௨, மொ ழுக்கு விராகனிடை-ய௨, வெள்ளைகுங்கிலியம் விராகனிடை-கூ, தலை மண்டையோடு க, நல்லெண்ணை பலம்-ரு

ஒரு பெருஞ்சட்டியில் எண்ணையைவூற்றி மெழுகைப்போட்டு காச்சி உருகினவுடன் மற்றமருந்துகளை பொடித்து தூள்செய்துபோ ட்டுகாச்சி ஒருபெருஞ் சட்டியில் தண்ணீர்விட்டு அதில்காச்சியமருந் தை சாய்த்து கையால்பிசைந்தால் வெண்ணைப்போல்வரும் அதையெ டுத்துக்கொண்டு சீலையில்தடவி கொருக்கு குழிப்புண் மேகரிணம் இதுகட்குபோட மூன்றுவேளையில் தீரும்.

மேகநூட்டுக்குசாந்தி.

துத்தியிலையை கியாழம் வைத்திருந்து பாலுஞ்சர்க்கரையுங்கல ந்து சாப்பிட்டுவரவும் சாந்தமாயிருக்கும்.

நீர்கடுப்பிற்கு.

துத்திவோபலம் (ங) திராட்சிபலம் (க௨) நல்லஜெலத்தில் கியா ழமிட்டு சாப்பிட்டுவரவும்.

மலச்சிக்கலுக்கு.

துத்தியிலை சிறுபயறு வெங்காயம் சமமாய்ச்சேர்த்து சமைத்துச் சாப்பிட குணமாகும்.

மலம்உதைய.

சரக்கொண்ணைப்பூ புளி சக்கரை உப்புமிளகாய் கூட்டி துவையல் செய்து சாப்பிடமலம் உதயமாகும்.

வயருகடுப்பிற்கு.

ஆலம்விழுதை எருமைத்தயிரி லரைத்து எலுமிச்சம்பழ ரசம் ஒருபலங்கூட்டி பிசைந்து சாப்பிடரும்.

வாய்வேக்காட்டுக்கு.

மருதனி யிலையை கொழும்லைத்திருத்து கொப்பளிக்கநீங்கும்

வெள்ளைக்கி.

லவுங்கப்பட்டை ஏலரிசி ஜாதிக்கா ஜாபத்திரி வெள்ளைமிளகு வகைக்கி விராகனிடை அரை பூரம் விராகனிடை-க, விளக்கெண்ணை பத்துபலத்தில் அரைக்துப்போட்டு காச்சி வேலைக்கி ஒருகரண்டி விதம் ஏழுநாள் சாப்பிடவும்.

தீராதவெள்ளைக்கு.

வெள்ளை குங்கிலியம்பொடிசெய்து அத்துசெலத்தில்போட்டு கொதிக்கவைத்து யெடுத்து இப்படி ஏழுதருகி கொதிக்கவைத்தெடுத்து அந்தயிடைக்கி இரண்டிடை சீனைகற்கண்டு தூள்சேர்த்து அந்தி சந்தி திருகடி பிரமாணம் கொடுக்கவும் இச்சாபத்தியம்.

புதுவெள்ளைக்கு.

பழம்பாசியிலையையும் சீரகமும் அரைத்து எருமை தயிரிற்கலந்து (ந) நாள் கொடுக்கவும் இச்சாபத்தியம்.

இதுவும்வெள்ளைக்கு.

பச்சைமுளகாயிலை ஒருபிடியெடுத்து (கூ) மிளகு யெண்ணிவைத்து அரைத்து தயிரில்கலந்து காலையில் (ந) நாள் கொடுக்கவும் இச்சாபத்தியம்.

இதுவுமது.

பீச்சங்கன்யிலை கீழானெல்லியிலைபழம் பாசியிலை மூன்றும் சமயிடையாய்சேர்த்து அரைத்து எலுமிச்சங்காயளவு எடுத்து அத்துடன் பொங்கவைத்து படிகாரத்தூள் திருகடிபிரமாணம் சேர்த்து தயிரில் கலந்து காலையில் சாப்பிடவும் கடும்பத்தியம் இப்படி மூன்றுநாள் சாப்பிட்டு மருபத்தியம் (ரு) நாள் ஆனபிறகும் ஒமம் தெய்த்து தலை முழுகவும்.

இரந்தவெள்ளைக்கி.

கெச்சக்காயிலை ரசம்பலம் (௧) தயிரிற்கலந்துகொடுக்கவும் ஒருபலம் சிறுவெங்கம்பட்டையை கொழும்வைத்து அந்தியில்கொடுக்கவும் கடும்பத்தியம் இப்படி (ஈ) நாள் கொடுக்கவும்.

கைகால் குடைச்சலுக்கு.

பூமிசர்க்கரைக் கிழங்கை நல்லஜெலத்தி லரைத்து பூசிவரவும்

மேகந்திர.

சிந்திலுப்பு மூங்கிலுப்பு ஏலக்கா கற்கண்டு கூட்டி அரைத்து சுண்டக்காயபிரமாணம்கொடுக்கவும்

வெட்டுகாயத்தின் உதிரபெருக்கு நிற்க.

மாசிக்காய்களைசுட்டு அதின்சாம்பல்களை தளமாய்வைத்தழுத்த உதிரப்பெருக்கு நிற்கும்.

வெட்டுகாயம் அடிகள் ரணங்களுக்கு.

பேன்கொட்டை (க) ரசகற்பூரம் (௩) ஏலரிசி (வ) இடைகளாக நிறுத்துவாங்கி தேங்காயெண்ணெயிலரைத்துகலக்கி வெய்யலில்வைத்தெடுத்துதடவி சீலைபோடவும் ஈயெறும்புமுய்க்காது வாசனையிருக்கும்.

சொறிசிரங்கிற்கு.

சுத்திசெய்த கெந்தகம் பலம் வீசம் ரசப்வீசம் நீரடிமுத்துவீசம் பலம் இம்மூன்றும் ஊமத்தங்காயக்கிரி உள்ளேவைத்து (ரூ) வரட்டியில் புடம்வைத்தெடுத்து அந்தகாயுடன் எருமைவெண்ணெய் வைத்தரைத்து காலையில் பழையது சாப்பிட்டபிறகு திரேகத்தில் பூசிக்கொண்டு (உ) மணிக்கு பிறுப்பைபுண்ணாக்கைசுட்டு அரைத்துகுளிக்கவும் ஒருநாளையில் தீரும்.

சகலபடைகளுக்கும்.

ரோஜனம்பலம் (க௩) குழாகெந்தகபலம் (௩)வெண்காரம் பலம்-௯, சீனாகற்கண்டுபலம் அரைக்கால் இவைகளைவெள்ளாட்டுப்பாலிலரைத்து பில்லைதட்டி வைத்துக்கொள்ளவும் எவ்விதபடைகளுக்கும் நல்லஜெலத்திலிழைத்து தடவ உதிரும் பிறகு எண்ணெய்சாப்பிட்டால்தான் உள்வியாதிகள் அரும்.

இரப்பு இருமலுக்கு.

இஞ்சிச்சார் ஈரவெங்காயச்சார் எலுமிச்சம்பழச்சார்யிவைமூன்றும் சமனாகச்சேர்த்து மூன்றுநாட்கொடுக்க தீரும் யிச்சாபத்தியம்.

கோழையிருமலுக்கு.

கோழையிருமலுடன் கபங்கட்டியிருந்தால்-ரு, பலந்தேனைக்காய்ச்சி சுடுகையில்தாளி மிளகுதூள் தோலா-க,பொரித்தவெண்காரம் தோலா-க, இதுகளைகலக்கி வேளைக்கி-க, தோலாவீதம் கொடுக்கத்தீரும்.

புகையிருமலுக்கு.

சுக்கு திப்பிலி மிளகு மூன்றும் சமபிடையாயெடுத்து மைபோலரைத்து மெல்லிசிலையில் வஸ்திரகாயஞ்செய்து அந்தயிடைக்கிவெள்ளைசர்க்கரையில் யிரண்டாந்தரமாகிய பூருசர்க்கரை சேர்த்து புட்டியில்வைத்துக்கொண்டு வேண்டியபோது சிருகடிபிரமாணங் எடுத்து பசும்நெய்யில் குழைத்துசாப்பிட மூன்றுவேளையில் தீரும்.

மார்பைத்திற்கு.

நரிவெங்காயம் காலேவிசவிராகனிடை சுக்குதூள்-க-விராகனிடை சப்பு-க-விராகனிடை கபநாயகம் அரையே அரிக்கால் விராகனிடை இதை கற்கண்டுபாகில் சேர்த்தரைத்து உ-குன்றியிடை மாத்திரைசெய்து-ரு-மாத்திரைவரையில் கொடுக்கலாம்.

இருமலுக்குவாயில் அடக்கமருந்து.

அதிமதுரம் பொரித்தவெண்காரம் வெள்ளைமிளகு வகைக்கிதொலாம்-க-கல்வத்திலிட்டு கத்தாழை சோர்விட்டரைத்து மிளகுபிரமாணம் மாத்திரைசெய்து நிழலிலுலர்த்தி வாயில்-உ-மாத்திரை அடக்கி உமிநீர்முழுங்கவும்.

இரைப்புவியாதிக்கி.

ஊமத்தன்வேர் நிழலிலுலர்த்தி புகைபிடிக்க மார்பின்னுரையையறுக்கும்.

இரத்தங்கட்டிய வீக்கத்திற்கு.

வேப்பிலையை யரைத்து சட்டியில் கிளரிக்கட்டவும்.

சிறுவ-வயிற்றுப்பூச்சிக்கு.

பப்பாய்க்காய்ப்பால் விராகனிடை - க - முதல்-ந-விராகனிடை வரையில் வெந்நீர் அல்லது பசும்பாலில்கொடுத்து-ங-மணி நேரம் பொருத்து ஆமணக்கெண்ணெய் ஒருகரண்டிகொடுக்கவும்.

குழந்தைகள் வயிற்றுப்பூச்சிவிழ.

புரசம்விரையை அரைத்து பால் நெய் சர்க்கரை சேர்த்து லேக்கியமாய்க்கிளரி களற்சிக்காய்வீதங் கொடுக்கவும்.

பெரியவர்களுக்கு வயிற்றுப்பூச்சிவிழ.

நெல்லில் வேகித்தெடுத்த தெங்காயுடன் ஏலக்காயரிசிபலம்-க தோல்நீங்கிய புரசம்விரை பலம்-க-இரண்டுங்கூட்டியரைத்து கழற்ச்காய்ப்பிரமாணம் எடுத்து சர்க்கரையில்வைத்துசாப்பிட கிருமிகள் விழும்.

இதுவுமது.வயற்றுக்கிரிமிவிழ

வாளப்பருப்பு சாரைப்பருப்பு கஸ்தூரிமஞ்சள் பாதம்பருப்பு வகைக்கி ஒருபலங் கூட்டிஅரைத்து துணியில்முடிந்து ஜெலத்தின் மீது தொலாந்திரம் கட்டியெரித்து அதில்வரும் எண்ணெயைப்பிழிந்து-க, துளி அல்லது-உ, துளிகள் கொஞ்சம் சர்க்கரையில்விட்டுகொடுக்க பேதியுடன் நாக்குப்பூச்சிகள் விழும்,

காக்கைவலிக்கும் விக்கலுக்கும்,

கற்பூரம்குன்றி(க)பெருங்காயம்குன்றி(உ)சாராயமதுளி கூ வேலன்கோந்துயிளகில் அரைத்து(ஙய)மாத்திரைசெய்து நாளைக்கொருதிரம் ங மாத்திரை கொடுக்கவும்.

வாய்வுயிடுப்புவலிக்கு கற்பூரத்தை சாராயத்திலரைத்து தேய்க்கவும்.

மகை-வதுகண்டா அவிழ்தபாகம் முற்றிற்று.

கடவுள் துணை.

பதினெண்சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய

வையித்திய திரவுகோல்.

பனிரெண்டாம்பாகம் சுத்திகட்டு முறைகள்.

விநாயகர் துதி-கவி.

கலிவிருத்தம்.

பத்தியாகபலபல மரிந்திற்கும்
சுத்திபாகமும் சொல்லிடப்புவிதனில்
அத்தனார்சிவ னருளியபாலகன்
சித்திவிநாயகன் சேவடிபோற்றுவாம்.

நான்முகவிருத்தம்.

ரசச்சுத்தி.

சூதத்தைக்கொண்டுவந்து சூக்ஷமா அருகன்பாலில்
போதவேயொருநாள்வூர புகழ்செங்கத்தாள்கொட்டையோடு
தீதிலாசக்கரையோடு மிதுக்களிலரைத்தெடுக்க
ஆதியாம்ரசத்தின்சுத்தி யாகிடும்கண்டிடீரே.

சூதத்தை அருக்கன்பாலில் ஒருநாள்ஊரி செங்கத்தாள் கொட்டை சற்கரையிதுகளில் அரைத்தெடுக்கவும் சுத்தியாகும்.

பூரசுத்தி.

பூரத்தின்சுத்திதன்னை புகலவேபரிந்துகொள்வீர்
சீருளமிளகுவெத்திலை சேர்த்ததில்கியாழமிட்டு
கோரியேமூன்றுநாளுங் கிளிகட்டியூரவைத்து
பாறதில்யெடுக்கசுத்தி பலித்திடும்பரிட்சைபாரே.

பூரத்தை வெற்றிலை மிளகு கியாழமிட்டு அதில்கிளிக்கட்டி மூன்றுநாள் ஊரவைத்து யெடுத்துக்கொள்ளவும் சுத்தியாகும்.

கல்நார்சுத்தி.

கல்நாரிதன்னைவாங்கி கழுதைமூத்திரத்தில்மீகளு
சொல்லியமூன்றுநாழி சுகமுடனூரவைத்து
வல்லமைகழிவிநீயும் வகையுடனெடுத்துக்கொள்ளு
பல்லுளோர்மகிழுஞ்சுத்தி பரிட்சைதான்பார்ப்பீர்தானே.

கல்நாரை கழுதைமூத்திரத்தில் மூன்றுநாழிகை ஊரினபின் கழுவி யெடுத்துக்கொள்ளவும் சுத்தியாகும்.

படிகாரம்சுத்தி.

படிகாரம்கொண்டுவந்து பதமதாய்கிளிதான்கட்டி
வடிவாகயெருமைசாணில் வைத்ததையெடுத்துக்கொள்ளு
சிடணதுயில்லாவிட்டால் சிறுநீரில்மூன்றுநாளும்
திடமுடனூரவைத்து மறுந்தினையெடுத்துக்கொள்ளே.

எருமைசாணத்தில் கிளிக்கட்டிவைத்து யெடுத்துக்கொள்ளவும் அல்லதுசிறுநீரில் மூன்றுநாள்ஊரவைத்து யெடுத்துக்கொள்ளவும்.

லிங்கசுத்தி.

லிங்கம்ஒருகட்டியாகவாங்கி தேனில்ஒருநாள் ஊரிமுலைப்பாலில் ஒருநாள்ஊரி மறுநாள்யெடுத்து யெலுமிச்சம்பழரசம் குப்பைமேனி ரசம்முலைப்பாலும் சமமாய்கலந்துக்கொண்டு அடுப்பின்மேல் சட்டிவைத்து அதில்மேற்படி லிங்கத்தைவைத்து புகையாமல் சுருக்குக் கொடுக்கவும் சுத்தியாம் இதற்கு லிங்கக்கட்டென்றும் பெயர்.

வீரசுத்தி.

வீரத்தை ஒருயிளநீரில் (கவ) விறுகனிடை கற்பூரம்போட்டு கலக்கி சட்டியில்ஊத்தி அடுப்பிலேத்த மேற்படிவீரத்தை தொலாந்திரமாகக்கட்டி யெரித்து யெடுத்துக்கொள்ளவும்.

முதார்சிங்குசுத்தி.

முதார்சிங்கியை வெள்ளாட்டு கோமியத்தில் ஒருநாழிகை கொதிக்கவைத்து யெடுத்துக்கொள்ளவும்.

கெவுரிசுத்தி.

வெள்ளைகெவுரியை கொண்டுவந்து பசும்பால் அல்லது சாணிப்பால சுண்ணும்புநீர் மிளகுகியாழம் இன்னுன்கில் யெதிலாவது தொலாந்திரயாகக்கட்டி யெரித்தெடுத்துக்கொள்ளவும் பிரகுபன்றிப்பாலில் கிளிக்கட்டிஅவித்து யெடுத்துக்கொள்ளவும் சுத்தியாச்சு.

மனோசிலைசுத்தி.

மனோசிலையை காடியில் கிளிக்கட்டி யெடுத்துக்கொள்ளவும் வெள்ளாட்டுமூத்திரத்தில் தொலாந்திரம்கட்டி யெரித்தெடுத்துக் கொள்ளசுத்தியாகும்.

வங்கசுத்தி.

வங்கத்தை யிலுப்பயெண்ணையிலாகிலும் தேங்காயெண்ணையிலாகிலும் நவாச்சாரத்தூள்தூவி அதில் (எ) திரம் உரிக்கிசாய்க்கவும் அல்லது மோர்காடிகோமியம் பழரசம் இதுகளிலும் உரிக்கிசாய்க்கலாம் இப்படியேநாகத்தையும் சுத்திசெய்துக்கொள்ளவும்.

கருவங்கசுத்தி.

கருவங்கத்தை வெள்ளாட்டுமூத்திரத்தில் பிரண்டைவேர் அரைத்துப்போட்டு நல்லெண்ணெவிட்டு கலக்கிக்கொண்டு அதில்பத்துதரம் உருக்கிசாய்க்கவும் சுத்தியாகும்.

நாகசுத்தி.

நாகத்தை ஆட்டுநெய்கொண்டுவந்துஉருக்கி சிறுநீர்பழரசம் கூட்டி-சாரம்கல்சுன்னமிட்டு கலக்கிவைத்துக்கொண்டு அதில்நாகத்தைபத்துதிரம்உருக்கி சாய்க்கவும் சுத்தியாகும்.

சிலாசத்துசுத்தி.

சிலாசத்தை பழரசத்தில்போட்டு கொதிப்பித்துயெடுத்து எருக்கன்பாலில் மூன்றுநாழிகை ஊரியபின்கழுவியெடுத்துக்கொள்ளவும் அல்லது அல்லிப்பூரசத்தில் ஊரியும்யெடுக்கலாம் ஆவின்பாலில் தொலாந்திரம்கட்டிஎரித்தும் எடுத்துக்கொள்ளலாம்.

கெருடப்பச்சைசுத்தி.

கெருடப்பச்சையை பபருபெல்செய்து கிளிக்கட்டி குமரிச்சாற்றில் (௩௰) நாழிகைஊரி யெடுத்துக்கொள்ளலாகும்.

சீனம்சுத்தி.

பசும்பாலில்மூன்றுஜாமம்ஊரிஎடுத்துக்கொள்ளவும்சத்தியாகும்.

வெண்காரம்சுத்தி.

வெண்காரம் பொரித்துக்கொள்ளவேணுமானல் காடியிலாவது பழரசத்திலாவது அரைத்து பில்லேதட்டி உலர்த்தி யெடுத்துக்கொள்ளவும்.

முடிநாரம்சுத்தி.

பனங்கள்ளு படிநாலில் கிளிக்கட்டி யெரித்து யெடுத்துக்கொள்ளவும்.

பால்துத்தம்சுத்தி.

கிளிக்கட்டி சிறுவர்கள் மூத்திரத்தில் ஏழுநாள்ஊரினபின் பசும்பாலில் இரண்டுஜாமம்ஊரவைத்து எடுத்துக்கொள்ளவும்.

துரிசிசுத்தி.

தயிரினலரைத்து அடைதட்டி ஓடுகாயவைத்து அதில்பிரட்டி எடுத்துக்கொள்ளவும் அல்லதுதயிரிலொருசாமம் ஊரியெடுக்கவும்.

மடல்துத்தம்சுத்தி.

வெண்ணெய் அல்லது தயிர்கற்றாழைசாற்றில் ஊரவைத்து எடுத்துக்கொள்ளவும்.

பச்சைதுருசிசுத்தி.

பசுங்கோமியத்தில் எரித்துக்கழுவி உலர்த்தி எடுத்துக் கொள்ளவும்.

பவழப்புத்துசுத்தி.

பசும்மோரில் கிளிக்கட்டிவிட்டு நாலுநாழியெரித்து எடுத்துக் கொள்ளவும்.

அஞ்சனக்கல்சுத்தி.

புளியாரைரசத்தில் ஒருநாள் ஊரியெடுத்துக்கொள்ளவும்.

கல்மதம்சுத்தி.

கல்மதத்தை சிறுநீரில்கழுவி யெடுத்துக்கொள்ளவும்.

நாபிசுத்தி.

பருத்திப்பிலை ரசத்திலூரி முத்திலைக்குள்வைத்துசுத்தி கும்பியில் சொரிகி ஒருநாழிபொருத்தெடுத்து சீந்தில்கியாழத்தில் தொலாந்திரங்கட்டிஎரித்து பிறகுஎருக்கன்பாலில் சற்றுஊரி கோமியத்தில் கழுகி யெடுத்துக்கொள்ளவும்.

நேர்வாளசுத்தி.

எருமை சாணத்தில் காடிவிட்டுகலந்து அதில்வாளத்தைப் போட்டு கொதிக்கவைத்தெடுத்து நஞ்சுநீக்கி அதாவது அந்தபருப்பைபிளந்து முளைநீக்கி காடிமோர் பழரசம்கலந்து அதில்கொதிக்கவைத்து எடுத்துக்கொள்ளவும்.

தாளகசுத்தி.

தாளகத்தை சிறுதுண்டாகச்செய்து சிருமொங்கைக் குடுவியிலிட்டு மேலேமூடும்ஓட்டில் மூணுதுவாரம்செய்து கரிநெருப்பின் மீது வைத்துவிசுருகையில் முதல்கருப்புபுகைவந்தபிரகு செகப்புபுகைவருகாலத்தில் யெடுத்துக்கொள்ளவும்.

தாளகசுத்தி.

தாளகத்தை சுண்ணாம்புக்குள்வைத்து கழுதைமூத்திரம் விட்டு யெழுதிரம்தாளித்து யெடுத்து சுன்னனீர்கொள்ளுக்கியாழம் தயிர்பூசினிக்காய் நீர்காடி அகத்திக்கீரைவிரை தயிலம் இவைகள் கூட்டி இரண்டுஜாமம் சுருக்குக்கொடுக்கவும் கரந்தைசாற்றில் இரண்டுஜாமம்சுருக்குக் கொடுத்துயெடுத்து சத்திச்சாரணைவேர் குக்கில்இதை முருங்கிலைரசத்தால்ரைத்து கவசம்செய்து லகுபுடமிடமிகுந்தசுத்தியாகும் பிரகுசகல அவிழ்தத்திற்கும் உபயோகப்படுத்தலாகும்.

---

* பூசினிப்பழத்தை மேமேலகீரி (ந.) விராகநிடையிந்துப்புபோட்டு அடியில்யெழுத்தாணியால் துவாரம்செய்து மேலேதூக்கிக்கட்டி. அடியில்பீங்கான்வைத்து யிரங்கும் நீர் யெடுத்துக்கொள்ளவும்

பாஷாண சுத்தி.

அறுபத்தினாலு பாஷாணங்கள் சுத்திசெய்யவேண்டில் குப்பை மேனிரசங் கற்றாழம்பால் சிறுநீர் பழரசம் செம்பருத்தி வெத்திலை ரசம் வகைக்குபடி (க) இவைகளை பாண்டத்திலிட்டு அதில்பாரையுப்பு வெடிகாரம் படிகாரம் நவாச்சாரம் வகைக்குபலம் (வ) தூள்செய்து கலந்து கிளிக்கட்டி யிட்டு நிழலாக காற்றில்லாவிடத்தில் பதினைந்து நாள் வைத்தெடுத்து காடியில் ஊரவைத்து எடுத்துக்கொள்ளவும்.

சூத பாஷாணமும் ஏகசுத்தி.

மேனிரசம் தக்காளிரசம் ஊமத்தன் ரசம் பழரசம் சிறுநீர் காடி சமனாகலந்து இதில் உப்பு சுன்னம் வெடியுப்பு நவாச்சாரம் சீனம் வகைக்கு பலம் (க) தூள்செய்து கலந்து சரக்குகளை கிளியாய்கட்டி மண்டலம்யிட்டு யெடுத்து உணர்த்திக்கொள்ள சுத்தியாகும்.

இரும்புசுத்தி.

இரும்புப்பொடியை ஒருநாள் பழரசத்தில் ஊரவைத்தெடுத்து மறுநாள் யெள்ளெண்ணெயில் ஊரவைத்தெடுத்து அயச்சட்டியில்போட்டு வருத்து காடியில்கழுவி வேலம்பட்டை கியாழத்தில் கொதிப்பிட்டு திரும்பியுங்காடியில்கழுவு யெடுத்துக்கொள்ளவும்.

காந்தசுத்தி.

காந்தத்தை பழரசத்திலும் காடியிலும் மோரிலும் கொதிக்கவைத்தெடுத்து பிறகு சாணிநீரில் ஏழுதிரம் காச்சி காச்சி துவைக்கவும் சுத்தியாகும்.

அயத்தோட்டிசுத்தி.

பசும்பாலில் நாலுஜாமம் நெய் தேன் இவைகளில் எட்டுநாள் ஊரி யெடுத்துக்கொள்ளவும்.

தோட்டிசுத்தி.

நாலும் முலைப்பால் வெள்ளாட்டுப்பாலிலும் தனித்தனி பத்துநாழிகை ஊரவைத்தெடுத்துக்கொள்ளவும்.

தோட்டிபாஷாணம்.

துண்டு துண்டாய்நரிக்கி கிளிக்கட்டி நெல்லில் அவித்து யெடுத்துக்கொள்ளவும்.

பொன்னிமிளை.

பொன்னிமிளையை மூணுநாள் காடியில் ஊரியபின் கிஷ்ணு அபிரேக்கு தூள் யொருபடியெடுத்து மூணுபடிகோமியத்தில் வேகவைத்து எடுத்து உலர்த்தி நெல்லுமசேர்த்து கிளிக்கட்டி காடியில் தோய்த்து யிரங்குந்தெளுதை நீக்கி உணர்த்திக்கொள்ளவும்.

சகஸ்திரபேதிசுத்தி.

நாரத்தங்காரசத்தில் ஊரவைத்து எடுத்துக்கொள்ளவும்.

செங்கோட்டைசுத்தி:

ஜெலத்தில் ஊரவைத்து மருநாள் மூக்கை வெட்டி நீக்கியெடுத்துக்கொள்ளவும்.

சிவதைசுத்தி.

பசும்பாலில் அவித்துயெடுத்து உணர்த்திவைக்கவும்.

அழக்கிரா.

ஆவின்பாலில் அவித்து யெடுத்துக்கொள்ளவும்.

சுக்குசுத்தி.

மேல்தோல்சீவி சுண்ணாம்புபூசி உலர்த்தியெடுத்துக்கொள்ளவும்.

மிளகுசுத்தி.

புளித்தமோரில் மூன்றுநாளூரி வருத்துயெடுத்துக்கொள்ளவும்.

திப்பிலிசுத்தி.

திப்பிலியை பழரசத்தில்ஊரி யெடுக்கவும்.

ஓமம்சுத்தி.

ஓமத்தை சுண்ணாம்புதெளிவுநீரில் ஒருஜாமம் ஊரவைத்து உலர்த்தியெடுக்கவும்.

இருசீரகசுத்தி.

சீரகம் கருஞ்சீரகம் இதுகளை சுண்ணாம்பு நீரில் ஏழுஜாவம்ஊரி உலத்தி எடுத்துக்கொள்ளவும்.

ஊமத்தன்விரைசுத்தி.

ஊமத்தன்விரையை ஒருஜாமம் ஜலத்தில் ஊரவைத்துயெடுக்கவும்.

எட்டிகொட்டைசுத்தி.

எட்டிக்கொட்டையை நெல்லில் அவித்து சிறுகீரைரசத்தில் ஒருஜாமம் ஊரியபின் தேத்தாங்கொட்டை ரசத்தில் வேவித்து எடுத்துக்கொள்ளவும்.

கோம்பரக்குசுத்தி.

நல்லஜெலத்தில்போட்டு அடுப்பில்வைத்து யெரித்தெடுக்கவும் இப்படி மூன்றுதபா எரித்தெடுக்கவும்.

மாசிக்காசுத்தி.

பசும்நெய்யில் வருத்து வெடித்தபிறகு எடுத்துக்கொள்ளவும்.

எண்ணைசுத்தி.

சகலவித யெண்ணைகளும் நல்லஜெலத்தில்விட்டு நாலுநாழிகை சென்று எடுத்துக்கொள்ளவும்.

அழுக்குராம்வேர்சுத்தி.

ஆவின்பாலில் கொஞ்சம் அவித்து எடுத்துக்கொள்ளவும்.

சுத்தியின் முறைகள் முற்றிற்று.

உ

சிவமயம்.

கட்டுவகைமுறைகள்.

பூரக்கட்டு.

உன்னிதமாம்சீனவின் பூரந்தன்னை
ஒருபலமேவாங்கியதை முலையின்பாலில்
தன்மையுடன்மூன்றுநா ளூறவைத்து
தானுலர்த்திசட்டிதனி லிதனையிட்டு
அன்னலனை துளசிரச மதிலேலூற்றி
அடுப்பேற்றி சிருதணலா யதனைக்காச்சி
நன்னயமாய்ரசஞ்சுண்ட யிரைக்கிப்பாறு
நவிறுமொருபூரக்கட் டாகும்பாரே.

(வ-ம்.) சீனபூரம் ஒருபலம்வாங்கி முலைப்பாலில் மூன்றுநாளூர வைத்தெடுத்து உலர்த்தி ஒருசட்டியில் துளசி ரசம்பிழிந்து அதில் பூரத்தைவைத்து அடுப்பேற்றி சிறுதீயாக அந்தரசஞ் சுண்டுகிறவரையிலும் பொரித்தெடுத்தால் அதுகட்டும்.

ரசகற்பூரக்கட்டு.

நாலுநல்லவிராகனிடை ரசகர்ப்பூரம்
நப்பியதையெடுத்துநண்டு ரசத்தில்போட்டு
சாலவேரெண்டுஜாமம் சுருக்கேகொடுக்க
சட்டமுடன்தாணிறைக்கிச் சொல்லக்கேளு
மேலவேமுசுமுசுக்கை சாருதன்னில்
மைந்தனேரெண்டுஜாமம் சுருக்கொடுக்க
கோலமுளரசமதுவுங் கட்டுமப்பா
குவலயத்தில்சூக்ஷமதை திரந்திட்டேனே.

(வ-ம்.) நாலுவிராகனிடைய ரசசற்பூரத்திற்கு முலைப்பாலில் நண்டைபிடித்து சாறுபிழிந்து இரண்டுஜாமஞ் சுருக்குகொடுத்து பிறகு முசுமுசுக்கை சாறுபிழிந்து இரண்டுஜாமஞ் சுருக்கு கொடுக்கக்கட்டும்.

லிங்கக்கட்டு.

சீனலிங்கம் ஒருபலம்வாங்கி சேராங்கொட்டை-௫-பல மெடுத்து துண்டுதுண்டுகளாகவெட்டி ஒருசட்டியில் பாதிபோட்டு அதின் மேல் லிங்கக்கட்டியைவைத்து மற்றபாதி கொட்டையைப்போட்டு லிங்கந்தெரியாமல் மூடி அடுப்பிலேற்றி எரிக்கும்போது விளக்கைகாட்டினால் திக்கென்றெரியும் அனல் அடங்கியபிறகு லிங்கக்கட்டியை எடுத்துக்கொண்டு பிள்ளைகளுக்கு தேனில் உரைத்துக்கொடுக்கலாம் பத்தியம் புளிகூடாது அந்த லிங்கக்கட்டியில் பாதிஉடைத்து கல்வத்தில் பொடித்து வைத்துக்கொள்ளவும் இதற்குலிங்கசெந்தூரமென்று பெயராம் பலவிதசுரங்களுக்கு அரிசிபிரமாணம் தேனிற் கொடுக்கலாம்.

வன்னிகற்பமாகியலிங்கக்கட்டு.

ஒருபலம் லிங்கத்தை தேன் முலைப்பாலில் மூன்றுநாள் ஊரவைத்தெடுத்து ஒருபலம் நெல்லிக்கா கெந்தகத்தை ஆலம்பால்விட்டு நனாருய் கலக்கயிடித்து லிங்கத்திற்கு கவசஞ்செய்து உலர்த்தி சிறுகுழியில்வைத்து அதன்மீது மணல்பரப்பி மறைத்து சூடுபடும்படியாக இரண்டுவரட்டியால் புடம்போடவும் ஆரினபிறகு எடுத்து மேல்கவசமிட்ட கெந்தகத்தைநீக்கி வேரேகெந்தகம் ஒருபலங்கொண்டுவந்து முன்மாதிரியாய் பாலிலிடித்து கவசித்து குழியில்வைத்து மணல்பரப்பி ஒருவரட்டி அதிகப்படுத்தி புடம்போடவும் இப்படியே ஒவ்வொரு தடவையும் புதுகெந்தகங்கவசித்து ஒவ்வொருவரட்டி அதிகப்படுத்தி (க) தடவை புடம்போட்டெடுத்து முடிவில் முன்மாதிரியாக கவசஞ்செய்து நாலுசிலைமண்செய்து பூமியில் பத்துவரட்டியில் புடம்போட்டுடெடுத்து சகலவாய்விற்கும் சீதளஞ் சுரஞ்ஜன்னி இவைகளுக்கு தேன் இஞ்சிரசத்தில் யிழைத்துக்கொடுக்கவும்.

வீரக்கட்டு.

வேண்டியமட்டும் வீரத்தைக் கொண்டுவந்து சாம்பிராணிவிராகனிடை-௧, நெல்லிக்காகெந்தகம் விராகனிடை-௧, இரண்டுந்தூள்செய்து கரண்டியிலிட்டு அனலில்பிடிக்க உருகிவருஞ்சமயத்தில் வீரத்தை போட்டு புரட்டி எடுத்துக்கொள்ளவும் ஜன்னிவாய்வுகளைக்கேட்கும் இதுபோல லிங்கத்தையுங் கட்டிக்கொள்ளலாம்.

வேறுவகை லிங்கக்கட்டு.

ஜாதிலிங்கம்-ரு-விராகனிடை கொண்டுவந்து முலைப்பாலில் ஒருஜாமஞ் சுருக்குக்கொடுத்து எலுமிச்சம்பழரசத்தில் ஒருஜாமஞ்சுருக்கொடுத்து மணத்தக்காளி சாற்றில் ஒருஜாமஞ் சுருக்குக்கொடுத்து எடுத்துப்பார்க்க கட்டும் ஜன்னிசுரந் தலைவலி இதுகளுக்கு முலைப்பாலில் உரைத்துக்கொடுக்கலாஞ் சீதளஜலுப்பு இதுகளுக்கு தேனில் உரைத்துக்கொடுக்கவும் பத்தியம் அரைப்புளி இச்சாபத்தியம்.

வேறுவிதவீரக்கட்டு.

துருசு விராகனிடை-௧௦, படிகாரம் விராகனிடை-௧௦, இரண்டையும் தூள்செய்து அடுப்பில் ஓடுகாயவைத்து மேற்படி மேற்படி தூளை மூன்றுபங்காக்கி ஒருபங்கை ஓட்டில்தூவி எரிகிறசமயத்தில் ஒருவிராகனிடை வீரத்தைப்போட்டு புரட்டியெடுத்துக்கொள்ளவும் ஓட்டிலுள்ள சுண்டுகளை சுரண்டி யெடுத்துவிட்டு மற்ற யிரண்டுபங்கு தூளையும் இப்படியே செய்தெடுத்து மறுபடியும் விராகனிடை சூடத்தைக்கொண்டுவந்து கவசித்து கொளுத்திவிட்டால் வீரம் உருகிமணியாகும் க்ஷயம் ஜன்னி இதுகளுக்காகும்.

௧௨ - பாகமும் முற்றுப்பெற்றது.